# எதிர்ப்பும் எதிர்ப்பு இலக்கியமும்

## கலை, இலக்கியக் கட்டுரைகள்



பெருமாள் சரவணகுமார்

ஹட்டன் தமிழ்ச் சங்கம்

2010

# எதிர்ப்பும் எதிர்ப்பு இலக்கியமும்

## கலை, இலக்கியக் கட்டுரைகள்


பெருமாள் சரவணகுமார்

(தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்)



ஹட்டன் தமிழ்ச் சங்கம்

2010

தலைப்பு :

எதிர்ப்பும் எதிர்ப்பு இலக்கியமும்

கலை, இலக்கியக் கட்டுரைகள்

ஆசிரியர் :

பெருமாள் சரவணகுமார்

முதல் பதிப்பு :

டிசம்பர். 2010

நூல் வடிவமைப்பு:

ஈஸ்வரன் புத்தகாலயம், கண்டி.

வெளியீடு :
ஹட்டன் தமிழ்ச் சங்கம்

**Résistance and Resistance Literature**

(Essays on Art & Literature)

**Author**

**Perumal Sarawanakumar** [c]

Dept. of. Tamil,

University of Peradeniya.

**Email**. Sarawanan480@gmail.com

**ISBN :** 955 – 53167 – 0 – 5

**Designed by :**

**Eswaran's Book Depot & Cyber Villa, Kandy.**

**Edition :** December 201 0

**Price : Rs - 250**

# சமர்ப்பணம்

மலைமுகடுகளில் வியர்வை கொட்டி

கல்வி உலகிற்கு என்னைப் படைத்து

பண்புள்ள மனிதனாய்

ஆக்கிய

என் அன்புப்

## பெற்றோருக்கு

# பொருளடக்கம்

முன்னுரை

அணிந்துரை

நூலாசிரியர் உரை

1. எதிர்ப்பும் எதிர்ப்பு இலக்கியமும் - மலையக நாட்டார் பாடல்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு 09

2. மலையகக் கவிதை வளர்ச்சி – விரிவுபெற வேண்டிய எல்லைகள் 32

3. மலையகப் புனைவுகளில் யதார்த்தமும் அழகியலும் 43

4. ஒரு சாலையின் சரிதமாய் விரியும் கவிதை முகங்கள் 55

5. நவீன தமிழ்க் கவிதையில் தூது – மஹாகவியின தூது கவிதையை முன்னிறுத்திய பார்வை 64

6. மஹாகவியின் வீடும் வெளியும் - அகம் நோக்கி விரியும் புறம் 81

7. புலம்பெயர் இலக்கியம் - நிகழ்காலமும் எதிர்காலமும் 90

8. ஈழத்து இலக்கிய இதழியலில் ஞானம் 104

9. சாதியின்மையா? சாதிமறைப்பா ஒரு சமூகவியல் நோக்கு 118

## முன்னுரை

எமது பழைய மாணவர்களுள் கடின உழைப்பும் விடாமுயற்சியும் ஆற்றலும் அமைதியும் நிறையப் பெற்றவர்களுள் திரு. பெருமாள் சரவணகுமாரும் ஒருவர் என்பதில் மிகுந்த பெருமிதம் அடைகின்றோம். தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயின்று முதல் வகுப்பில் சித்தியடைந்து தற்பொழுது தற்காலிக விரிவுரையாளராகக் கடமையாற்றுகின்றார். அவர் விரைவில் நிரந்தர விரிவுரையாளராக வேண்டும் என்பதே எமது பேராவலாகும். திரு. பெருமாள் சரவணகுமார் நவீன இலக்கியங்களிலும் திறனாய்வுத் துறையிலும் மிகுந்த ஈடுபாடுகொண்டவர் நவீன இலக்கியங்களையும் சஞ்சிகைகளையும் தேடித்தேடிக் கருத்தூன்றிப்படிப்பவர் என்பதை இந்நூலிலுள்ள கட்டுரைகளிலும் அவதானிக்கமுடிகின்றது.

எதிர்ப்பும் எதிர்ப்பு இலக்கியமும் - மலையக நாட்டார் பாடல்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு என்னும் கட்டுரை விதந்துகூறத்தக்க ஒன்றாகும். மலையக நாட்டார் பாடல்கள் பற்றிப் பலர் சுருக்கமாகவும் விரிவாகவும் ஆராய்ந்துள்ளனர். ஆயின் இத்தகையதொரு கண்ணோட்டத்தில் வெளிவந்த ஆய்வுகள் மிக மிகக் குறைவே. கட்டுரையின் ஆரம்பம் எதிர்ப்பிலக்கியம் பற்றிய சுருக்க வரலாறாகவும் அறிமுகமாகவும் அமைந்துள்ளது. அதனைத் தொடர்ந்து பல்வேறு உபதலைப்புகளில் மலையக நாட்டார் பாடல்களில் அதிகார வர்க்கத்தினருக்கெதிரான எதிர்ப்புக்குரல் எவ்வெவ் வகையில் அமைந்துள்ளது என்பதை நுட்பமாகவும் விரிவாகவும் ஆராய்ந்துள்ளார்.

மலையகக் கவிதை வளர்ச்சி : விரிவு பெற வேண்டிய எல்லைகள் என்னும் கட்டுரையில் புனைகதை இலக்கிய வடிவத்தின் சாத்தியப்பாடுகளைக் கொண்டு விளங்கும் மலையக இலக்கியத்தில் நவீன கவிதைக்கான சாத்தியப்பாடுகள் முனைப்புப் பெறாமையையும் அதற்கான காரணங்களையும் விண்டுகாட்டியுள்ளார். மலையகப் புனைவுகளில் யதார்த்தமும் அழகியலும் என்னும் கட்டுரையில், தெளிவத்தை ஜோசப், என். எஸ்.எம் ராமையா ஆகியோரது சிறுகதைத் தொகுப்புகளை ஆதாரங்களாகக் கொண்டு, தொழிற் களமும் வாழ்வும், லயவாழ்க்கை முறையும் கதைசொல்லும் திறனும், ஆண் - பெண் உறவும் பாத்திர வார்ப்பும், கதை நிகழ் இடமும் காட்சிப்படுத்தலும் என வகைப்படுத்தி விரிவாக நோக்கியுள்ளார்.

மஹாகவியின் தூது கவிதை பற்றிய கட்டுரையில் தூது என்னும் இலக்கிய வடிவத்தை நவீனபாடு பொருளுக்கேற்ப அமைத்த பெருமையும் நகர்ப்புறம், கிராமப்புறம் ஆகிய இரண்டின் எதிர் எதிர் நிலைகளைப் புலப்படுத்துவதற்கான ஓர் உத்தியாகத் தூது மரபைக் கையாண்டமையும் மஹாகவிக்குரியது என்பதை ஆதாரங்களுடன் நிறுவியுள்ளார். இந்நூலில் இடம்பெறும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய கட்டுரையாக வீடும் வெளியும் - அகம் நோக்கி விரியும் புறம் விளங்குகின்றது. மஹாகவியின் கிராமப்புறச்சூழல், நகரப் புறச்சூழல் என்னும் இருவேறுபட்ட சூழலில் பெற்றுக்கொண்ட அனுபவங்களை எவ்வாறு கவிதைகளினூடாக வெளிப்படுத்தியுள்ளார் என்பதையும் வீடு என்னும் பகுதியில் அதிகமான கவிதைகள் பால் உணர்வு சம்பந்தப்பட்டவையாகவும் பால் உணர்வு தொர்பான பிரச்சினைகள் சமூகச்சீரழிவிற்கு வழிவகுக்குமாற்றையும் விண்டுகாட்டியுள்ளார் என்பதையும் ஆதாரங்களுடன் தெளிவுபடுத்தியுள்ளார்.

புலம்பெயர் இலக்கியம் : நிகழ்காலமும் எதிர்காலமும் என்னும் தலைப்பிலான கட்டுரையில் புலம்பெயர் இலக்கியத்தின் வரலாற்றை ஆரம்ப காலம், சமகாலம், எதிர் காலம் என வகுத்து விரிவாக நோக்கியுள்ள ஆசிரியர் இந்நியச்சூழலில் பிறந்து வாழும் மூன்றாவது தலைமுறையினரின் காலத்திலும் புலம்பெயர் இலக்கியம் வளருமா என்னும் சந்தேகத்தை எழுப்பி அவ்வாறு வளருமாயின அது அடையக்கூடிய பரிமாணங்களையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நூலில் இடம்பெறும் "ஈழத்து இலக்கிய இதழியலில் ஞானம்", "ஒரு சாலையின் சரிதமாய் விரியும் கவிதை முகங்கள்", "சாதியின்மையா? சாதிமறைப்பா" ஆகிய கட்டுரைகளில் சரவணகுமாரின் ஆய்வியல் திறனையும், விமர்சன ஆளுமையையும் அவதானிக்கமுடிகின்றது. ஈழத்து இதழியலில் ஞானம் என்ற கட்டுரை "ஞானம்" இதழின் தோற்றம் - வளர்ச்சி பற்றிய சிறந்த மதிப்பீடாக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

திரு. பெருமாள் சரவணகுமார் அவர்கள் ஒருபுறம் இளம் விரிவுரையாளராகக் கடமையாற்றிக்கொண்டு மறுபுறம் தமது முதுதத்துவமாணிப் பட்டத்திற்கான ஆய்வு முயற்சிகளிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். அவரது முயற்சிகள் வெற்றி பெறவும் அவர் உயர்வு பெறவும் எனது இதயம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்.

**பேராசிரியர் க. அருணாசலம்**

தமிழ்த்துறை,

பேராதனைப் பல்கலைக்கழகம்,

பேராதனை.

# நூலாசிரியர் உரை

*எதிர்ப்பும எதிர்ப்பு இலக்கியமும்* என்ற இந்நூல் எனது முதலாவது நூலாகும். கலை, இலக்கியங்களோடு பின்னிப்பிணைந்த எனது கல்வி நடவடிக்கையின் அறுவடையாக, நான் எழுதிய கட்டுரைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்பது கட்டுரைகள் இந்நூலில் இடம்பெறுகின்றன. இந்நூலில் இடம்பெறும் பெரும்பாலான கட்டுரைகள் நான் பல்கலைக்கழக மாணவனாக இருந்தபோது எழுதப்பட்டவை. பல்கலைக்கழக மாணவ நிலை, தமிழ்த்துறையின் உதவி விரிவுரையாளர் என்ற படிநிலை வளர்ச்சியை இக்கட்டுரைகள் காட்டும் என்று நம்புகிறேன்.

எதிர்ப்பும் எதிர்ப்பு இலக்கியமும் - மலையக நாட்டார் பாடல்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு என்ற கட்டுரை அமரர். இர. சிவலிங்கம் அவர்களின் ஞாபகார்த்தக்குழு 2007 ஆம் ஆண்டு நடதத்தியக் கருத்தரங்கில் வாசிக்கப்பட்டது. இக்கட்டுரை "இனத்துவ முரண்பாடும் மலையக மக்களும் : பல்பக்கப் பார்வை" என்ற நூலிலும் சேர்க்கப்பட்டது. இவ்வாய்வுக் கட்டுரை சமர்ப்பித்தபோதும், அதற்கு முன்னரும் பல்வேறு ஆலோசனைகளை வழங்கிய மதிப்புக்குரிய பேராசிரியர்களான எம்.ஏ.நுஃமான, க.அருணாசலம், இரா.வை. கனகரத்தினம் ஆகியோருக்கும்,

கலாநிதி வ.மகேஸ்வரன், கலாநிதி எஸ்.சந்திரபோஸ், எம். வாமதேவன், தை. தனராஜ், லெனின் மதிவானம், செ.சுதர்சன் ஆகியோருக்கும் இவ்விடத்தில் என் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூலில் இடம்பெறும் "நவீன தமிழ்க் கவிதையில் தூது மஹாகவியின் தூது கவிதையை முன்வைத்து" என்ற கட்டுரை பற்றி ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இத்தூது என்னும் கவிதை அவரது எந்தத் தொகுப்பு நூல்களிலும் இடம்பெறவில்லை. அது பற்றிய ஓர் அறிமுகக் கட்டுரையாகவே இது அமைகின்றது. ஆகையினால், அக்கவிதையின் முழுவடிவமும் வாசகர்களுக்காகக் கட்டுரையின் இறுதியில் மீள்பிரசுரமாக வழங்கப்பட்டுள்ளது. மஹாகவியின் படத்தோடு அக்கவிதை 1947 ஆம் ஆண்டு பிரசுரமாகி இருந்தது.

புலம்பெயர் இலக்கியம் : நிகழ்காலமும் எதிர்காலமும என்ற கட்டுரை, பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கம் 2006 ஆம் ஆண்டு நடத்திய கட்டுரைப் போட்டிக்காக எழுதப்பட்டது. இன்றைய நிலையில் புலம்பெயர் இலக்கிய வகைமாதிரி பல மாற்றங்களையும், வளர்ச்சி நிலைகளையும் பெற்றுவருகின்றது. ஆயினும், எனது கட்டுரை எவ்வகை மாற்றமும் செய்யப்படாமல் வெளிவருகின்றது. எனினும், இக்கட்டுரை புலம்பெயர் இலக்கியத்தின் இயங்குநிலைகளைக் கோடிட்டுக்காட்டும் என நம்புகிறேன்.

இத்தொகுப்பு நூலில் இடம்பெறும் மலையகக் கவிதை வளர்ச்சி - விரிவுபெறவேண்டிய எல்லைகள், மலையகப் புனைவுகளில் யதார்த்தமும் அழகியலும், சி.பன்னீர்ச்செல்வத்தின் ஒரு சாலையின் சரிதமாய் விரியும்

கவிதை முகங்கள் ஆகிய கட்டுரைகள், கலாநிதி துரை மனோகரன் அவர்களால் இலங்கை வானொலி மலையகச் சேவையில் தொகுத்து வழங்கப்படும் "கலை அமுதம்" நிகழ்ச்சியில் வாசிக்கப்பட்டு, விரிவாக்கம் செய்யப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

என்னுடைய எழுத்து முயற்சிகளுக்குத் தூண்டுகோலாக அமைந்து, இந்நூலுக்கு அணிந்துரையும் வழங்கியதோடு, பல்வேறு ஆலோசனைகளையும் தந்து என்னை உற்சாகப்படுத்திய என் மதிப்புக்குரிய ஆசிரியர் கலாநிதி துரை மனோகரன் அவர்களுக்கும், முன்னுரை வழங்கிய என் பெரும் மதிப்புக்குரிய பேராசிரியர் க. அருணாசலம் அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூல் வெளிவருவதற்குப் பல்வேறு வகையிலும் உதவிய தமிழ்த்துறையின் உதவி விரிவுரையாளர்களான கௌசல்ஜா, கலைவாணி ஆகியோருக்கும், எனது ஆசிரியர்களான திரு. நல்லத்தம்பி, திரு. அகிலன் ஆகியோருக்கும், ரொட்னி பெர்ணாண்டோ (நூலக உதவியாளர்) அவர்களுக்கும், நண்பர்களான சதீஸ், ரமேஸ், யோகேஸ்வரன், புஸ்பராஜ், சிவாகரன், கஜேந்திரன் ஆகியோருக்கும், பக்கங்களைக் கணினியில் வடிவமைத்த சர்மிளாவுக்கும், இந்நூலைச் சிறப்பாக வடிவமைத்த ஈஸ்வரன் அச்சக நிறுவனத்தினருக்கும் நன்றிகள்.

பெ. சரவணகுமார்

தமிழ்த்துறை,

பேராதனைப் பல்கலைக்கழகம்,

பேராதனை.

10. 12. 2010

# பேசாப் பொருளைப் பேசும் நூல்

## ஓர் அணிந்துரைக் குறிப்பு

இலங்கையில் இளம் ஆய்வாளர்களும், விமர்சகர்களும் முகிழ்ந்து வருகின்றனர். ஆற்றல் வாய்ந்த இளம் தலைமுறை ஒன்று வளரத்தொடங்கியுள்ளது. அவர்கள் புதிய நோக்கில் புதிய எல்லைகளைத் தொட முயற்சிக்கின்றனர். அதற்கேற்ற கடும் உழைப்பும் அவர்களிடம் காணப்படுகின்றது. "முயற்சி திருவினையாக்கும்" என்ற அயராத சிந்தனை அவர்களிடம் காணப்படுகின்றது. ஊக்கமும், உள்வலிமையும் கொண்டவர்களாக அவர்கள் திகழ்கின்றனர். இத்தகைய ஆற்றல் வாய்ந்த இளம் தலைமுறையைச் சேர்ந்த ஆய்வாளராகவும், விமர்சகராகவும் இந்த நூல் மூலம் தம்மை இனம்காட்டிக் கொள்கின்றார், பெருமாள் சரவணகுமார்.

எதிர்ப்பும் எதிர்ப்பு இலக்கியமும் என்ற இந்த நூல் சரவணகுமாரைச் சரியாகவே இனம் காட்டுகின்றது. அயராது தகவல் தேடும் முயற்சியும், கிடைத்த தகவல்களைச் சரிபார்த்து, நிதானத்துடனும் நேர்மையுடனும் தமக்குச் சரியெனப் பட்டதையும், தாம் கானும் குறைகளையும் நெற்றிக்கண் பார்வையுடன் உறுதியுடன் சொல்லும் திராணியும் அவரது எழுத்துகளுக்கு வலிமை சேர்க்கின்றன. சில ஆய்வாளர்கள், விமர்சகர்கள் போல அப்படியும் இருக்கலாம், இப்படியும் இருக்கலாம் என்ற நழுவல் போக்கில் கருத்துக்களை வெளியிடாமல், உறுதியுடன் தமது கருத்துக்களைத் தெரிவிப்பது வரவேற்கத்தக்கது. சரவணகுமார் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் உற்பத்தி என்ற முறையில், அப்பல்கலைக்கழகம் சார்ந்த ஆய்வியல், விமர்சனப் போக்கு அவரையும் பற்றிக்கொண்டுள்ளது எனலாம்.

இந்நூலில் ஒன்பது கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் நான்கு கட்டுரைகள் மலையகம் தொடர்பானவை. இரண்டு ஈழத்துக் கவிஞர் மஹாகவி தொடர்பானவை. ஒன்று புலம்பெயர் இலக்கியம் தொடர்பானது. இன்னொன்று ஞானம் இதழ் தொடர்பானது. பிறிதொன்று சாதியம் தொடர்பான நூல் பற்றியது. இவ் ஒன்பது கட்டுரைகளிலும் நூலாசிரியரின் உழைப்பும், ஆய்வியல், விமர்சன நோக்கும் நன்கு வெளிப்படுகின்றன. இந்நூலில் இடம்பெறும் தமது கட்டுரைகள் மூலம் சரவணகுமார் பேசாப் பொருளைப் பேசத்துணிந்துள்ளார். அத்தோடு, இதுவரை பார்க்கப்படாத பக்கங்களையும் அவர் பார்த்துள்ளார்.

இலக்கியம் என்பது, சமுதாயத்தின் பண்பாட்டு அம்சங்களின் தொகுதியாகவும், அவற்றின் வெளிப்பாடாகவும் விளங்குகின்றது. அது சமுதாயத்தின் அகவய, புறவய உணர்வுகளையும், உள் முரண்பாடுகளையும், எதிர்ப்பு உணர்வுகளையும் வெளிப்படுத்த வல்லது. நாட்டார் பாடல்கள் இவற்றைச் சிறப்பாகச் செய்கின்றன. அதேவேளை, செந்நெறி இலக்கியங்களும் அவ்வப்போது இத்தகைய எதிர்ப்புணர்வை வெளிப்படுத்தத் தவறுவதில்லை. ஆனால், அவற்றிலும், நாட்டாரியல் அம்சங்கள் இணைந்திருக்கும். இதற்குத் தக்க எடுத்துக்காட்டாக விளங்குபவை, பள்ளு இலக்கியங்கள். அவற்றில், பண்ணைக்காரர்கள் விவசாயத் தொழிலாளர்களால் கேலிக்கும், கிண்டலுக்கும் ஆளாக்கப்பட்டு, அவர்களது எதிர்ப்புணர்வுகள் வெளிப்படுத்தப்படுவதைக் காணலாம். அதுபோன்றே மலையக நாட்டார் இலக்கியங்களிலும் பெருந்தோட்டத் துறையின் அதிகாரவர்க்கத்தைச சாடும் எதிர்ப்புணர்வுகள் நிறைய வெளிப்படுவதைக் காணலாம். இதனைச் சரவணகுமாரின் "எதிர்ப்பும் எதிர்ப்பு இலக்கியமும்" என்ற முதலாவது கட்டுரை புலப்படுத்துகின்றது. மலையகக் கவிதைகளிலும் எதிர்ப்பிலக்கியக் கூறுகளைப் பரவலாகக் காணலாம்.

இது பற்றித் தமது கட்டுரையின் இறுதியில் குறிப்பிடும் சரவணகுமாரே எதிர்காலத்தில் இத்தகைய முயற்சியையும் மேற்கொள்ளலாம்.

மலையகம் பற்றிய இன்னொரு கட்டுரை, மலையகக் கவிதை வளர்ச்சி பற்றியதாக அமைந்துள்ளது. மலையகக் கவிதையின் தற்காலப் போக்கின் முக்கிய பண்புகளாக மூன்று அம்சங்களை அவர் குறிப்பிடுகின்றார். பெரும்பாலான கவிதைகள் நாட்டுப்புறப் பாடலின் சாயலைக் கொண்டிருத்தல், கருத்தியல் பிரசாரத்துக்கான ஓர் ஊடகமாகக் கவிதையைக் கையாளுதல், உணர்வுகளைப் பதிவுசெய்தலும் கோவைப்படுத்தலும் என அவற்றைக் குறிப்பிடுகின்றார். இத்தகைய போக்குகளுக்கு அடிப்படைக் காரணமாகத் தனித்துவமான அரசியல் பின்னணியைக் குறிப்பிடுகின்றார். அவர் கட்டுரையில் குறிப்பிடும் பல விடயங்கள் கருத்தில் கொள்ளத்தக்கவை. சி. வி. வேலுப்பிள்ளையின் கவித்துவ வீச்சினைப் பிறபட்ட காலங்களில் முன்னெடுத்துச் செல்லாமையே, மலையகக் கவிதைகளில் நவீன கவிதைக்கான சாத்தியப்பாடுகள் அமைவுபெறாமைக்கு முக்கிய காரணம் எனக் கூறுகின்றார். மலையக மக்களின் வாழ்வியலை, மலையகத்தைச் சாராத கவிஞர்களின் கவிதைகள் நவீன கவிதைக்கான கூறுகளோடு சிறப்பாக வெளிப்படுவதையும் அவர் சுட்டிக்காட்டுகின்றார். மலையகக் கவிஞர்கள் நாட்டுப்புறப் பாடலின் சாயலை மறுபிரதி செய்யாமல், அவற்றை நவீன கவிதையின் மொழிதலுக்கு ஏற்ப ஓர் உத்தியாகக் கையாள்வது அவசியமானது என்பதையும் தமது கட்டுரையில் சரவணகுமார் வலியுறுத்துகிறார்.

மலையகப் புனைகதைகளில் (சிறப்பாகச் சிறுகதைகளில்) காணப்படும் யதார்த்த அழகியல், கவிதைகளில் செழுமை பெறாமைக்கு அவற்றின் உள்ளடக்கமே முதன்மையான காரணம் என்பதையும் அவர் குறிப்பிட்டுச் செல்கின்றார். மலையகக் கவிதைகள் குறிப்பிட்ட தொழில்

சார்ந்த வாழ்வியல் அனுபவங்களாகத் திகழ்ந்தாலும், அவை கருத்தியல் பரசாரமாகவே விளங்குவதையும் அவர் தெரிவிக்கிறார். இவ்வாறு, மலையகக் கவிதை பற்றிப் பல விமர்சன பூர்வமான கருத்துக்களைச் சரவணகுமார முன்வைக்கின்றார். மலையகக் கவிதை பற்றிய அவரது அவதானிப்புகள் படைப்பாளிகளினால் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை ஆகும்.

"மலையகப் புனைவுகளில் யதார்த்தமும் அழகியலும்' என்ற கட்டுரை, என். எஸ். எம். ராமையாவின் ஒரு கூடைக் கொழுந்து, தெளிவத்தை ஜோசப்பின் நாமிருக்கும் நாடே ஆகிய சிறுகதைத் தொகுதிகளை முன்னிறுத்திய பார்வையாக அமைந்துள்ளது. மலையகச் சிறுகதைகளைப் பொறுத்தவரையில் சில உருவத்திலும், சில உள்ளடக்கத்திலும் சிறப்புப் பெற்றுள்ளன என்பதையும் இவற்றிலிருந்து மாறுபட்டு, உருவத்தையும். உள்ளடக்கத்தையும் தமது கதை சொல்லுந்திறனால் செழுமைபடுத்திய ஒருசிலருள் என். எஸ்.எம். ராமையாவும், தெளிவத்தை ஜோசப்பும் முதன்மையானவர்கள் என்பதையும் ஆசிரியர் குறிப்பிடுகின்றார். மலையகத்தின் வாழ்வியலையும், அதன் இயங்குதன்மையையும் பதிவுசெய்த சிறுகதை ஆக்கங்களாக இவ்விரு தொகுதிகளிலும் உள்ள சிறுகதைகளைச் சரவணகுமார் அடையாளப்படுத்துகின்றார்.

"ஒரு சாலையின் சரிதமாய் விரியும் கவிதை முகங்கள்" என்ற கட்டுரை, மலையகத்தில் பிறந்து தற்போது தமிழகத்தில் வாழுந்துவரும் பன்னீர்ச்செல்வத்தின் கவிதைத் தொகுதி பற்றி நோக்குகின்றது. பன்னீர்ச்செல்வம் மலையகம், தமிழகம் ஆகிய இருவேறுபட்ட பண்பாட்டுச் சூழல் சார்ந்த அனுபவங்களைப் பெற்றவர் என்ற முறையில், அவரது கவிதைகளில் இடம்பெறும் இருவேறுபட்ட சமூகங்களினதும் பிரச்சினைகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதையும் சரவணகுமார் நோக்குகின்றார்.

பன்னீர்ச்செல்வத்தின் ஒரு சாலையின் சரிதம் என்ற கவிதைத் தொகுதி, அவரைச் சிறந்த கவிஞர்களுள் ஒருவராக அறிமுகப்படுத்தும் சில நல்ல கவிதைகளையும் கொண்டு விளங்கும் அதேவேளை, சில கவிதைகள் வெறும் கோசங்களாக இடம்பெற்றிருப்பதையும் நூலாசிரியர் சுட்டிக்காட்டுகிறார். அவரது கவிதைகளில் சொற்களோடு உணர்வுகளைக் கட்டிப்போடும் தன்மை மிகக் குறைவாக இருப்பதையும் சரவணகுமார் குறிப்பிடுகின்றார். இது ஈழத்து இளங்கவிஞர் பலரிடத்தும் காணப்படும் ஒரு குறைபாடுமாகும்.

ஈழத்தின் முக்கிய கவிஞர்களுள் ஒருவரான மஹாகவியின் தூது என்ற கவிதையை நோக்குவதாக "நவீன கவிதையில் தூது மஹாகவியின் தூது கவிதையை முன்னிறுத்திய பார்வை" என்ற கட்டுரை விளங்குகிறது. 1947 இல் மஹாகவியால் எழுதப்பட்ட இக்கவிதை, அவரது எந்தத் தொகுப்பிலும் இதுவரை இடம்பெற வில்லை. அதனை வெளிகொணர்ந்து மதிப்பீடு செய்யும் முயற்சியாகச் சரவணகுமாரின் இக்கட்டுரை இடம்பெறுகிறது. காதலையும், பத்தியையும் புலப்படுத்துவதற்காகத் தமிழ்ச் செய்யுள் மரபில் நீண்ட காலமாகப் பயன்பட்டுவந்த தூது என்ற இலக்கிய வடிவத்தை நவீன பாடுபொருளுக்கு ஏற்ப அமைத்த மஹாகவியின் கவிதைத்திறனை இக்கட்டுரை மதிப்பிடுகிறது. நகர்ப்புறம், கிராமப்புறம் ஆகிய இரண்டினதும் எதிர்நிலைகளைப் புலப்படுத்துவதற்கான ஓர் உத்தியாக மஹாகவி தூது மரபைக் கையாண்டிருப்பதைப் பற்றி இக்கட்டுரை விரிவாக நோக்குகிறது.

மஹாகவி பற்றிய இன்னொரு கட்டுரையாக "மஹாகவியின் வீடும் வெளியும்" என்பது அமைந்துள்ளது. 1973 இல் வெளிவந்த மஹாகவியின் வீடும் வெளியும் என்ற கவிதைத் தொகுதி பற்றி இக்கட்டுரை மதிப்பிடுகிறது. பொதுவாக மஹாகவி கவிதைகளில் காணப்படும் ஒரு

நிகழ்ச்சியைக் காட்சிப்படுத்தும் போக்கினையும், கிராமம் - நகரம் ஆகியவற்றின் வாழ்வியலை எதிர்எதிர் நிலைகளாகக் கட்டமைக்கின்ற அவரின் கவிதைப் பண்பினையும், பழைய சமுதாயப் பண்பாட்டை உள்வாங்கி, நவீன கவிதைக்குரிய உருவ, உள்ளடக்கப் பண்புகளோடு கவிதை படைக்கும் அவரது படைப்பாற்றலையும் சரவணகுமார் எடுத்துக்காட்டுகின்றார்.

இந்நூலில் இடம்பெறும் இன்னொரு குறிப்பிடத்தக்க கட்டுரையாக விளங்குவது, "புலம்பெயர் இலக்கியம் - நிகழ்காலமும் எதிர்காலமும்" என்பது. புலம்பெயர் இலக்கியத்தின் தனித்துவத்திற்கு, அதன் உள்ளடக்கமும், எடுத்துரைப்பு முறையும் முக்கியமானவையாக உள்ளமை பற்றி நூலாசிரியர் குறிப்பிடுகின்றார். புலம்பெயர்ந்தவர்களின் மனக்குமுறல்களைப் பதிவுசெய்வதில் கவிதை சிறப்பான இடத்தினைப் பெற்றுள்ளமை பற்றியும் அவர் நோக்கியுள்ளார். புலம்பெயர் இலக்கியத்தில் கவிதைகளின் எடுத்துரைப்பு முறையும், அழகியல்சார் அம்சங்களும் தமிழ் இலக்கியப்பரப்பில் தனித்துவமானவையாக விளங்குவது பற்றியும் நூலாசிரியர், குறிப்பிட்டுச் செல்கிறார். அதேவேளை, புகலிட புனைகதைகள் பற்றிய தமது மதிப்பீட்டையும் நூலாசிரியர் இக்கட்டுரையில் புலப்படுத்துகின்றார். எதிர்காலத்தில் புலம்பெயர் இலக்கியம் புதிய தளங்களைப் பதிக்கக்கூடிய முறையில் ஆரோக்கியமான ஆலோசனைகளையும் சரவணகுமார் கட்டுரையின் இறுதிப்பகுதியில் தெரிவிக்கிறார். புலம்பெயர் இலக்கியம் பற்றி விரிவாக நோக்கப்பட்ட கட்டுரையாக இது விளங்குகிறது.

ஈழத்து இலக்கிய இதழ்களில் ஒன்றான ஞானம் பற்றியும் ஒரு கட்டுரை நோக்குகிறது. "ஈழத்து இலக்கிய இதழியலில் ஞானம்" என்ற இக்கட்டுரை, அவ்விதழ் பற்றிய சிறந்த மதிப்பீடாக விளங்குகிறது. ஞானம் இதழ் சிறுகதைகளுக்கு வழங்கும் முக்கியத்துவத்தைக்

கவிதைத்தெரிவிலும் வழங்கவேண்டும என்பதை இக்கட்டுரை வலியுறுத்துகின்றது. ஞானத்தில் வெளிவந்த கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், நேர்காணல்கள, பத்தி எழுத்துகள் போன்ற பல விடயங்கள் பற்றியும் இக்கட்டுரை விமர்சன ரீதியில் மதிப்பிடுகிறது. ஞானம் இதழின் வெளிவரும் ஆக்கங்கள் எதிர்காலத்தில் நூல் வடிவம் பெறவேண்டும் என்பதையும் இக்கட்டுரை வற்புறுத்துகின்றது. ஈழத்து இதழியல் வரலாற்றில் ஞானம் இதழின் பங்களிப்பு ஒரு திருப்புமுனையாக அமையும் என்பதையும் சரவணகுமார் தமது கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

கலை இலக்கியங்களோடு எப்போதும் சார்புற்று நிற்கும் சமூகவியல் தொடர்பான ஒரு கட்டுரையும் நூலில் இடம்பெற்றுள்ளது. “சாதியின்மையா, சாதிமறைப்பா? பின்காலனித்துவச் சூழலில் சாதியம் பற்றிய வாசிப்பு ஒரு சமூகவியல் நோக்கு” என்ற கட்டுரை அத்தகையது. இக்கட்டுரையில் சாதியின்மையா, சாதிமறைப்பா? என்ற நூலைக் கட்டவிழ்த்துப் பார்க்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. சிங்களச் சமூகத்திலும், யாழ்ப்பாணச் சமூகத்திலும், மலையகச் சமூகத்திலும் சாதியத்தின் இயங்குதன்மைகளை விபரிக்கும் இந்நூல் பற்றிய சிறந்த மதிப்பீடாக இக்கட்டுரை அமைந்துள்ளது. உலகமயமாக்கல் என்ற நுண்ணரசியல், சாதியம் பற்றிப் பொருள் கொள்வதிலும், வாசிப்பதிலும் கூடுதல் ஆதிக்கத்தைச் செலுத்துகின்றது என்பதை நூல் வெளிப்படுத்துமாற்றைச் சுட்டிக்காட்டும் இக்கட்டுரை, சாதியத்தையும், அதன் போராட்ட இயங்கு நிலைகளையும் ஒட்டுமொத்தச் சமூகப் பின்புலத்தில் வைத்து இந்நூல் பார்க்கவில்லை என்பதையும் குறிப்பிடுகின்றது. சரவணகுமாரின் சமூகவியல் பார்வையினை இக்கட்டுரை சிறப்பாகப் புலப்படுத்துகின்றது.

பெ. சரவணகுமார், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

இந்நூலில் இடம்பெறும் ஒன்பது கட்டுரைகளும் நூலுக்குப் பெருமை சேர்க்கும் நவமணிகளாக விளங்குகின்றன. பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் விரிவுரையாளராகப் பணியாற்றும் அனுபவமும் சரவணகுமாரின் ஆய்வியல், விமர்சனப் பார்வையை விரிவாக்கியுள்ளது எனலாம். இந்நூல் அவரைச் சிறப்பாக இனம்காட்டும் என்று நம்புகிறேன். இந்நூல் ஈழத்துத் தமிழ் இலக்கியவுலகில் பேசப்படும் நூலாக விளங்கும் என்ற நம்பிக்கை எனக்கு நிறையவே உண்டு. சரவணகுமாரின் நூல்கள் எதிர்காலத்தில் பல வரவேண்டும் என்று வாழ்த்துவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

**கலாநிதி துரை மனோகரன்**

தமிழ்த்துறைத் தலைவர்,

பேராதனைப் பல்கலைக்கழகம்,

பேராதனை. **10.12.2010**

# எதிர்ப்பும் எதிர்ப்பு இலக்கியமும்

## மலையக நாட்டார் பாடல்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

இன்று, உலகளாவிய ரீதியில் விடுதலை வேண்டிய சமுதாயங்களின் வெளிப்படுத்துகையாக, அச்சமுதாயங்களிலிருந்து வெளிவரும் எதிர்ப்பு இலக்கியம் பேசப்படுகின்றது. இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் இருந்தே அடித்தள மக்கள் பற்றிய ஆய்வுகள் மிக வேகமாக நடைபெறத்தொடங்கின. நாட்டுப்புற மக்கள் பற்றிய ஆய்வுத்துறையாகவும் அம்மக்களின் பண்பாடுகளையும், இலக்கியங்களையும் கொண்டமைந்த தொகுதியாகவும் நாட்டுப்புறவியல் விளங்குகின்றது. இத்தொகுதி ரசனைக்கும் ஆய்வுக்கும் மட்டுமே உரியது என்ற கருத்துநிலைமாறி அவை சமூகத்தளத்தில், அதிகாரநிலைப்பட்ட மேட்டிமைச் சக்திகளை எவ்வாறு எதிர்கொண்டன என்ற கருத்தியல் தேடல், கடந்த இரு தசாப்தங்களில் தமிழ் ஆய்வுத்துறையில் முனைப்புப் பெற்றது. அதிகாரநிலைப்பட்ட மேட்டிமைச் சக்திகளை தனி மனிதன், குழு, சமூகம் என்பன கருத்தியல் ரீதியாக எவ்வாறு எதிர்கொள்கின்றன என்பதை மலையக நாட்டார் பாடல்களை அடிப்படையாகக் கொண்டும் எதிர்ப்பிலக்கியக் கொள்ளையின் அடிப்படையில் இத்தேடல் அமைகின்றது. அவ்வகையில் மலையக வாய்மொழி இலக்கியத்தில் இத்தகைய எதிர்ப்பிலக்கியக் கூறுகள் மேற்கிளம்பு வதற்கான சமூக, பண்பாட்டு வரலாற்றைப் பின்புலமாகக் கொண்டு இவ் ஆய்வு நோக்குகின்றது. ஆய்வின் தேவைகருதி மலையகம், மலையகத் தமிழ் இலக்கியம், எதிர்ப்பு, எதிர்ப்பிலக்கியம் என்பவை சுருக்கமாக விளக்கப்படுகின்றன.

பெ. சரவணகுமார், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

இலங்கையில் பிரித்தானியக் காலனித்துவத்தின் பெருந்தோட்டப் பொருளாதார உற்பத்திக் கட்டமைப்பின் தோற்றத்தோடு, மலையக மக்களின் வரலாறும் தொடங்குகின்றது. பிரித்தானியர் பெருந்தோட்டப பயிர்வகைகளான இறப்பர், கோப்பி, தேயிலை முதலியவற்றை அறிமுகஞ் செய்தனர். தங்கள் காலனித்துவத்தின் கீழிருந்த நாடுகளில் இருந்தே தொழிலாளர்களைக் கொண்டுவந்தனர். அவ்வாறு கொண்டு வரப்பட்ட சமூகக் குழுமமாகவே மலையக மக்கள் விளங்குகின்றனர். 'தென்னிந்தியச் சூழலான சேலம், மதுரை, தஞ்சாவூர், இராமநாதபுரம், புதுக்கோட்டை, தென் ஆற்காடு, செங்கல்பட்டு, திருநெல்வேலி, கோயம்பத்தூர், சித்தூர், திருவாங்கூர், கொச்சி, மலபார் முதலான பிரதேசங்களில் இருந்தே இவர்கள் கொண்டுவரப்பட்டனர்'.[1]

"மலையகம்" என்ற சொற்பிரயோகம் 1970 க்குப் பின்னரே இலங்கை அரசியலிலும், இலங்கைத் தமிழ் இலக்கியத்திலும் முக்கிய கருத்தாடல் பொருளாகியது. மலையகம் என்ற தொடர் குறிப்பிட்ட பிரதேசத்தினையும் அப்பிரதேசத்துக்கேயுரிய பொருளாதார உற்பத்தி முறையினையும், சமுகப் பண்பாட்டு வழக்காறுகளையும் கொண்ட சமூகக்குழுமத்தின் அடையாளமாக விளங்குகின்றது. 'மலையகத் தமிழர் என்ற தொடர் ஐந்து'[2] முக்கிய குழுவினரை உள்ளடக்கிய ஒரு பதமாக விளங்குகின்றது.

"இவ்வகைமைகளுக்குள் வர்க்க, சமூக, பொருளாதார அசைவியக்கங்கள் காரணமாகவும், அரசியல் வரலாற்று நிர்ப்பந்தம் காரணமாகவும் இவர்கள் ஒன்றாகவே நோக்கப்பட்ட வரலாற்றின் ஊடாகவும் இவர்களிடையே வளர்ந்த தவிர்க்கமுடியாத ஒன்றிணைப்பினூடாகவுமே மலையகத் தமிழர்' என்ற அரசியல், சமூக, எண்ணக்கரு வளர்ந்துள்ளது."[3]

## மலையக இலக்கியமும் சமுகப் பின்புலமும்

தென்னிந்தியச் சூழலில் விவசாயப் பொருளாதார, பண்ணையடிமைக் கட்டமைப்பில் வாழ்ந்துவந்த மக்கள், இலங்கையில் முதலாளித்துவத்தின் சமூக உருவாக்கத்துக்குள் உள்வாங்கப்பட்டனர். உலகில் நாகரீகமடைந்த சமூகங்களின் சமூக வரலாறு போன்றே மலையக சமூகத்தின் வரலாறும் அமைந்துள்ளது. மலையக சமூக வரலாறு பற்றிக் கவிஞர் முத்துவேல் பின்வருமாறு கூறுகின்றார். 'மலையக சமுக அமைப்பு, கலப்பே இல்லாத முதலாளித்துவ சமூக அமைப்பாகவே தோற்றம் பெற்று, ஸ்தாபிதமானது. மலையகத்தின் அடிப்படை மக்கள் (அடிநிலை மக்கள்) இழப்பதற்கெனச் சொத்துடைமை ஏதும் இல்லாத கூலித் தொழிலாளர்களேயாவர். முதலாளித்துவம் தோற்றுவித்த சொற்ப கூலிக்காக உடல் உழைப்பை விற்கும் தொழிலாளர் வர்க்கமாகவே இப்பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்றனர். அவ்வாறு மூலதனக்காரருக்கும் உழைப்பை விற்பவர்களான பாட்டாளி வர்க்கத்தினருக்கும் இடையில் நிலவுகின்ற உற்பத்தி உறவே, மலையகச் சமூகத்து மனித ஊடகத்தின் அடிப்படையாகும். வரலாற்று பரிமாணத்தை அமையச்செய்யும் மூலாதார அம்சமான வர்க்கப் போராட்டமானது, இப்பகை முரண்பாட்டின் அடிப்படையில் பிறப்பதேயாம். இவ்வாறாக, மலையகச் சமூகத்தின் அடிநிலை மக்கள் குறித்து நோக்கப்படுகின்ற போது 'எங்கிருந்தோ வந்து தயாராக இருந்த பொருளாதார வாய்ப்புகளை அபகரித்துக் கொண்ட மக்கள் அல்ல, மலையக மக்கள். இவர்கள் எந்தவொரு நாகரிக சமூகத்தினதும் மூலத்தைப் போலவே, காடுகளை அழித்து வளமாக்கி புதியதோர் பொருளாதாரத் துறையும் அதை சார்ந்த அமைப்புகளும் இன்னும் இந்நாட்டின் ஆதாரமாக இருக்கின்றன.

பெ. சரவணகுமார், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

இந்தமக்களின் வரலாறும், உருவாக்கமும் யாரையும் போலவே இவர்களும் இம்மண்ணின் மக்களே, என்பதை ஆதாரப்படுத்துகின்றன. நமது உறுதியையும் வளர்க்க உதவும்.[4] இக்கூற்று மலையக சமூகக்குழுமம் ஏனைய சமூகங்களைப் போன்றே தனக்கென ஒரு பொருளாதாரக் கட்டடைப்பினை உடையதாகவும் அக் கட்டமைப்பிலான வாழ்க்கை முறையினையும் கொண்டு விளங்குகின்றமையினையும் சிறப்பாகவே பதிவுசெய்துள்ளது.

இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் மலையகத் தமிழ் இலக்கியம் பற்றிய கருத்தாடல்கள் 1950க்குப் பின்னரே முனைப்புப் பெற்றது. அவ்வாறு அமைவதற்கு, அது தனக்கெனத் தனித்துவமான பண்புகளைக் கொண்டதாகவும் குறிப்பிடத்தக்களவு பரப்பினை உடையதாகவும் விளங்குவதே அடிப்படைக் காரணமாகும். 'மலையகத் தமிழர் எனும் போது அத்தொடர் குறித்து நிற்கும் பொருளின் மையப்புள்ளி மலையகத் தோட்டத் தொளிலாளர்களும் அவர்களுள் ஒரு சிறு பகுதியினராகவும் உதிரிகளாகவும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சிற்றூழியம் செய்வோருமே என்பதை மனங் கொள்ளுதல் அவசியம். அத்தகைய தொழிலாளர்களின் வாழ்வையும், பிரச்சினையையும் பிரதிபலிக்காத இலக்கியங்களை மலையகத் தமிழ் இலக்கியம் எனக் கொண்டால், அது வெறுமனே பிரதேச இலக்கியமாகவே கருதப்படும்'[5] எனவே, மலையகத் தமிழ் இலக்கியம் என்பது மலையகத்துக்கே உரிய பொருளாதார உற்பத்தி முறையினையும், அவ்வுற்பத்தி உறவிலிருந்து மேற்கிளம்புகின்ற மக்களின் வாழ்க்கை முறையினையும், கருத்தாக்கங்களையும் உள்வாங்கிப் படைக்கப்படும் இலக்கிய வகைமையினைக் குறித்து நிற்கின்றது.

## மலையகமும் எதிர்ப்பிலக்கியமும்

குறிப்பிட்ட ஒரு சமூகத்தில் பொருளாதார உற்பத்தி உடைமைகள் ஒரு சிறு குழுவிடம் அமையும்போது தொழிலாளர்கள் சுரண்டப்படுகின்ற தன்மையினை உலக வரலாறு எடுத்துக் கூறுகின்றது. இவ்வகைப் பின்புலத்தில்தான் மலையகச் சமூக, பொருளாதார உற்பத்தி உறவும் அமைந்திருக்கின்றது. இப்பொருளாதார முரண்பாட்டு அம்சம் இலக்கியங்களூடாக வெளிப்படுகின்றபோது, அவை சமூக அசைவியக்கத்தினைச் சிறப்பாகவே கொண்டிருக்கும். மலையக இலக்கியத்தில் எதிர்ப்பிலக்கியக் கூறுகளை விளங்கிக்கொள்வதற்கு எதிர்ப்பு, எதிப்பிலக்கியம் பற்றிச் சுருக்கமாக இங்கு நோக்குவது பொருத்தமானது.

எதிர்ப்பு என்பது அடக்குமுறைக்கு எதிரான குரலாகும். சமூகத்தளத்தில் குறிப்பிட்ட குழு மேட்டிமைச் சக்தியாக விளங்குகின்றபோது அவற்றுக்கு எதிராகக் கருத்தியல் ரீதியாக போராடுகின்ற தன்மையே எதிர்ப்பாகும். அதிகாரக்குவிப்பும் அடக்குமுறையும் மேலோங்கும்போது அதன சாத்தியங்களையும் சாத்தியமின்மைகளையும் கேள்விக்குள்ளாக்கி தனிமனிதன், குழு, சமூகம் முதலியவற்றுக்கு அப்பால் நிறுவனத்தை நிறுவனம் எதிர்ப்பதும், நிறுவனத்தைச் சமூகம் எதிர்ப்பதும் என இதன் பரப்பு விரிந்து செல்லும்.

எதிர்ப்பு என்ற கருத்தியல், கருத்தியல் நிலையில் மாத்திரம் நில்லாது, மொழியைச் சாதனமாக்கி மொழிக்கான புனைவுத்தன்மை, கவித்துவம் முதலிய பெறுமானங்களோடு வெளிப்படும்போது அதாவது, மொழிசார் அழகியலோடு வெளிவரும்போது எதிர்ப்பு இலக்கியமாக மேற்கிளம்புகின்றது. எதிர்ப்பும் எதிர்ப்பிலக்கியமும் இல்லாத சமூகமே இல்லை எனலாம். வர்க்க முரண்பாட்டுடன்தான் வரலாறு

பெ. சரவணகுமார், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

கட்டமைக்கப்படுகின்றது என்பர். முரண்பாடுகள் நிலவுகின்ற சமூகங்களில் எதிர்ப்பும், எதிர்ப்பிலக்கியமும் மேலோங்குவதை யாரும் தடுக்கமுடியாது. 'எதிர்ப்பு உதிரியாக வெளிப்படவும் முடியும், கூட்டுச் செயற்பாடாகவும் அமையமுடியும், மக்கள் வெறுக்கும் பிற்போக்கான வகைமாதிரிகளை (stereotype) மீண்டும் மீண்டும் திணிக்க முனைகின்றபோதும், மேலோங்கியக் குழு (elite) அடித்தள மக்களைக் கட்டுக்குள் கொண்டு வந்து அடக்கியாள முனைகின்றபோதும் எதிர்ப்பானது ஒர் இயக்கமாக மேலெழ முடியும். அப்போது இந்த நச்சு வட்டத்திலிருந்து மீள்வதற்கான ஒரு கலாசார ஆயுதமாக எதிர்ப்பிலக்கியம் மேற்கிளம்புகின்றது'.[6] அதிகாரநிலைப்பட்ட மேட்டிமை சக்திகளையும் அதிகாரக் கருத்தியல்களையும் எதிர்த்த முதல் இலக்கியவடிவம் நாட்டார் இலக்கியமே ஆகும். இது பற்றிய ஆலன் டண்டிஸ் (1965) கூறும் கருத்து இங்கு குறிப்பிடத்தக்கது.

"சமூக எதிர்ப்பாகச் செயற்படுவது நாட்டார் வழக்காறுகளின் பணிகளுள் ஒன்று. எங்கெங்கு அநீதியும் ஒடுக்குமுறையும் உள்ளதோ அங்கெல்லாம் அதற்குப் பலியானவர்கள் நாட்டார் வழக்காற்றில் ஆறுதலும் ஆதரவும் பெறுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. எதிர்க்க முடியாத வலுவான, ஆதிக்க சக்திக்கு எதிராகத் தங்களுடைய கோபத்தை, பழமொழிகள், பாடல்கள் மற்றும் நகைச்சுவை மூலமாக வெளிப்படுத்தினர். நாட்டார் வழக்காறுகளுக்கு ஆசிரியராக எந்த ஒரு தனிநபரையும் குறிப்பிட முடியாததால் இவ்வழக்காறுகள் அனுமதிக்கப்படுகின்றன. இது ஒரு குழுவின் வெளிப்பாடு. தனிநபர்களின் வெளிப்பாடுகள் அல்ல. எனவே பாடலைப் பாடியவரை அதன் கருத்துக்களுக்காகத் தண்டிக்க முடியவில்லை. பாடுபவர் தன்னுடைய கருத்தை அல்ல, சமூகத்தின் குரலையே எதிரொலிக்கின்றார். ஒவ்வொரு சமூகக்குழுமத்திற்கும் உரிய நாட்டார் வழக்காறுகள் குறிப்பிட்ட கால கட்டத்தின் அரசியலையும், எதிர்க்குரலையும் புலப்படுத்த

நிற்கும். குறிப்பிட்ட சமூகத்தளத்தின் அரசியல், பொருளாதார, பண்பாட்டுத் தளங்களில் மேலாண்மை செலுத்தும் அதிகார நிலைப்பட்டவர்களையும், அவர்களின் முகவர்களாகச் செயற்படுபவர்களையும் கேள்விக்குள்ளாக்கும் அடித்தள மக்களின் குரலே எதிர்ப்புக்குரல் எனப்படுகின்றது.[7] அவ்வகையில், மலையகப் பண்பாட்டுத் தளத்தில் எதிர்ப்புக் குரல்கள் மேற்கிளம்புவதற்கான சமூகப் பின்புலத்தை நோக்குவது இங்கு அவசியமானதாகும்.

மலையகச் சமூக அமைப்பில் எதிர்ப்பு, எதிர்ப்பிலக்கிய அம்சங்கள் அமைவுபெறுவதற்குப் பொருளாதாரக் கட்டமைப்பே அடிப்படைக் காரணமாகும். இப்பொருளாதார உற்பத்தி மூலதனம் குறிப்பிட்ட ஒரு குழுவிடம் கட்டுண்டிருந்தது. சாதிய, வர்க்க அடுக்கமைவு சமுதாயத்தில் நிரந்தரமான ஒரு அம்சமாகக் காணப்படுகின்றது என்பது சமூகவியல் அறிஞர்களின் கருத்தாகும். தென்னிந்தியச் சூழலில் சாதியத்துக்கென்று வரையறை செய்யப்பட்டிருந்த தொழில் முறைமைக்குள் வாழ்ந்த மக்கள் மலையகத்தில் குறிப்பிட்ட ஒரு பொருளாதார உற்பத்தி முறைமைக்குள் கொண்டுவரப்பட்டனர். இச்சமூக மாற்றம் ஏற்பட்டாலும் தங்களோடு பின்னிப்பிணைந்த சாதியவகுப்பு முறையைப் பின்பற்றினர் என மலையகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் காட்டி நிற்கின்றன.

சாதியத்தை அடிப்படையாகக் கொண்டே முக்கியமான தொழில் வகைகள் பிரித்து வழங்கப்பட்டன. உயர்சாதியில் உள்ளவர்களிடமிருந்து கணக்குப்பிள்ளை, கண்காணிமார்கள் தெரிவு செய்யப்பட்டனர். "உயர் சாதியினர் கங்காணி போன்ற உயர் தொழில் புரிபவர்களாகவும் இருந்தனர். இதைவிடத் தோட்டங்களில் கோயில் பரிபாலனம், தொழிற்சங்கத் தலைமை போன்றனவும் உயர் சாதியினரின் தலைமையின் கீழேயே காணப்பட்டன. உயர்சாதிப் பிள்ளைகள் நகர்ப்புறப் பாடசாலைகளில் கல்வி பயில்பவர்களாகவும் பெட்டிக்கடை வியாபாரம்

செய்பவர்களாகவும் அடிக்கடி தென்னிந்தியாவிலுள்ள தமது உறவினர்களிடம் சென்று வருபவர்களாகவும் இருந்த இவர்களது தொடர்புகளே தோட்டங்களில் மேலோங்கிய நடவடிக்கையாகவும் காணப்பட்டது."[8] மலையகத்திலிருந்து மேல்நிலையாக்கம் அடைந்த சிறுகுழு உயர்சாதியிலிருந்தே உருவானது என்பது குறிப்பிடத்தக்கது. சாதியிலிருந்து மேற்கிளம்புகின்ற தொழில்சார் அடுக்கமைவே மலையகத்தில் உள்ளது.

இத்தொழில்சார் அடுக்கமைவில் பெரியதுரை, சின்னத்துரை, கங்காணி, கணக்குப்பிள்ளை முதலியவர்களே தொழில்தளத்தில் மேட்டிமை சக்திகளாக விளங்கினர். தோட்டத்தொழிலிலும், உழைப்பாளர்களோடும் தொழில் புரியும் தளத்தில் நேரடித்தொடர்பு அற்றவர்களாகத் தோட்டநிர்வாக அமைப்பில் கிளாக்கர், டீமேக்கர், வைத்தியர் முதலானவர்கள் விளங்குகின்றனர். இவ்வாய்வின் தேவை கருதிப் பெருந்தோட்டத் தொழில் துறையோடு தொடர்புடையவர்களே கவனத்தில் கொள்ளப்படுகின்றன. பெருந்தோட்டத் தொழிற்றுறையில் கங்காணிகளின் மேலாதிக்கமே மிகுந்திருந்தது. 'தொழிற்சங்கம் மலையகத்துள் ஊடுருவும் வரை தோட்டத்தில் கங்காணிமார்களின் நிலை ஜமீந்தாரின் நிலையை ஒத்திருந்தது என சி.வி.வேலுப்பிள்ளை கூறுவது மனங்கொள்ளத்தக்கது.

'உண்மையில் தொழிலாளர் - கங்காணி உறவானது இத்தொழிலாளர் மக்களுக்கு ஏற்கனவே தமிழகத்தில் பழக்கப்பட்டிருந்த பண்ணையார் முறைமையை ஒத்ததாகும். அந்த நிலவாட்சி முறைமையில் நிலச்சொந்தக்காரன் தொழிலாளர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவில்லை. நிலச்சொந்தம் பிரமதேயத்திற்கோ அல்லது காணியாட்சிக்காரருக்கோ இருக்கலாம். ஆனால் நிலத்தில் தொழில் புரியும் குடியானவர்களைப் பொறுத்தவரையில் பண்ணையாரே முக்கிய

இடம் பெறுவர். பண்ணையின் மக்களோடு தொடர்புடையவர் பண்ணையாரே. இவரே தொழிலாளர்களுடனான தமது தொடர்புகளிற் கெடுபிடியுடையவராக இருப்பார் இதனால் இவரே மக்களின் இரகசியமான கண்டனத்திற்கும் கேலிக்குமுரியவராவர்.[9] விவசாய, பொருளாதார, பண்ணையடிமை முறையிலிருந்து மேற்கிளம்பிய பள்ளு நூல்கள் எவ்வாறு பண்ணையார் அதிகார நிலையினைப் புலப்படுத்துகின்றனவோ அவ்வாறே மலையக நாட்டார் பாடல்கள் கங்காணியின் நிலையினைப் பதிவுசெய்துள்ளன. இந்த அதிகார வடிவமாற்றம் தொழில் குழும நிலையில் மட்டுமே மாறுபட்டிருக்கின்றது. (இது பற்றிப் பின்னர் விரிவாக நோக்கப்படும்,)

மலையகச் சமூக தளத்தில் மேட்டிமை சக்தியாக விளங்கிய கங்காணி என்ற கருத்துருவாக்கம் காலப்போக்கில் வலுக்குறைந்து சென்றமையினைக் காணலாம். கங்காணியின் சேவைக்காலம் முடிவடைந்த பின்னர், அவர் ஏனைய தொழிலாளரின் நிலையையுடையவரானார். எனினும், கங்காணி முறையிலான அதிகாரத்துவம் பெருந்தோட்டத்துறைகளில் இன்றும் மேலோங்கியிருப்பதனை அவதானிக்க முடிகிறது. மலையகத்தில் தோற்றம பெற்ற கவிதை, சிறுகதை, நாவல் என்பன இதனைச் சிறப்பாகப் பதிவுசெய்துள்ளன.

## நாட்டார் பாடல்களும் எதிர்ப்புக் குரல்களும்

ஒவ்வொரு சமூகக்குழுமத்தினதும் பண்பாட்டுக் கருவூலமாக விளங்குபவை நாட்டார் இலக்கியங்களாகும். இவ்விலக்கிய வடிவங்கள் குறிப்பிட்ட காலத்தின் சமூகப்பண்பாட்டு அசைவியக்கத்தினைத் தனக்குள் பதிவுசெய்துகொள்ளும். ஈழத்துத் தமிழ் நாட்டார் வழக்காற்றியலில் மலையக நாட்டாரியல் தனி ஆய்வுத்துறையாக வளர்ந்துள்ளமை

குறிப்பிடத்தக்கதாகும். ஈழத்து ஏனைய பிரதேச நாட்டார் வழக்காறுகள் விவசாய பொருளாதார கட்டமைப்பிலிருந்து தோற்றம் பெற்றவையாகும். ஆனால், மலையக நாட்டாரியல் பெருந்தோட்டத் தொழில் முறைகளிலிருந்து மேற்கிளம்பியமை மலையக நாட்டாரியலின் தனித்துவப்பண்பு ஆகும்.

'மலையகத் தோட்டத் தொழிலாளர் சமூகமானது இலங்கையின் ஏனைய சமூகங்களிலிருந்து வேறுபட்ட தனித்துவமான பிரச்சினைகள் பலவற்றையும், பண்புகள் பலவற்றையும் கொண்டு விளங்குவது போலவே அச்சமூகத்தைச் சீரிய முறையில் பிரதிபலித்து நிற்கும் நாட்டாரியல் கூறுகளும் பெருமளவு தனித்துவமானவை. அவர்களது பண்பாட்டுக் கருவூலமாகவும் அபிலாசைகளை வெளிப்படுத்துவனவாகவும் அவர்கள் பற்றிய சிறந்த வரலாற்று ஆவணமாகவும் விளங்குபவை, மலையக நாட்டாரியல் ஒரு தனித்துறையாகும்.[10]

உலக இலக்கிய வரலாற்றில் எதிர்ப்புக்குரல்களை இலக்கியத்தினூடாக வெளிப்படுத்திய முதல் வடிவமாக வாய்மொழி இலக்கியங்கள் விளங்குகின்றன. நாட்டுப்புற மக்கள் ஒடுக்கப்பட்ட சமூகமாகக் கருதப்பட்டு வந்த நிலையினை நாட்டுப்புற ஆய்வுகள் தெளிவுறுத்துகின்றன. "கிராமியம் எப்போதும் ஆதிக்கங்களுக்கு வெளியே மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேனும் சுதந்திரக் காற்றை சுவாசித்தே வந்திருக்கின்றது. ஒப்பீட்டளவில் செந்நெறிப் பாரம்பரியத்தை விடவும் கிராமிய பாரம்பரியம் கூடுதல் சுதந்திரம் உடையது. எனவே இச் சுதந்திரத்தின் ஊடாக சுயாதீன எதிர்ப்புக் குரல்கள் மேற்கிளம்புவதற்கான வெளி வாய்மொழி இலக்கிய மரபில் நீண்டநெடுங் காலமாக இருந்துவந்திருக்கின்றது.[11] இவ்வகையில் தான் மலையக நாட்டார் பாடல்கள் மேட்டிமைச் சக்திகளுக்கு எதிராகவும் முரண்பாடான சமூகப்பண்பாட்டு ஆதிக்கத்திற்கு எதிராகவும் பாடப்பட்டு வந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

பெருந்தோட்டப்பயிர்ச் செய்கைக்காக ஒப்பந்த அடிப்படையில் கொண்டுவரப்பட்ட மக்கள், மேட்டிமைச் சக்திகளின் அனைத்து வகையான ஒடுக்குமுறைகளுக்கும் அடங்கிப்போக வேண்டிய சமூகத் தன்மையே நிலவியது. "ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு மலை தோட்டங்களில் கூலிகளாக பணியாற்றுவதற்காக ஒப்புக் கொண்டு எழுதிக்கொடுக்கும் ஒப்பந்த பத்திரம் ஒருவனின் சுயேச்சை வாழ்வைக் குலைத்து, அவனை அடிமையாக்கும் அடிமைப் பத்திரமாகும். தோட்ட முதலாளிகளின் கொடிய அடக்கு முறையினையும், சுரண்டலையும் சகித்துக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் இப்பத்திரத்தின் மூலம் ஏற்பட்டது. ஏனெனில் இவற்றிலிருந்து தப்பிக்க அவனுக்கு இரண்டு வழிகள்தான் இருந்தன. ஒன்று கொடுமையை எதிர்த்துப் போராடுவது, மற்றொன்று அங்கிருந்து தப்பியோடிவருவது. தொழிற்சங்க இயக்கம் வேரூன்றாத ஒரு பிற்போக்கான சூழ்நிலையில் உரிமைகளுக்கான போராட்டம் என்பது அன்று சாத்தியமில்லை.[12] இவ்வகைச் சூழலில் ஒடுக்குமுறைக்கு எதிரான எதிர்ப்புணர்வை நாட்டார் பாடல்கள் மூலமாகவே வெளிப்படுத்தினர். மலையக நாட்டார் பாடல்களில் காணப்படும் எதிர்ப்புக் குரல்கள் கங்காணி என்ற அதிகாரநிலைப்பட்ட கருத்துருவாக்கத்தின் மீதே அமைந்திருக்கின்றது.

மலையகத்தில் அறிமுகஞ் செய்யப்பட்ட இறப்பர், கோப்பி, தேயிலை ஆகிய தொழிற் தளங்களில் கங்காணியின் ஆதிக்கமே மேலோங்கியிருந்தது. மலையக நாட்டுப்பாடல்கள் பல இத்தகைய பெரிய கங்காணிமார்கள், கங்காணிமார்கள் முதலியோரின் சுகபோக வாழ்க்கை, சர்வாதிகாரம், காமக் களியாட்டம், குரூரசிந்தை, அடாவடித்தனங்கள் முதலியவற்றை வெளிப்படுத்துகின்றன. தொழிலாளர்கள் அச்சத்தின் நிமித்தம் இவர்களைப் புகழ்ந்தும் மதித்தும் பாடியுள்ளபோதும் தமது மனக்குமுறல்களையும் இவர்கள் மீதான கோபத்தையும் நேரடியாக வெளிப்படுத்துவதற்குப் பதில் கேலியும் கிண்டலும் தொனிக்கப் பல

பாடல்களைப் பாடியுள்ளனர். பெருந்தோட்டத் துறைகளில் கொழுந்து பறித்தல், முள்ளுகுத்துதல், கான்வெட்டுதல், கவ்வாத்து வெட்டுதல், உரம் போடுதல் எனப் பல மட்டங்களில் தொழில்கள் பிரிக்கப்பட்டிருந்தன.

மலையக நாட்டார் பாடல் வகைகளுள் தொழிற்பாடல்களே முனைப்பான எதிர்ப்புக்குரல்களைக் கொண்டிருக்கின்றன. இறப்பர் தோட்டம், கோப்பித் தோட்டம், தேயிலைத் தோட்டம் முதலிய தொழிற் தளங்களிலிருந்து மேற்கிளம்பியவைகளாக அவைகள் விளங்குகின்றன. நியாயமாகக் கூலி கொடுக்கும் முதலாளியை புகழ்வது, கொடுமைக்கார முதலாளிகளை இகழ்வது நிலபிரபுத்துவ எதிர்ப்பு, பணக்கார எதிர்ப்பு, சாதி அகம்பாவ எதிர்ப்பு முதலிய உணர்ச்சிகள் வாய்மொழிப்பாடல்களில் அதிகமாகக் காணப்படுகின்றன. இறப்பர்த் தோட்டத்தில் மேட்டிமைச் சக்தியின் சுரண்டலுக்கு எதிராக ஒலிக்கும் பாடலாகப் பின்வரும் பாடல் அமைகின்றது.

"இறப்பர் மரமானேன்

நாலுபக்கம் வாதுமானேன்

எரிக்க விறகுமானேன்

இங்கிலீஸ் காரனுக்கு

ஏறிப்போக காரானேன"[13]

இப்பாடலில் இறுதி இரு அடிகள் எதிர்ப்பின் உச்சக்கட்டமே எனலாம். ஆங்கில மேட்டிமைச் சக்தியை இங்லீஸ்காரன் (க்கு) என அழுத்தி ஒலிப்பதே அக்கால கட்ட சமூக அமைப்பில் எதிர்ப்பின் வெளிப்பாடே ஆகும். இவ்விடத்தில் ரஸ்ய நாட்டு நாட்டார் வழக்காற்றியலாளர்

சொக்கலோ கூறிய கருத்து ஒப்பிட்டுப் பார்க்கத்தக்கது. "நாட்டார் வழக்காறு கடந்த காலத்தின் உரத்த குரலாகும். நாட்டார் வழக்காறு வர்க்க மோதலின் பிரதிப்பலிப்பாகவும், ஆயுதமாகவும் இருக்கின்றது. அவ்வாறே தொடர்கின்றது."

கங்காணி என்ற பாத்திரம், தொழிலாளர் குழுவில் இருந்து தெரிவு செய்தமை ஆங்கில காலனித்துவத்தின் பொருளாதார சுரண்டல் தந்திரத்தின் ஒரு வெளிப்பாடே ஆகும். கங்காணி தொழிலாளர் வர்க்கத்துக்குள் இருந்து தெரிவு செய்யப்பட்டமையால் நேரடியான எதிர்ப்புக்கு ஆளானார். தொழில்சார் அடுக்கமைவில் தொழிலாளர்களது எதிர்ப்புக்குரல் கங்காணி என்ற கருத்துருவாக்கத்தின் மீதே அமைவதற்கு அவ் அடுக்கமைவே காரணமாகும். இவ்வகை அடுக்கமைவில் எதிர்ப்புக் குரல் அடுத்த கட்டத்தைநோக்கி நகரமுடியாத வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தது. கங்காணி தொழிலாளர்களை அதிகநேரம் வேலைவாங்குதல், பல்வேறு கெடுபிடிகளைப் புரிதல், தோட்டங்களை குழப்பத்திற்கு உள்ளாக்குதல் முதலிய அவரது தில்லு முல்லு வேலைகளுக்கு எதிராகப் பல பாடல்கள் பாடப்பட்டுடள்ளன.

எண்ணிக் குழிவெட்டி

இடுப்பொடிஞ்சி நிக்கையிலே

வெட்டு வெட்டு என்கிறானே

வேலையத்த கங்காணி

என்றும்

தோட்டம் புரளியிலே

தொர மேலே குத்தமில்லை

கங்காணி மாராலே

கனபுரளி ஆகுதையா

'அந்தனா தோட்டமினு

ஆசையா தானிருந்தேன்

ஒர டூட்ட தூக்கச்சொல்லி

ஒதைக்கிறானே கண்டாக்கையா[14]

வேலையத்த கங்காணி என்பது தொழிலாளியின் உழைப்பின் மூலமாகக் கிடைக்கும் பொருளாதாரத்தில், சொகுசாக வாழும் கங்காணிக்கு எதிரான நேரடி எதிர்ப்புக் குரலே ஆகும்.

நாட்டுப்புறவியலில் பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் மிகக் கொடூரமானவை. குடும்ப, சமூக மட்டங்களில் இவ்வன்முறைகள் கட்டவிழ்க்கப்பட்டிருந்தன. இது பற்றிச் சமூகவியல் ஆய்வறிஞர் ஆ. சிவசுப்பிரமணியம் பின்வருமாறு கூறுவது சுட்டிக்காட்டத்தக்கது. அதிகாரத்தின் துணையுடன் பெண்கள் மீது நிலவுடைமை சமூகத்தில் நிகழ்ந்த பாலியல் வன்முறைக்கு அடிப்படைக்காரணம் பாலியல் மட்டுமல்ல, அதிகாரத்தையும் மேலாதிக்கத்தையும் நிலைநாட்டும் ஒரு கருவியாகவும பாலியல் வன்முறையைக் கருதியுள்ளனர். பொதுவாக, நிலவுடைமைச் சமூக அமைப்பில் பின்வரும் மூன்று வகையான ஆதிக்கம் இடம்பெறுவது இயல்பு.

01. பொருளாதார ஆதிக்கம் - பண்ணை அடிமை, கொத்தடிமை, குறைந்த கூலி, கூலி கொடுக்க கள்ள அளவுக் கருவிகளைப் பயன்படுத்தல், கட்டாய வேலை, குத்தகை முறை, வரி விதிப்பு.

**02. அரசியல் ஆதிக்கம்** - பஞ்சாயத்துச் செய்யும் உரிமை, ஊர் கட்டுப்பாடு விதித்தல், தண்டனை வழங்குதல்

**03. பண்பாட்டு ஆதிக்கம்** - கல்வி பயிலுதல், ஆடை, அணிகலன் அணிதல், பணப் பொருள் பயன் படுத்தல், உணவு உண்ணுதல், தெய்வ வழிபாடு, குடியிருப்புத் தொடர்பாகத் தடைகளும் கட்டுப்பாடுகளும் விதித்தல, பாலியல் வன்முறை.[15]

## பொருளாதார ஆதிக்கத்திற்கு எதிரான குரல்கள்

நிலப்பிரபுத்துவ விவசாய முறையிலிருந்து கொண்டுவரப்பட்டு, முதலாளித்துவ பொருளாதார உற்பத்தி முறைக்கு மாற்றப்பட்ட சமூகமாகவே மலையகச் சமூகம் விளங்குகின்றது. இதனால் மேற்கூறப்பட்ட ஆதிக்கங்கள் இச்சமூக அமைப்பிலும் தொடர்ந்தது. பெண்களுக்கு எதிரான பாலியல் சேட்டைகள், பலாத்காரங்கள் என்பன தொழில் செய்யும் இடங்களிலும் இடம் பெற்றன. மலையகத்தில் கொழுந்தெடுக்கும் பெண்கள் இத்தகைய துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

தோட்டத்து மேலாதிக்க சக்திகளின் இவ்வாறான வன்முறைக்கு இடம் கொடுக்க மறுத்த பெண்களைக் கொழுந்து நிறை குறைப்பு, வேலை நேரக் குறைப்பு, நாட்குறைப்பு, வேலை நீக்கம் எனப் பல வழிகளிலும் பழிவாங்கியதை மலையக நாட்டார் பாடல்கள் பல வெளிப்படுத்தி நிற்கின்றன. அதேவேளை, அவர்களுக்கு வேலைக்குத்தகுந்த ஊதியம் வழங்கப்படுவதில்லை. கூலிப்பணத்தைத் தகுந்த நேரத்திலும் கொடுக்காது தாமதப்படுத்துவர். இத்தகைய சந்தர்ப்பங்களில் மேட்டிமைச் சக்திக்கு எதிராகப் பெண்கள் பாடிய பாடல்களில் எதிர்ப்புக் குரல்கள் ஓங்கி ஒலிப்பதைக் காணலாம்.

01. கள்ள அளவுக்கருவிகளைப் பயன்படுத்தும் கணக்குப் பிள்ளைக்கு எதிரான பாடல்

'ஓடி நெர புடிச்சி
ஒரு கூட கொழுந்தெடுக்க
பாவி கணக்கப்பிள்ள
பத்து ராத்த போடுறானே'[16]

02. கூடுதலான நேரம் வேலை வாங்குவதற்கு எதிரான குரல்

'பொழுதும் எறங்கிருச்சி
பூமரமும் சாஞ்சிருச்சி
இன்னமும் இரங்கலையோ
எசமானே ஒங்க மனம்
அவசரமா நான் போறேன்
அரப்பேரு போடாதீங்க

03. சின்னத்துரைக்கு எதிரான பாடல்

'நானும் நெரே புடிச்சி
நயமா கொழுந்தெடுத்தேன்
கூடே நெறஞ்சு போச்சு
கொழுந்து நெறு சின்னதொரை'

மலையகத் தோட்டச் சமூகத்தில் ஆதிக்க சக்திகளால் பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டனர். நீண்ட காலமாக இடம்பெற்று வந்த இக்கொடுமைக்குச் சமூக மட்டத்தில் நேரடியான எதிர்ப்பும் காட்டப்பட்டது. கங்காணியின் சேட்டையை எதிர்த்துப் பாடுவதாகப் பின்வரும் பாடல் உள்ளது.

'கூடையை இறக்கமாட்டேன்

குளிர்ந்த வார்த்தை சொல்லமாட்டேன்

கொண்ட கணவன் கண்டால்

கோப்பிக் கத்தியை தூக்கி வருவான் [17]

## பண்பாட்டு ஆதிக்கத்திற்கு எதிரான எதிர்ப்புக் குரல்கள்

பண்பாட்டுப் போர்வையில் பெண்கள் மீது சுமத்தப்பட்டிருந்த எழுதாச் சட்டங்களை எதிர்த்து பல வாய்மொழிப் பாடல்கள் தோற்றம் பெற்றுள்ளன. சமூகத்தில் ஆண்கள் அந்தஸ்து, சொத்துரிமை, உடல் வலிமை காரணமாக வயது சென்று தாரமிழந்த ஆண்களை இளம் பெண்களுக்கு மணம் செய்து கொடுக்கும் வழக்கம் பழங்காலம் தொட்டே நடந்து வருகின்றது. பொருந்தாத் திருமணத்திற்கு எதிராகவும் தாரம் இழந்த பெண்களைச் சமூகம் ஒதுக்கி வைப்பதற்கு எதிராகவும் பெண்கள் பாடிய பாடல்கள் விளங்குகின்றன. இவ்வகை எதிர்ப்புக் குரல்கள் தாலாட்டு, ஒப்பாரி பாடல்களில் புலம்பல்களாகவே அமைந்துள்ளன. பெண்களது புலம்பல்கள் சமூகப் பண்பாட்டு விமர்சனமாகவே உள்ளன.

### 01. பொருந்தா திருமணத்திற்கு எதிராக பாடப்பட்ட பாடல்

மாமன் மகனிருக்க

மாலையிட்ட் சாமியிருக்க

வழியிலே வந்த பயல்

மாப்பிள்ளையா வந்ததென்ன

02. கணவனை இழந்த பெண்ணை ஒதுக்கி வைப்பதற்கு எதிராக, புலம்பலாக வெளிவரும் எதிர்ப்பு

பொன்னு அடுப்பு வச்சு

பொங்க வைச்சேன் சாதங்கறி

பொங்கி வெளியே வந்தா

பொகை போவச் சன்னலுண்டு

ஆக்க அடுப்புமுண்டு

அனல் போவச் சன்னலுண்டு

ஆக்கி வெளியே வந்தா

அரசனில்லாப் பாவியென்பார்[18]

03. மேட்டிமைச் சக்தியாக விளங்கிய கங்காணியை நையாண்டி செய்வதனூடாக வெளிப்படும் எதிர்ப்புணர்வு

'செம்புச் சிலை போல பொண்டாட்டிய

சிம்மாசனத்தில வச்சுப்புட்டு

வேலைக்கிறங்கிற கங்காணிக்கு

ஏழெட்டுப்பேராம் வைப்பாட்டிக்'

'கிருச்சு மிதியடியாம்

கீபோட்ட சோமாங்களாம்

வேட்டநாய கைபுடிச்சு

வேல விட வாராறாம்'[19]

நாட்டுப்புற இலக்கியங்கள் சாதிய சமூக அமைப்பிலிருந்து தோற்றம் பெற்றமையினால் சாதியத்திற்கு ஆதரவாகவும், எதிராகவும் குரல்கள் ஓங்கி ஒலிப்பதை அறியலாம். சாதியத்தின் பேரில் மேற்கொள்ளப்பட்ட ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டங்களையும், சாதியத்துடன் பின்னிணைந்திருந்த மேட்டிமை சக்தியின் அரசியலையும் வெளிப்படுத்தும் இலக்கிய வகையாக வாய்மொழிப் பாடல்கள் விளங்குகின்றன. சமூகத்தில் பொருளாதார, பண்பாட்டு ஆதிக்கங்களினால் நேரடியாகப் பாதிப்புக்குள்ளானவர்கள் தங்களது சாதிய எதிர்ப்புணர்வைப் பாடல்களின் மூலமாக வெளிப்படுத்தினர். சாதி அடிப்படையில் தொழில்கள் வழங்கப்பட்டமைக்கும் தாழ்ந்த சாதியினர் எனக் கருதப்பட்டவர்களுக்கு உயர் தொழில்கள் வழங்கப்பட்டமைக்கும் எதிராகப் பல பாடல்கள் பாடப்பட்டுள்ளமையினை மலையக வாய்மொழிப் பாடல்களிலும் காண முடிகின்றது.

'கண்டி கண்டி எங்காதீங்க

கண்டி பேச்சு பேசாதீங்க

சாதி கெட்ட கண்டியிலே

சக்கிலியன் கங்காணி[20]

இப்பாடல் உயர் சாதியினருக்கே வழங்கப்பட்டு வந்த கங்காணி தொழில் தாழ்ந்த சாதி (சக்கிலியன்) எனக் கருதப்பட்டவருக்கு வழங்கப்பட்டமைக்கு எதிராக உயர் சாதியினர் வெளிப்படுத்திய குரலாகும். இவ்வாறே உயர் சாதிக்கென்று ஆரம்பத்திலிருந்து வழங்கப்பட்ட தொழில்களை எதிர்த்து தாழ்ந்த சாதிக்காரர்களால் பல பாடல்கள் பாடியிருக்கவேண்டும். ஆனால் அவ்வாறான எதிர்ப்புப் பாடல்களை மலையக நாட்டார்ப்பாடல் தொகுப்புகளாக வெளிவந்தவைகளில் காணமுடியாதுள்ளது. இவ்வகைப் பாடல்களைத்தேடிப் பதிவுசெய்யும்போது மலையகத்தின் சாதிய அடுக்கமைவு, பண்பாட்டில் எவ்வாறான மேலாண்மையைக் கொண்டிருந்தது என்பதை அறியக்கூடியதாக இருக்கும் என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

ஒவ்வொரு சமூகத்தினதும் சமூக, பொருளாதார, பண்பாட்டு அம்சங்களின் பின்னணியிலிருந்து மேற்கிளம்புகின்ற வாய்மொழி இலக்கியங்கள், சமூகத்தளத்தில் மேட்டிமைச் சக்தியாக விளங்கிய அதிகார நிலைப்பட்டவர்களின் ஒடுக்கு முறைகளையும் அவர்களின் முகவர்களாகச் செயற்பட்டவர்களையும் எதிர்க்கும் கலாசார ஆயுதமாகப் பயன்பட்டு வந்தமையினை மலையக நாட்டார் பாடல்களிலும் காணமுடிகிறது. மலையகப் பண்பாட்டுக் கருத்து நிலைக்கேற்ப அப்பாடல்களில் குறியீட்டு முறையிலான எதிர்ப்புக் குரல்களே காணப்படுகின்றன. பொதுவாக, வாய்மொழி கலை இலக்கிய நியமங்கள் மறைமுகமான எதிர்ப்பையே கொண்டுள்ளமை நாட்டுப்புறச் சமூக அமைப்பில் மேட்டிமைவாதிகளாக வ்ளங்கியவர்களின் ஆதிக்கநிலைப்பட்ட கருத்தியலின் இறுக்க நிலையினையே சுட்டிக்காட்டுகின்றது. செந்நெறி இலக்கியங்களில் பேசப்படுகின்ற எதிர்ப்பிலக்கியத்தின் அழகியல்சார் அம்சங்கள் வாய்மொழி இலக்கியங்களில் காணமுடியாது. ஒவ்வொரு சமூகத்தினதும் சமூக

உருவாக்கத்தின் வரலாறுக்கேற்ப இவ்வகை இலக்கியங்கள் அமையப்பெறுவதால் பண்பாடு சார்ந்த குறியீடுகளே முனைப்புப் பெற்றுள்ளன. மலையக இலக்கிய வரலாற்றில் எதிர்ப்பிலக்கியத்தின் ஆரம்பக் கூறுகளை நாட்டார் பாடல்களிலும் காணலாம். அதேவேளை, நாட்டார் பாடல்களின் அடியாக இருந்து தோற்றம் பெற்றுள்ள மலையகக் கவிதைகளிலும் எதிர்ப்பிலக்கியக் கூறுகள் மிகச் சிறப்பாக இடம்பெற்றுள்ளன. இவ்வகையிலான ஆய்வுகள் மேலும் செழுமைபெறும் போது, இவ்வகைக் கருத்தியல் தேடல் விரிவுபெறமுடியும்.

அடிக்குறிப்புகள்

1. பார்க்க : சந்திரசேகரன், சோ. (1989) இலங்கை இந்திய வரலாறு, குமரன் வெளியீடு, சென்னை.

2. பார்க்க : சிவத்தம்பி, கா. (பதிப்பாசிரியர்) (1993) இலங்கை மலையகத் தமிழரின் பண்பாடும் கருத்துநிலையும், உதயம் நிறுவன வெளியீடு, கொழும்பு.

3. சிவத்தம்பி, கா. (பதிப்பாசிரியர்) (1993) முன். கு. நூல். ப.12.

4. முத்துவேல், எம். அறுபதுகளிலான மலையகத் தமிழ் இலக்கிய ஸ்தாபிதப் பிரயத்தனங்கள், புதுவசந்தம், தேசிய கலை இலக்கியப் பேரவை, வவுனியா, 1999.

5. சிவத்தம்பி, கா. (பதிப்பாசிரியர்) (1993) முன். கு. நூல். ப.12.

6. சிராஜ் மஷ்ஹீர். (2003) எதிர்ப்பு இலக்கியம் : ஒரு கலாசார ஆயுதம், முஸ்லிம் சமூக அரசியல் படிப்பகம். ப. 17.

7. சிவசுப்பிரமணியம், ஆ. (2005) நாட்டார் வழக்காற்றியலின் அரசியல், கங்கு வெளியீடு. ப. 19.

8. சந்திரபோஸ்,எஸ். (1997) மலையகத் தமிழரின் சமூகப் படையாக்கம் (கட்டுரை) (மலையகத் தமிழாராய்ச்சி மாநாடு) ப. 139.

9. சிவத்தம்பி, கா. (பதிப்பாசிரியர்) (1993) முன். கு. நூல். ப.12.

10. அருணாசலம், க. (1994) மலையகத் தமிழ் இலக்கியம், தமிழ் மன்றம், இலங்கை. ப. 147.

11. சிராஜ் மஷ்ஹீர். (2003) முன். கு. நூல். ப.21.

12. சிவசுப்பிரமணியம், ஆ. (2005) தமிழகத்தில் அடிமை முறைமை, காலச்சுவடு பதிப்பகம், ப. 84.

13. சாரல்நாடன், (1993) மலையக வாய்மொழி இலக்கியங்கள், தேசிய கலை இலக்கியப் பேரவை. ப. 36.

14. வேலுப்பிள்ளை, சி. வி. (1983) மலைநாட்டு மக்கள் பாடல்கள், கலைஞன் பதிப்பகம், சென்னை. ப. 25.

15. சிவசுப்பிரமணியம், ஆ. (1995) அடித்தள மக்கள் மீதான பாலியல் வன்முறையும் நாட்டார் வழக்காறும். (கட்டுரை) (தமிழ் நாட்டார் வழக்காற்றியல்) – பக். 150 – 151.

16. வேலுப்பிள்ளை, சி. வி. (1983) முன். கு. நூல். ப. 26.

17. கோமஸ், ஏ. வி. பி. (1998) அங்கமெல்லாம் நெறஞ்சமச்சான், தமிழ் மன்ற வெளியீடு. ப.12.

18. சாரல்நாடன், (1993) முன். கு. நூல். ப. 43.

19. வேலுப்பிள்ளை, சி. வி. (1983) முன். கு. நூல். ப. 21.

20. சாரல்நாடன், (1993) முன். கு. நூல். ப. 55.

பயன்பட்ட நூல்கள்

சிவத்தம்பி, கா. (2002) இலக்கியமும் கருத்துநிலையும், சென்னை: மக்கள் வெளியீடு.

சிவசேகரம், சி. (2000) எதிர்ப்பு இலக்கியமும் எசமானர்களும், தேசிய கலை இலக்கியப் பேரவை.

வானமாமலை, நா. (1997) தமிழர் நாட்டுப் பாடல்கள், சென்னை: நியூசெஞ்சரி புக்கவுஸ்.

Hoillup Oddver, Bonded Labour, Charles Subasinghe & Sons, Sri Lanka.

கட்டுரை : லெனின் மதிவானம், ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பில் மலையக இலக்கியம். (மலையக பரிசுக் கட்டுரைகள்)

# மலையகக் கவிதை வளர்ச்சி

## விரிவு பெறவேண்டிய எல்லைகள்

ஈழத்துத் தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தில் மலையகத் தமிழ் இலக்கியம் குறிப்பிட்ட மக்கள் தொகுதியினரின் வாழ்வியல் அனுபவமாகத் திகழ்கின்றது. அம்மக்கள் சார்ந்த வாழ்வியல் அனுபவங்களைப் பதிவு செய்வதில் புனைகதை ஆக்க இலக்கிய வடிவங்களே முனைப்பான இடத்தினைப் பெற்றுள்ளன. புனைகதை இலக்கிய வடிவத்தில் பதிவுசெய்யப்படும் வாழ்க்கையும் அதனை மொழிப்படுத்தும் விதமும் பிராந்தியத் தனித்துவத்தினை வெளிப்படுத்துகின்றது. பிரதேசத் தனித்துவம், புனைகதையின் சாத்தியப்பாடுகள் ஆகியவற்றைத் தமது கதைசொல்லல் (நாவல்கள்) முறையினூடாக வெளிப்படுத்திய படைப்பாளிகளுள் சி.வி. வேலுப்பிள்ளை (வாழ்வற்ற வாழ்வு, வீடற்றவன்), கோகிலம் சுப்பையா (தூரத்துப் பச்சை), தெளிவத்தை ஜோசப் (காலங்கள் சாவதில்லை), கே.ஆர்.டேவிட் (வரலாறு அவளைத் தோற்றுவிட்டது), சதாசிவம் (மூட்டத்தினுள்ளே), நந்தி (மலைக்கொழுந்தி), தி.ஞானசேகரன் (குருதிமலை) ஆகியோர் தனித்து நோக்கத்தக்கவர்கள். இவர்களின் கதைசொல்லல் முறையும், கையாளும் சொற்களும் தனித்துவத்தினை வெளிக்காட்டத்தக்கன. அவ்வகையில், புனைகதை இலக்கிய வடிவத்தின் சாத்தியப்பாடுகளைக் கொண்டு விளங்கும் மலையக இலக்கியத்தில் நவீன கவிதைக்கான சாத்தியப்பாடுகள் ஏன் முனைப்புப் பெறவில்லை என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பெ. சரவணகுமார், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

நவீனத்துவச் சிந்தனைகளை உள்வாங்கி, நவீன சமுதாயம் பயன்படுத்தும் மொழியை ஊடகமாகக் கொண்டு படைக்கப்படுவது தற்காலக் கவிதைகளின் முக்கிய பண்புகளாகும். நவீன இலக்கிய வடிவங்களான சிறுகதை, நாவல் பெற்றிருக்கின்ற உருவ அமைதி கவிதைக்கும் மிக அவசியமானது. சில பல அம்சங்களில் கலைஞனின் எடுத்துரைப்பு முறை உருவத்தைத் தீர்மானிப்பதாகவும் அமைந்துவிடுகின்றது. இந்த எடுத்துரைப்பு முறையே கவிஞர்களையும், அவர்களது படைப்புகளையும் தனித்து அடையாளப்படுத்துகின்றது. ஆகவே நவீன பண்பாட்டில் சமுதாயம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் அவர்களது அனுபவச் சாரங்களையும மொழிக்கலையின் துணையுடன் ஓர் அருட்டுணர்வை ஏற்படுத்துவது கவிதையின் முக்கிய பண்புகளுள் ஒன்றாகும். இதனைக் குறிப்பிட்ட கலை தருகின்ற பாதிப்பு எனக் கூறலாம். இந்தப் புரிதலை அடிப்படையாகக் கொண்டு மலையகக் கவிதையின் இயங்கு தன்மைகளை ஆராய்வது பயனுடையதாகும். அவ்வகையில், மலையகக் கவிதையின் தற்காலப்போக்கின் முக்கிய பண்புகளாக நாம் பின்வருவனவற்றை அடையாளப்படுத்த முடியும்.

1. பெரும்பாலான் கவிதைகள் நாட்டுபுறப் பாடலின் சாயலைக் கொண்டவை.
2. கருத்தியல் பிரசாரத்திற்கான ஓர் ஊடகமாகக் கவிதையினைக் கையாளுதல்.
3. உணர்வுகளைப் பதிவு செய்தலும், சொற்களைக் கோர்வைப்படுத்தலும்.

மேற்கூறப்பட்ட மூன்று போக்குகளுக்கும் தனித்துவமான அரசியல் பின்னணியே அடிப்படைக் காரணமாகும. மலையகக் கவிஞர்களின்

பெரும்பாலான கவிதைகள் நாட்டுபுறப் பாடலையே ஆதர்சமாகக் கொண்டுள்ளன. நாட்டுபுறப் பாடல்களில் பயன்படுத்தப்பட்ட சொற்களையும், எடுத்துரைப்பு முறையினையும் உள்வாங்கிக் கொண்டே கவிதைகள் படைக்கப்படுகின்றன. நவீன கவிதையின் உருவ, உள்ளடக்கச் செழுமையை உள்வாங்காமல், பழைய மெட்டில் அமைவு பெற்று "நவீன கவிதை" என்ற பெயரில் பதிவுசெய்யப்படும் கவிதைகளே அதிகம் உள்ளன. இதனை விரிவாக நோக்குவது பயனுடையதாக அமையும்.

மலையகக் கவிதை வளர்சிக்கும், அதன் வளத்திற்கும் சி.வி. வேலுப்பிள்ளை, தமிழோவியன், குறிஞ்சித் தென்னவன் ஆகியோரது பங்கும், பணியும் கனதியானதாகும். இம்மூன்று கவிஞர்களின பெரும்பாலான கவிதைகள் ஒரே வகையைச் சார்ந்தவை. தமிழோவியன், குறிஞ்சித்தென்னவன் ஆகியோரின் கவிதைகளைவிட, சி.வி. வேலுப்பிள்ளையின் கவிதைகள் ஒரு சில அம்சங்களில் தனித்து நோக்கத்தக்கவை. குறிப்பாக, கவிதையின் எடுத்துரைப்பு முறையினையும் அது சுமந்துவரும் உணர்வையும் சுட்டிக்காட்டலாம். ச.வி வேலுப்பிள்ளைக்குக் கிடைத்த ஆங்கிலப் புலமையும், இலக்கியம் பற்றிய சிந்தனையும் அவரது கவிதைகளைத் தனித்து அடையாளப்படுத்தியது என்றும் கூறமுடியும்.

மலையக மக்களின் தொழில் வகைமைகளோடும், வாழ்க்கை முறையோடும் தம்மைப் பிணைத்துக் கொண்ட கவிஞர்களாகத் தமிழோவியன், குறிஞ்சித்தென்னவன் ஆகியோர் விளங்குகின்றனர். இந்தப் பின்புலமே அவர்களின் கவிதைகளைச் சாதாரண மக்களிடையேயும் கொண்டு சென்றது. நாட்டுப்புறப் பாடலின் சாத்தியப்பாடுகளை உள்வாங்கியே அவர்களது கவிதைகள் அமைந்துள்ளன. கூட்டுத் தொழில் முறையும் கூட்டுலய வாழ்க்கை

முறையும் இவ்வகை இலக்கியப் பிரதிகள் மேற்கிளம்புவதற்கு அடிப்படையானது.

நவீன கவிதைக்கான கூறுகளை விட, நாட்டுப்புறப் பாடலுக்கான கூறுகளே நிறைந்து காணப்படுகின்றன. அவ்வாறு அமைவு பெறுவதற்கு அம்மக்கள் சார்ந்த தொழிற் கட்டமைப்பும் முக்கிய காரணமாகும்.

கால்நூற்றாண்டு கால மலையகக் கவிதைகள் நாட்டுப்புறப் பாடலின் சாயலையே கொண்டவைகளாகும். சி.வி. வேலுப்பிள்ளையின் ஒரு சில கவிதைகள், நவீன கவிதையின் சாத்தியப்பாடுகளோடு அமைந்துள்ளன. இதற்குச் சிறந்த உதாரணமாக, "தேயிலைத் தோட்டத்திலே" என்ற கவிதையை அடையாளப்படுத்த முடியும். இக்கவிதையின் எடுத்துரைப்பு முறையும் ஏக்க உணர்வைச் சுமந்த வண்ணம் கவிதையின சொற்கள் அமைந்துள்ள முறையும் குறிப்பிடத்தக்கவை.

புழுதிப் படுக்கையிலே புதைந்த எம் மக்களை
போற்றும் இரங்கற் புகழ்மொழி இல்லை
பழுதிலா அவர்க்கோர் கல்லறை இல்லை
பரிந்தவர் நினைவு நாள் பகருவார் இல்லை.

..............................................................

ஆழப் புதைந்த தேயிலைச் செடியின்
அடியிற் புதைந்த அப்பனின் சிதை மேல்
ஏழை மகனும் ஏறி மிதித்து
இங்கெவர் வாழவோ தன்னுயிர் தருவன்.....[1]

சி.வி. வேலுப்பிள்ளையால் தொடக்கி வைக்கப்பட்ட இப்பண்பு, பின்வந்த கவிஞர்களான தமிழோவியன், குறிஞ்சித்தென்னவன் ஆகியோரிடம் முழுமைபெறவில்லை. சி.வி. வேலுப்பிள்ளையின் கவித்துவ வீச்சினைப் பிற்பட்ட காலங்களில் முன்னெடுத்துச் செல்லாமையே, மலையகக் கவிதைகளில் நவீன கவிதைக்கான சாத்தியப்பாடுகள் அமைவு பெறாமைக்கு முக்கிய காரணம் எனலாம். மலையக மக்களின் துயர்தோய்ந்த வாழ்வியலைக் கவிதைகள் மூலமாக வெளிப்படுத்தியதில் குறிஞ்சித்தென்னவனுக்கு முதன்மையான இடமுண்டு. ஆயினும், அவரது கவிதை எடுத்துரைப்பு முறை பழைய தளத்தினைச் சார்ந்தது. குறிஞ்சித்தென்னவனின் பின்வரும் கவிதையில் நாட்டுப்புற பாடல் சார்ந்த உத்தி, நவீன கவிதையின் சாத்தியப்பாட்டோடு விளங்குகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

கூடையை முதுகில் தாங்கி

கோணலாய் உடல் வளைத்து

சாடையில் விழிகள் நோக்கும்

தன்னிலை பிறழ்ந்து சென்ற

ஆடையை கரங்கள் நீண்டு

அள்ளியே மார்பை மூடும்'

வாடையில் மேனி யாட

வரையிடைக் கால்கள் ஓடும்.

"சிலீர்" என மோதுங் காற்றும்

சில்லிடும் பனியும் சேர்ந்து

குளிரினில் உடல் நடுங்க

கோதையின் கரங்கள் நீண்டு

தளிரினைப் பறிக்கும் நேர்த்தித்

தவிப்பினில் அழகு ஆடும்

கலீர் என வளைகள் சொல்லும்

கதைகளோ அனந்தம் கோடி.[2]

மலையக மக்களின் வாழ்வியலை மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொள்ளாத கவிஞர்களின் (சுபத்திரன், வ.ஐ.ச. ஜெயபாலன், உஸ்மான் மரிக்கார், சி.சிவசேகரம்) கவிதைகளில் நவீன கவிதைக்கான கூறுகள் சிறப்பாகவே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சுபத்திரனின் "மலையிலும் பெரிது சிவனுவின் மரணம்" என்ற கவிதை மலையக மக்களின் போராட்ட வாழ்வியலைப் பின்வருமாறு பதிவுசெய்கின்றது. சமூகப் போராட்டத்தை வலியுறுத்துவதற்காக கவிஞர் பயன்படுத்தும் சொற்கள் சிறப்பிடம் பெறுகின்றன.

பண்டு நிலத்தில் / பங்கல்லோ அவன் கேட்டான்

புதை குழியா கேட்டான் / மலையகத்தைச் செய்த

கலைஞன் பரம்பரையின் / இளையவனை

கொன்று புதைத்தீர் / நீர் ஏவிவிட்ட பேய் அவனைக்

கொல்லுகையில் / பூரித்த கொடியவரே

தீயேந்தும் காலம்

கர்ப்பத்தில் இருக்கின்றது.

பன்னீர்க் குடத்திற்குள்

பத்திரமாய் வளர்கிறது

விரைவில்.. / மிக விரைவில்

தீயேந்தும் காலம்

நெருப்பு மழைபொழியும்

ஆம் ஆம். / நெருப்பு மழையொருநாள்

பெய்யத்தான் போகின்றது.....[3]

பொருளாதார சுரண்டலும், அடக்குமுறைக் கலாசாரமும மேலோங்கியுள்ள மலையகச் சூழலில் இவ்வகையான கவிதைகளைக் காணமுடியாதுள்ளது. உஸ்மான் மரிக்காரரின் "கல்வாரியின் கதாநாயகர்கள்", வ.ஐ.ச. ஜெயபாலனின் "எழில்மூடி புனகை" முதலான கவிதைகள் தனித்து நோக்கத்தக்கவை. மலையகக் கவிஞர்கள் நாட்டுப்புறப் பாடலின் சாயலை மறுபிரதி செய்யாமல், அவற்றை நவீன கவிதையின் மொழிதலுக்கு ஏற்ப ஓர் உத்தியாகக் கையாளுவது அவசியமானது.

மலையகப் புனைகதை இலக்கிய வடிவத்தில் காணப்படும் "யதார்த்த அழகியல்" கவிதைகளில் செழுமை பெறாமைக்கு அதன் உள்ளடக்கமே முதன்மையான காரணமாகும். 1990 க்குப் பின்னர் வெளிவந்த சு. முரளிதரனது ஒரு சில கவிதைகள் குறிப்பிடத்தக்கன. முரளிதரனது "ஹக்கூகவிதைகள்" அவரைத் தனித்து அடையாளங்காட்டுகின்றன. தியாகயந்திரங்கள், கூடைக்குள் தேசம், தீவகத்து ஊமைகள்

முதலானவற்றில் அமைந்துள்ள ஒரு சில கவிதைகள் அழகியல் செழுமைபெற்று விளங்குகின்றன.

"மலைகளே / தேயிலை மரங்களே
நீங்கள் சொன்னால; / போதும்
பிரியத்தான் வேண்டுமா / உரிய பூமியை?
மண்டபம் "கேம்ப்" புக்கு
போய்த்தான்
மண்டையை போட / வேண்டுமென்பதில்லை
ஒப்பந்தமுள்முடி / சூடியே ஆகவேண்டுமென
ஒட்டாரம் / பிடித்தால்
வாருங்கள் தோழர்களே / அன்னைக் கர்ப்பத்தில்
மீண்டும் புகுந்துகொள்வோம்
அப்பாக்கள் இளமையாகிப் பதில்
சொல்லட்டும். [4]

மலையகக் கவிதைகள் குறிப்பிட்ட தொழில் சார்ந்த வாழ்வியல் அனுபவமாகத் திகழ்ந்தாலும், அவை கருத்தியல் பிரசாரங்களாகவே விளங்குகின்றன. தமிழோவியன், குறிஞ்சித் தென்னவன் ஆகியோரின் பெரும்பாலான கவிதைகள் இவ்வகைமையைச் சார்ந்தவையாகும். தற்காலத்தில் வெளிவரும் கவிதைகளும் இவ்வகைப் போக்கிலிருந்து விடுபடாமல் இருப்பது கவலைக்குரியது.

தொழிற்சங்கங்களின் வகிபங்கு முனைப்புப் பெற்ற காலப்பகுதியில், அந்நிறுவனம் சார்ந்த கருத்தியல்களையே கவிதைகள் மூலம் வெளிப்படுத்தினர். சி.வி. வேலுப்பிள்ளை, தமிழோவியன், குறிஞ்சித்தென்னவன் ஆகியோரது ஆரம்ப காலக் கவிதைகளில் இப்பண்பினைக் காணலாம். இவர்களது கவிதைகள் எந்தத் தொழிற்ச்சங்கத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை என்று நோக்குவது பொருத்தமானதாகத் தெரியவில்லை. பெரியங்கங்காணி முறையிலான ஆதிக்கம் உடைந்து, தொழிற்சங்கங்களின் ஆதிக்கம் முனைப்புப் பெற்ற காலத்திலே மேற்குறித்த மூன்று கவிஞர்களும் படைப்புலகுக்கு நன்கு அறிமுகமாயினர். இதனால், தொழிற்சங்கங்களின் ஆதிக்கத்திற்கு எதிரான கருத்தியலை வெளிப்படுத்தாமல், அதன் செயற்பாட்டுக்கு ஏற்ப தம்மையும், தமது எழுத்தையும் வடிவமைத்துக் கொண்டனர் என்பதே பொருத்தமானது. இதன் காரணமாகவே அவர்களது கவிதைக்கான அனுபவப்புலம் குறுகிய வட்டத்துக்குள்ளேயே அமைந்துவிட்டது.

மலையக நாட்டார் பாடல்களில் கங்காணிமார்களின் ஆதிக்க மனோபாவம் எவ்வாறு இழையோடுகின்றனவோ, அதுபோலவே கவிதைகளில் தொழிற்சங்கங்களின் ஆதிக்க மனோபாவம் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவ் ஆதிக்க மனோநிலையை உடைத்தெறியும் வகையில் மலையகக் கவிதை முனைப்புப் பெறவில்லை என்பது கவனத்திற்குரியதாகும். இவ்வகைச் சிந்தனைகளை உள்வாங்கிக் கொண்டு மலையகக் கவிதை வெளிவரும் போது, பல புதிய தளங்களை நோக்கி விரிவடைய

முடியும். அத்தோடு, கவிதைக்கான அனுபவப்புலத்தை விரிவுபடுத்தவும் முடியும்.

மலையகக் கவிஞர்கள் குறிப்பிட்ட ஒரு சித்தாந்தப் பின்னலுக்குள் இருந்து கொண்டு கவிதைகளை எழுத முற்படுவதனால், அவை கருத்தியல் பிரசாரங்களாக வெளிவந்து விடுகின்றன. படைப்புக்கும், படைப்பாளிக்கும் சித்தாந்தத் தொடர்பு அவசியமாக இருப்பினும், இலக்கியம் இலக்கியமாக அமைவு பெறுவது அவசியமானது. எல்லா கலை நியமங்களும் கருத்தியலையே வெளிப்படுத்துகின்றன. அக்கருத்தியலைச் சுமந்துவரும் இலக்கியம் "வடிவச்செழுமை" பெறுவதும் முக்கியமானது. மலையகச் சூழலில் சிறுகதை, நாவல் முதலான இலக்கிய வடிவங்கள் இலக்கியச்செழுமையும், உள்ளடக்கக் கனதியும் கொண்டு விளங்குகின்றமை மனங்கொள்ளத்தக்கது.

ஒரு கவிதையின் அடிப்படை உயிர், அது கொண்டமையும் உணர்வுப் பகிர்வே ஆகும். உணர்வினை மொழிக்கலையில் பதிவுசெய்யும் பொழுதே கவிதை, கவிதைக்கான சாத்தியங்களைப் பெற்றுவிடுகின்றது. ஏனைய கலை இலக்கிய வடிவங்களில் இருந்து கவிதையை வேறுபடுத்துவதும் இதுவே எனலாம். இவ்வகைப் பண்பினை மலையகக் கவிதைகளில் காணமுடியாதுள்ளது. சி.வி. வேலுப்பிள்ளையின் சில கவிதைகளிலும், மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொள்ளாத கவிஞர்களின் மலையக வாழ்வியல் தொடர்பான கவிதைகளிலும் இப்பண்பினை ஓரளவு காணமுடிகின்றது. சொற்களை உடைத்துப் போடுவதும் தேவையான அளவு அவற்றை நீட்டுவதுமே மலையகக் கவிதைகளில் பரக்கக் காணலாம். யாப்பின் மூலம் எழுதப்படும் கவிதைகளிலும் இப்பண்பே மேலோங்கியுள்ளது. யாப்பினால

எழுதப்பட்ட பெரும்பாலான கவிதைகள் முற்றுப்பெறாத எச்சவினைகளாகவே அமைந்துள்ளன.

மேற்குறிப்பிட்ட போக்குகளிலிருந்து விடுபட்டு, சமகாலக் கவிதைகளின் செல்நெறியோடும், மொழிதல் தன்மையோடும் இணைந்து செல்வது அவசியமானது. மலையகத்தைப் பொறுத்தமட்டில், இன்று வாழ்வியல் சார்ந்த அனுபவங்களும், வாழ்வியல் புலமும் விரிவுபெற்றுள்ளன. அவ்வாழ்வியலின் விரிவிற்கு ஏற்ப, அவற்றைப் பதிவுசெய்யும் இலக்கியமும் குறிப்பாகக், கவிதையும், அதன் எடுத்துரைப்பு முறையும் புதிய தளங்களை நோக்கிப் பயணிப்பது அவசியமானது. இவ் அவசியத்தின் சாத்தியப்பாடுகள் நவீன கவிதை பற்றிய புரிதலும், அது தொடர்பான வாசிப்பும், விமர்சனக் கருத்துப் பரிமாறலின் மூலமாகவுமே எட்டமுடியும். நவீன கவிதை தொடர்பான வாசிப்பு அதிகரிக்கும் போதே, மேற்குறித்த தடைகளை உடைத்துக்கொண்டு மலையகக் கவிதை விரிவுபெறமுடியும் என்பது இங்கு மனங்கொள்ளத்தக்கது.

## அடிக்குறிப்புகள்

1. வேலுப்பிள்ளை, சி. வி. (1969) தேயிலைத் தோட்டத்திலே, செய்தி பதிப்பகம். பக் 5-6.
2. சாரல்நாடன், (2007) (தொகுப்பு) குறிஞ்சித்தென்னவனின் கவிச்சரங்கள், கொட்டகலை, சாரல்வெளியீடு. ப. 84.
3. சுபத்திரன், (1997) சுபத்திரன் கவிதைகள், மட்டக்களப்பு, பூவரசுகள் வெளியீடு, பக்.143- 144
4. முரளிதரன், சு. (2005) தீவகத்து ஊமைகள், மலையக வெளியீட்டகம், பக். 12-13.

பெ. சரவணகுமார், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

# மலையகப் புனைவுகளில் யதார்த்தமும் அழகியலும்

(ஒரு கூடைக் கொழுந்து, நாமிருக்கும் நாடே ஆகிய சிறுகதைத் தொகுப்புகளை முன்னிறுத்திய ஒரு பார்வை)

**"எந்தவொரு மனிதரும் தனி ஆளாக இல்லை. பருப் பொருட்களாலும், கருத்தாக்கங்களாலும் சூழப்பட்டுள்ள இந்த மனிதர்களின் பேச்சும் தனிப்பேச்சாகக் கருதுவதற்கில்லை. ஒவ்வொருவருக்குள்ளிருந்தும் ஒரு சமூகம் பேசுகின்றது. ஒவ்வொருத்தர் நாக்கும் ஒரு சமூக நிறுவனம் எனத் தோன்றுகின்றது. ஒவ்வொருத்தர் உடலசைவுகூட அவர் சார்ந்த சமூகத்தின் - பண்பாட்டின் அசைவாகப்படுகின்றது. இலக்கிய எழுத்தும் இப்படித்தான் எனத் தோன்றுகின்றது'.[1]**

ஈழத்துப் புனைகதை வரலாற்றில் பிராந்தியங்களை மையப்படுத்திய கதைசொல்லல் மரபு 1960 களுக்குப் பின்னரே செழுமைபெற்றது. குறிப்பாக யாழ்ப்பாணம், கிழக்கிலங்கை, மலையகம் சார்ந்த புனைகதை எழுத்துக்கள் வெளிவரத் தொடங்கின. ஒவ்வொரு பிராந்தியத்துக்கும் உரிய சமூக, பொருளாதார, உற்பத்தி உறவுநிலைகளை அடிப்படையாகக் கொண்டு படைப்பிலக்கியங்கள் முகிழத்தொடங்கின. இதனால் பிராந்தியம் சார்ந்த தொழில் முறைகள், வழிபாட்டுச் சடங்குகள், பேசசு வழக்கு முறைகள், அதிகாரப் படிநிலைகள், சாதியக் கட்டுமானங்கள் என்பன பதிவுசெய்யப்பட்டன. மலையகச் சிறுகதை வரலாற்றைப் பொறுத்தமட்டில்

பெ. சரவணகுமார், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

1970 களிலேயே இப்பண்பு முனைப்புப் பெற்றது. சுமார் பத்து வருடங்களுக்குப் பின்னரே அக்கதைகள் தொகுப்பு வடிவம் பெற்றன. அவ்வகையில் 1970 – 1990 களுக்கும் இடைப்பட்ட காலத்தில் வெளிவந்த சிறுகதைத் தொகுப்புகளாக கதைக்கனிகள் (1971), நாமிருக்கும் நாடே (1979), ஒரு கூடைக்கொழுந்து (1980), நமக்கென்றொரு பூமி (1984), வாழ்க்கைச் சுவடுகள் (1987), மேகமலைகளின் ராகங்கள் (1988), அவன் ஒருவனல்ல (1989), கோடிச் சேலை (1989) என்பன குறிப்பிடத்தக்கன. இத்தொகுப்புக்களில் பெருந்தோட்ட மக்கள் சார்ந்த வாழ்வியல் ஊடுபாவாக அமைந்தாலும் அவ்வாழ்வியலைப் பதிவுசெய்வதில் ஒவ்வொரு பிரதியும் தனித்துவமானவைகளாக விளங்குகின்றன.

மலையகப் பிராந்திய புனைவுக்குரிய அதிகபட்சச் சாத்தியங்களோடு வெளிவந்த புனைவுகள் குறைவாகவே உள்ளன. இவ்வகைப் பின்புலத்தில் பிராந்திய இலக்கியத்துக்குரிய உருவமைதியிலும், உள்ளடக்க அமைதியிலும் வெளிவந்தவைகளுள் தெளிவத்தை ஜோசப்பின் நாமிருக்கும் நாடே, என். எஸ். எம். ராமையாவின் ஒரு கூடைக்கொழுந்து ஆகிய சிறுகதைத் தொகுப்புகள் முதன்மையான இடத்தினைப் பெறுகின்றன. இவ்விரு தொகுப்புகளில் பதிவுசெய்யப்படும் மலையக மக்களின் யதார்த்த வாழ்வும் அவ்வாழ்வுப் புலத்துக்குரிய அழகியல் ஆக்குதிறனும் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இக்கட்டுரையின் பொருண்மை கருதி யதார்த்தம், இலக்கியத்தின் அழகியல் பற்றிச் சுருக்கமாக இங்கு நோக்குவது அவசியமனதாகும்.

ஒரு கலைப்படைப்பு சமூக அசைவியக்கத்தை மிகையின்றி வெளிப்படுத்தல் வேண்டும் என்பது யதார்த்தவாதத்தின் அடிப்படையாகும். குறிப்பிட்ட ஒரு சூழமைவில் நிகழ்ந்த, நிகழ்ந்து வருகின்ற மாறுதல்களைப் பதிவுசெய்வதும் அம்மாறுதலின் உடன் நிகழ்வாய் மொழியைக்

கையாளுவதும் யதார்த்த இலக்கியப் பிரதியின் முக்கிய பண்பாகும். "இப்பிரதிக்கு அடித்தளமாகச் சமூக முரண்பாடுகளும், அதன் காரணமாக ஏற்படும் மாறுதல்களும் விளங்குகின்றன. முரண்பாடுகளையும் மாறுதல்களையும் கலைப்படைப்பின் கருப்பொருளாக யதார்த்தவாதம் ஏற்றுக்கொள்கின்றது."[2] எனவே, இலக்கியப் பிரதியின் யதார்த்தம் என்பது சமூக இயக்கப்பாட்டின் உண்மைத் தன்மையைப் பிரதிபலிப்பதாக இருத்தல் வேண்டும் என்று கூறலாம்.

ஓர் இலக்கியப் பிரதியின் அழகியல் உருவ, உள்ளடக்க இணைவிலேயே தங்கியுள்ளது. ஒரு படைப்பின் அழகியல் என்பது அது பிரதிபலிக்கும சூழலுக்கும் அச்சூழலின் உற்பத்தி உறவுநிலைக்கும் அவற்றுக்கிடையிலான மனிதர்களின் ஊடாட்டத்திற்கும் ஏற்ப அமைந்து விடுகின்றது. இதன் காரணமாகவேதான் பிராந்திய இலக்கியங்களின் தனித்துவம் கட்டமைக்கப்படுகின்றது என்றும் கூறமுடியும். 'அழகியல் என்பது கலை ஏற்படுத்தும் பாதிப்பும் அப்பாதிப்பை ஏற்படுத்துவதற்குக் கலைஞன் கையாளும் வழிமுறைகளும் அவை சம்பந்தமான கொள்கைகளும் ஆகும். சில பல அம்சங்களில் அழகியல் கொள்கை கால, இட, சமூக, வர்க்க அடிப்படையில் வேறுபடலாம். வேறுபடுகின்றன."[3] ஆகவே, ஒவ்வொரு பிராந்தியத்துக்குமான இலக்கிய வரலாறு, சமூகப் படிநிலைகள், மொழிக்கையாளுகை என்பன இலக்கியத்தின் அழகியல் கூறுகளில் அதிக செல்வாக்குச் செலுத்துகின்றன எனலாம்.

இக்கட்டுரையில் பேசப்படும் புனைகதை ஆசிரியர்களான தெளிவத்தை ஜோசப், என். எஸ். எம். ராமையா இருவரும் சமகாலத்திலேயே சிறுகதைத் துறைக்குள் நுழைந்தவர்கள். அதிகமான கதைகளை எழுதியவர்களாக இவர்களை நாம் அடையாளப்படுத்த முடியாது. இவ்விருவரும் பெருந்தோட்டத் துறை சார்ந்த வாழ்வியல் புலத்திலிருந்து

தமது கதைசொல்லல் முறையை வடிவமைத்துக கொண்டனர். ஒரேவகையான களம், வாழ்வு சார்ந்து இயங்யிருந்தாலும் சமூகப் பிரச்சினைகளைப் புனைகதையாக ஆக்குவதில் இவ் இருவருக்கிடையேயும் தனித்துவமான கதைசொல்லல் முறை அமைந்திருப்பதை அவதானிக்கமுடியும்.

ஒரு படைப்பாளி தான் எடுத்துக்கொண்ட கதைக்கருவை (Theme) புனைகதை வெளிக்குள் கொண்டு வருவதிலும் அதன் சாத்தியப்பாட்டைக் கையாள்வதிலுமே புனைவின் வெற்றி தங்கியுள்ளது. சமூகவெளிக்குள் நடமாடும் மனிதர்களையும் அவர்களது செயற்பாடுகளையும் தம்படைப்பு வட்டத்துக்குள் கொண்டுவருவதும் அவர்களது சூழலமைவை பிரதிக்குள் காட்சிப்படுத்துவதும் முக்கியமானது. இத்தன்மைகளே புனைவுசார் படைப்பாளிகளையும், அவர்களது படைப்புகளையும் வேறுபடுத்திக் காட்டுகின்றன. அவ்வகையில், தெளிவத்தை ஜோசப், என்.எஸ்.எம். ராமையா ஆகியோர் எவ்வாறு இயங்கி வந்திருக்கின்றனர் என்பதை ஆராய்வது பயனுடையது. நாமிருக்கும் நாடே, ஒரு கூடைக்கொழுந்து ஆகிய இரு தொகுப்புகளிலும் மேலோங்கிருக்கும் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- ✓ தொழில் களமும் வாழ்வும்
- ✓ லயவாழ்க்கை முறையும் கதை சொல்லும் திறனும்
- ✓ ஆண் - பெண் உறவும் பாத்திர வார்ப்பும்
- ✓ கதை நிகழ் இடமும் காட்சிப்படுத்தலும்

பெருந்தோட்டத்துறையில் பல்வேறு தொழிற்களங்கள் அமைந்துள்ளன. தொழில் களம் வேறுபடும் பொழுது அதனோடு தொடர்புடைய தொழில்முறையும் தொழிலாளர் குழுமமும் மாறுபடுவதைக் காணலாம். ஒவ்வொரு களத்துக்கும் ஏற்றவகையில் பிரச்சினைகள் வடிவமாறுதல் பெறுவதைக் காணலாம். அவ்வகையில், தெளிவத்தை ஜோசப்பின் கூனல் என்ற கதை தேயிலைத் தொழிற்சாலையைக் (Tea factory) கதை நிகழிடமாகக் கொண்டது. அதனோடு தொடர்புடைய பிரச்சினைகளைப் படம்பிடித்துக் காட்டுகின்றது. கதைநிகழிடத்தை வாசகருக்கு அறிமுகம் செய்யும் விதமும் கதையை நகர்த்தும் முறையும் சிறப்பாக அமைந்துள்ளன.

> 'கிரிக்கெட் மட்டைபோன்ற கைமட்டையால், படங்குத் தட்டுக்களின் இடைவெளியில் கைநீண்ட மட்டும் உள்நீண்டு கொழுந்து பரப்பும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றனர் மெத்தையாட்கள். குவியல் குவியலாய் கிடக்கும் தேயிலைத் தளிர்களை அவர்கள் தட்டிவிடும் வேகமும் இலை மேல் இலை கிடக்காமலும் இடைவெளியும் விழாமலும் பரப்பிவிடும் லாவகமும் மூக்கின்மேல் விரல் வைக்கத் தோன்றும்.'[4]

இவ்வகைக் கதைசொல்லல் முறையில் புனையப்பட்ட தெளிவத்தையின் மற்றுமொரு கதையாக 'பாவசங்கீரத்தனம்' விளங்குகின்றது. என். எஸ். எம். ராமையாவின் பெரும்பாலான கதைகள் கொழுந்து பறிக்கும் இடத்தைக் களமாகக் கொண்டவை. அக்களத்துக்கே உரிய தொழில் முறையினையும் சொல்லாடல் முறையினையும் வெளிப்படுத்தும் பாங்கு அவரைத் தனித்து அடையாளப்படுத்துகின்றது. அவ்வகையில், ஒரு கூடைக்கொழுந்து, நிறைவு என்பன கதைசொல்லல் திறனில் தனித்து விளங்குகின்றன. என். எஸ். எம். ராமையாவின் கதைசொல்லும் திறனுக்குப் பதச்சோறாக விளங்குவது அவரது ஒரு கூடைக்கொழுந்து என்ற கதையாகும். பல

முடிச்சுகளோடும் எதிர்பார்ப்புகளோடும் கதை கட்டமைக்கப்பட்டுள்ளது. "அக்கா எனக்கு எது நெறை" என்ற லட்சுமியின் கேள்வியோடு கதை நகரத்தொடங்கி பல முடிச்சுகளைக் கொண்ட கதைப் பின்னலில் வளர்கிறது. இக்கதையில் பதிவுசெய்யப்படும் பெண்களது பேச்சு வழக்குச் சொற்கள் கதையை யதார்த்தப் புனைவாக்குகின்றன.

"இங்கேவாடி லெட்சுமி! என்கிட்டே நிறைதாரேன்"

"ஐயோ! லெட்சுமிக்குட்டி! என்கிட்டே நிற்கட்டுண்டி"

"என்னடி ஆயா அதிசயமா இருக்கு!

என்ன இந்தப் பக்கமா காத்து வீசுது!"

"ஒப்புராணை! ஒண்ணுமில்லேங்கிறேன்"

"சரி... சரி .. காலங்காத்தாலே ஆணையிடாதே"[5]

முதலான சொல்லாடல்கள் கதைநிகழும் இடத்துக்கும் தொழில் முறைக்கும் ஏற்றவகையில் லாவகமாக அமைந்துள்ளன. ஒரு கூடைக்கொழுந்து என்ற கதை லெட்சுமியைப் பிரதான பாத்திரமாகக் கொண்டு பின்னப்பட்டுள்ளது. கதை நிகழும் களமும் அக்களத்தில் இயங்கும் பாத்திரங்களும் உண்மைத் தன்மை நிரம்பியவைகளாக அமைந்துள்ளன. ஒவ்வொரு பாத்திரத்துக்கும் உரிய அதிகாரம், அடக்குமுறை என்பவற்றைப் பாத்திரங்களின் சொல்லாடல்கள் பதிவுசெய்து விடுகின்றன. இவ்வகையில் அமைந்த தெளிவத்தை ஜோசப்பின் 'தீட்டுரொட்டி' கதையும் இங்கு மனங்கொள்ளத்தக்கது.

பிராந்தியப் புனைவுகளில் பாத்திரவார்ப்பும் சொல்லாடலும் முக்கிய இடத்தை வகிக்கின்றன. புனைவினை யதார்த்தக் கூறுகள் நிரம்பியவைகளாக ஆக்குவதில் பாத்திரவார்ப்புக்குச் சிறப்பான இடமுண்டு. சமூக வெளியில்

இயங்கும் மனிதர்கள் சொல்லாடல் மூலமாகவே புனைவில் நகர்ந்து செல்கின்றனர். இந்த நகர்வின் உண்மைத் தன்மை பாத்திரவார்ப்பிலேயே வெளிப்படுகின்றது. பாத்திரத்தின் வார்ப்பும் அவ்வார்ப்புக்கு ஏற்ப உரையாடலைப் பயன்படுத்துவதும் முக்கியமானது. அவ்வகையில், தெளிவத்தையின் பாட்டி சொன்ன கதை (பாட்டி) கூனல் (டீமேக்கர்) தீட்டுரொட்டி (லெட்சுமி) கதைகளிலும் என்.எஸ்.எம் இராமையாவின் ஒரு கூடைக்கொழுந்து (லெட்சுமி) நிறைவு (அலமேலு) தீக்குளிப்பு, (ரஞ்சிதம்) வேட்கை (ரங்கையாக் கிழவன்) பிஞ்சுக் குவியல் (காமாட்சிக் கிழவி) கதைகளிலும் பாத்திரங்களின் இயல்பான இயக்கத்தைக் காணமுடிகின்றது.

> "முழங்காலைப் பிடித்துக்கொண்டு படிகளில் ஏறிவந்த ரங்கையாக் கிழவன், கடைசிப்படியில் நின்று வாயால் ஊதிக்கொண்டான். பத்துப்பதினைந்து படிகள் அவன் ஏறியதில், அவனுடைய கிழட்டுக் கால்கள் வெடவெடத்தன"[6]

> 'சிலுப்பிக் கொண்டு நின்ற முன் மயிரில் சிட்டு சிட்டாய் ஒட்டிக்கிடந்த சாம்பலைத் தட்டிய வண்ணம் வெளியே வந்தாள் கூனிப்பாட்டி. மூடியும் மூடாமலும் கிடந்த அவளுடைய விலாப்புறம் மேடும் பள்ளமுமாய் கூரைத் தகரம் போல் கோடுபாய்ந்து கிடந்தது'.[7]

பிராந்தியப் புனைவுகள் குறிப்பிட்ட மக்களின் வாழ்க்கைப் புலத்தை அடிப்படையாகக் கொண்டவை. அவ்வப் பிராந்தியத்துக்குரிய வாழ்வியலை மொழிக்கலையின் வெளிக்குள் கொண்டு வரும்போது பல தனித்துவமான சொற்களும் சொற்தொடர்களும் வந்து விழுகின்றன. மலையகப் புனைவுகளில் இப்பண்பு சற்றுத் தூக்கலாகவே விளங்குகின்றது. வேறுபட்ட தொழில் முறைகள், தொழிற்பெயர்கள், பேச்சு வழக்குச் சொற்கள் என்பன இவ்வேறுபாட்டுக்கு அடிப்படையாக அமைகின்றன. படைப்பில் பாத்திரம் பேசும் பேச்சுக் குறித்த சமுதாயத்தின் பேச்சாக அல்லது வெளிப்பாடாக அமைந்து விடுகின்றது. இப்பண்பே இலக்கியப்

பிரதியை யதார்த்தமாக்குகின்றது. அவ்வகையில் தெளிவத்தை ஜோசப், என்.எஸ்.எம். ராமையா ஆகியோரது கதைகளில் இவ் அம்சத்தைக் காணமுடிகின்றது.

> ‘படங்குத் தட்டுகளிலே பரப்பப்பட்டிருந்த வாடிய கொழுந்து வழித்துக் கொட்டப்படுகின்றது. கைமட்டையால், நிறுத்து மேலேறும் பச்சைக்கொழுந்து வாட்டதத்தட்டுகளில் பரப்பப்பட்டிருக்கின்றது.’[8]
>
> “அம்மாயி! பொலி சொல்றியா, கொழுந்தைப் போட்டுக்கிறேன்”
>
> ‘விரிக்கப்பட்டுக்கிடந்த படங்குச் சாக்குக்கு முன்னால் போய் நின்றுகொண்டார். தராசுமரம், வந்தது. தட்டுக் கூடை வந்தது’.[9]

மேற்காட்டிய உதாரணங்களில் வருகின்ற படங்குத்தட்டு, கைமட்டை, வாட்டத்தட்டு, பொலி, படங்குச்சாக்கு, தராசுமரம், தட்டுக்கூடை முதலான சொற்பிரயோகங்கள் தொழில் நிகழும் களத்துக்கும் சந்தர்ப்பத்துக்கும் ஏற்ப மாறுபடுவதைக் காணலாம். தொழிற்களத்தோடு தொடர்புடைய சொற்களிலும் பேச்சு வழக்கைக் கையாளுவதிலும் இவ்வேறுபாட்டை நாம் அவதானிக்கலாம். இந்த அம்சங்களை மலையகச் சிறுகதைப் பரப்பில் இயல்பாகப் பதிவுசெய்தவர்களாகப் தெளிவத்தை ஜோசப்பையும், என்.எஸ்.எம். ராமையாவையும் அடையாளப்படுத்தமுடியும்.

ஒரு படைப்பாளியின் கலையாக்க நெறியில் அவன் சார்ந்துள்ள சமூகச்சூழல் எவ்வாறு பதிவுசெய்யப்படுகின்றது என்பது முக்கியமானது. இக்கலையாக்கத்துக்குப் பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் லாவகமாகக் கையாளும் திறன் துணைபுரிகின்றன. குறித்த சமூகச்

சூழலை வெளிப்படுத்துவதற்குப் பெரும்பாலான புனைகதை ஆசிரியர்கள் வருணனையைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். புனைகதை ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில் இவ் அம்சம் முதன்மையான இடத்தினைப் பெறுகின்றது. அவ்வகையில், தெளிவத்தை ஜோசப், என்.எஸ். எம். ராமையா ஆகியோரது கதைகளில் இப்பண்பு ஓரளவு வெளிப்படுவதைக் காணலாம். இக் கலையாக்க நெறிக்கு ஆசிரியர்கள் கையாளும் படிமம் நிறைந்த சொற்றொடர்கள் மேலும் செழுமையைக் கொடுக்கின்றன.

> "வானம் வரண்டுதான் இருந்தது. வெளுத்த நீல வெளியில் காற்றில் பறக்கும் பஞ்சுத் துண்டுகள் மாதிரி சிறு மேகத்துண்டுகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக நீந்தின".[10]

> 'அந்தி கதிரவன் சிந்த மறைந்த செவ்வொளிக் குழம்பல் மூழ்கித் திளைத்தன , வானத்தை எட்டித் தொட்டுக் கொண்டிருந்த தூரத்து மலைகள்"

> "*வழு வழுவென்று வான் முட்ட நின்ற கருப்பந்தலை மரங்களினூடே* கருஞ்சாரையாய் ஒளித்தும் மறைத்தும் ஓடிக்கொண்டிருக்கின்றது அந்தத் தார் றோட்டு".[11]

தெளிவத்தை ஜோசப்பின் 'சோதனை' என்ற கதை குறிப்பிட்ட காலகட்டத்தின் சமூக, வரலாற்றை வெளிப்படுத்துகின்றது. பெருந்தோட்டத துறைப பாடசாலைகள் தோட்டப்புறக் கட்டுப்பாட்டுக்குள் இருந்த காலப்பகுதியைப் பதிவுசெய்கின்றது. இக்கதையில் சொல்லப்படும் யாழ்ப்பாணத்து மாஸ்டர் பற்றிய கருத்து அவரது அர்ப்பணிப்புணர்வையும், சமூக நோக்கையும் காட்டுகின்றது. அதேபோன்று "ஒரு தோட்டத்துப் பையன்கள் படம் பார்க்கப் போகிறார்கள்' என்ற கதையும் அக்காலத்தில் அறிமுகமான சினிமாக் கலாசாரத்தின் பாதிப்பைக் காட்டுகின்றது.

கால மாற்றத்தையும் அதனால் ஏற்படும் சமூகச் சிதைவினையும் மிக நேர்த்தியாக அக்கதை வெளிப்படுத்துகின்றது.

'உச்சியில் நின்று பார்த்தால் அடிவானம்வரை பசுமையாய் அலை எழுப்பிக்கொண்டு கிடந்த பரம பூமிதான்!

இன்று காய்ந்து கிடக்கிறது. கரிந்து கிடக்கிறது.

பட்டணத்துத்தெருக்கள்போல் பூமியைப் பிரதிபலிக்கின்றது'.[12]

என்.எஸ்.எம்.ராமையாவின் 'வேட்கை' என்ற கதை 'காஸ்லைட்'டைப் பின்னணியாகக் கொண்டது. 'காஸ்லைட் கிழவனைக் காந்தமாக இழுத்தது" என்று கதைசொல்லி கூறுவது குறித்த சமூகத்தின் நிலைமையைக் காட்டுகின்றது. ஒளிதருகின்ற காஸ்லைட்டின் மூலம் சமூக விடுதலையின் அவசியத்தை இக்கதை வலியுறுத்துகின்றது. 'தீக்குளிப்பு' கதை கொழுந்து பறிக்கும் ரஞ்சிதம் என்ற பெண்ணின் அவலத்தைப் பேசுகின்றது. பொருளாதார வசதியின்மைகள் ரஞ்சிதத்தின் உணர்வுகளை எவ்வாறெல்லாம் தாக்குகின்றன என்பதைக் கதைசொல்லி சிறப்பாகவே வெளிப்படுத்தியுள்ளார். பாத்திரத்தின் மனநிலைக்கு ஏற்பவும், கதை நிகழும் சந்தர்ப்பத்துக்கு ஏற்பவும் கதாசிரியர் மொழியை மிக லாவகமாகக் கையாண்டுள்ளார். உணர்வுக்கும் - அறிவுக்கும் - உறவுநிலைக்கும் இடையிலான போராட்டம் இக்கதையில் மேலோங்கியுள்ளது. இவ்வாறு சமூக விடுதலையை மையப்படுத்திய என்.எஸ்.எம். ராமையாவின் பெரும்பாலன புனைவுகள் யதார்த்தத்துக்கு மாறுபடாமல் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மலையகச் சிறுகதை வரலாற்றைப் பொறுத்தமட்டில், பல்வேறு புனைகதைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. அவற்றில் சில உருவத்திலும் சில உள்ளடக்கத்திலும் சிறப்புப் பெற்றிருக்கின்றன. இவற்றிலிருந்து மாறுபட்டு உருவத்தையும், உள்ளடக்கத்தையும் தமது கதைசொல்லும் ஆக்குதிறனால் செழுமைப்படுத்தியவர்கள் ஒரு சிலரே எனலாம். அந்த ஒரு சிலரில் என்.எஸ்.எம். ராமையா, தெளிவத்தை ஜோசப் ஆகியோர் தமது புனைவுகளை ஆக்குவதில் முதன்மை பெறுகின்றனர். ஈழத்துப் புனைகதை வரலாற்றின் செல்நெறியோடும், அவர்களது புனைவுகள் ஒப்பிட்டுப் பார்க்கத்தக்கவை. அவ்வகையில், மலையகப் பிராந்தியத்தின் வாழ்வையும், அவ்வாழ்வுப் புலத்துக்குரிய இயங்கு தன்மையையும் பதிவுசெய்த புனைகதை ஆக்கங்களாக நாமிருக்கும் நாடே, ஒரு கூடைக்கொழுந்து ஆகிய சிறுகதைத் தொகுப்புகளை அடையாளப்படுத்தமுடியும்.

அடிக்குறிப்புகள்

1. பஞ்சாங்கம், க. புனைவுகளும் உண்மைகளும், காவ்யா வெளியீடு, சென்னை. 2006.ப.240.

2. இ.எஸ். (தொகுப்பு) இலக்கிய இஸங்கள், அகரம் பதிப்பகம், தஞ்சாவூர். 1994.ப.146.

3. நுஃமான், எம்.ஏ. மார்க்சியமும் இலக்கியத் திறனாய்வும், அன்னம் பதிப்பகம், சிவகங்கை. 1987, ப.21.

4. தெளிவத்தை ஜோசப், நாமிருக்கும் நாடே, வைகறை வெளியீடு, 1979. பக். 13 -14.

பெ. சரவணகுமார், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

5. ராமையா, என்.எஸ்.எம். ஒரு கூடைக்கொழுந்து, வைகறை வெளியீடு, 1979.ப.69.

6. மேலது, ப. 14.

7. தெளிவத்தை ஜோசப், மு.கு.நூல். ப.101.

8. மேலது, ப.113.

9. ராமையா, என்.எஸ்.எம். மு.கு.நூல். பக். 70 -71.

10. மேலது, ப.9.

11. தெளிவத்தை ஜோசப் மு.கு.நூல். ப.17.

12. மேலது, பக். 37 - 38.

# சி. பன்னீர்ச்செல்வத்தின்

## ஒரு சாலையின் சரிதமாய் விரியும் கவிதை முகங்கள்

ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பில் மலையக இலக்கியம் தனக்கெனத் தனித்துவமான பண்புகளைக் கொண்டதாகவும், குறிப்பிடத்தக்களவு இலக்கியத் தொகுதியை உடையதாகவும் விளங்குகின்றது. கவிதை, சிறுகதை, நாவல், நாடகம் முதலிய துறைகளில் வளர்ந்துள்ளதையும் வளர்ந்து வருவதையும் காணமுடிகின்றது. இவ்விலக்கிய வடிவங்களுள் கவிதைத்துறை குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவகையில் வளர்ந்துள்ளது. அவ்வகையில் மலையக் கவிதைப் பரப்புக்கு வளம்சேர்த்த படைப்பாளிகளுள் ஒருவராகப் பன்னீர்ச்செல்வம் விளங்குகின்றார். மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பன்னீர்ச்செல்வம் தற்போது தமிழகத்தில் வசித்து வருகின்றார். ஈழத்து இலக்கியச் செல்நெறியில் கவிதை, சிறுகதை முதலிய தளங்களில் இயங்கித் தனது படைப்பாளுமையைப் பதிவுசெய்தவர். இருபதாம் நூற்றாண்டு ஈழத்துச் சிறுகதைகள், மலையகச் சிறுகதைகள், கதைக்கனிகள், சுதந்திரன் சிறுகதைத் தொகுப்பு, Dream boat என்ற ஆங்கிலச் சிறுகதைத் தொகுப்பு ஆகியவற்றில் இவருடைய ஆக்கங்கள் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு, இவரது சிறுகதைகளை உள்ளடக்கிய தொகுப்பு "திறந்த வெளிச் சிறைகள" என்ற பெயரில் வெளிவந்துள்ளது.

பெ. சரவணகுமார், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

புனைகதை இலக்கிய வடிவங்களூடாகவே பெரும்பாலும் அறிமுகமான பன்னீர்செல்வம் தன் படைப்பாளுமையைக் கவிதைத் துறையிலும் பதிவுசெய்தவராக விளங்குகின்றார். அவ்வகையில், மலையக அரசியல் பண்பாடு தந்த அனுபவங்களையும், தமிழகப் பண்பாடு தந்த அனுபவங்களையும் வெளிப்படுத்தும் படைப்பாக்கமாகப் பன்னீர்செல்வத்தின் "ஒரு சாலையின் சரிதம்" என்ற கவிதைத் தொகுப்பு அமைகின்றது. ஒரு சாலையின் சரிதம - 2006 ஆம் ஆண்டு தமிழ்நாட்டு மக்கள் கண்காணிப்பு நிறுவனத்தின் மூலமாக வெளிவந்தது. இத்தொகுப்பில் மொத்தமாக நாற்பத்தைந்து கவிதைகள் உள்ளன. வன்முறையும் அதனோடு இணைந்த போராட்ட வாழ்வையும், சிதைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் மனித வாழ்வையும் பின்புலமாகக் கொண்டு இத்தொகுப்பு உருப்பெற்றுள்ளது. மனிதவாழ்வின் பன்முகப் பக்கங்களை வெளிப்படுத்தும் கவிதைத்தொகுப்பாக 'ஒரு சாலையின் சரிதம்' விளங்குகின்றது எனலாம்.

பன்னீர்ச்செல்வம் மலையகம், தமிழகம் ஆகிய இருவேறுபட்ட பண்பாட்டுச் சூழல்சார்ந்த அனுபவங்களைப் பெற்றவர். இதனால் அவரது கவிதைகளில் இருவேறுபட்ட சமூகங்களினதும் பிரச்சினைகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. தமிழகப் பண்பாட்டுத் தளத்தில் ஊறிப்போயுள்ள இன, மத, மொழி, சாதி, தீண்டாமை முதலிய பாகுபாடுகள் அவரது கவிதைகளில் முதன்மையான இடத்தைப் பெறுகின்றன. இவ்வகைச் சார்புநிலைகளை ஒரு கவிஞனுக்குரிய சிந்தனைத் தளத்திலிருந்து பார்ப்பது இத்தொகுப்புக்கு மேலதிகப் பெறுமதியை வழங்குகின்றது எனலாம்.

"என் கவிதைகளுக்கு இரட்டை முகம் இல்லை. என் எழுத்துக்கும் வாழ்க்கை முறைக்கும் வித்தியாசத்தை உணர்ந்ததில்லை. என் சொந்த உணர்வு சார்ந்த மன அரிப்புகளையும்

அவசரங்களையும் தீர்த்துக்கொள்ளும் கருவியாய் கவிதைகள் இருந்ததில்லை." எனத் தனது கவிதை முகத்தைப் பதிவுசெய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

கவிஞர் திறந்த வெளிச் சிறைசாலையாக இவ்வுலகைப் படிமமாக்குகின்றார். இலங்கை, தமிழகம் என்ற வரையறைகளைக் கடந்து 'மனிதம்' என்ற பொதுமையை நோக்கி நகர்ந்துசெல்லும் தன்மையினை இத்தொகுப்பிலுள்ள பெரும்பாலான கவிதைகள் புலப்படுத்துகின்றன. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற வள்ளுவரின் மனிதநேயம் பன்னீர்ச்செல்வத்தின் கவிதைகளில் ஊடுபாவாக அமைந்துள்ளது. இத்தன்மை கவிஞரைக் குறிப்பிட்ட ஒரு பண்பாட்டு வட்டத்துக்குள் மட்டும் முடக்கிவிடாமல் பொதுமைப்படுத்தி நோக்க வழிசமைத்துள்ளது. எந்தவிதப் பண்பாட்டு அரசியல் வட்டத்துக்குள்ளும் கட்டுண்டு கிடக்காமல் எங்கெங்கு மனிதம் சிதைக்கப்படுகின்றதோ அவற்றுக்கெதிராகப் போராடுகின்ற கவிமனம் இத்தொகுப்பில் இழையோடுகின்றது. இன்றைய உலகில் மனிதப் பண்பாடு எதிர்கொள்ளும் பிரச்சினைகளே கவிதைகளின சாரமாய் அமைந்துள்ளது. இவ்வகைக் கவிமனத்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகப் பின்வரும் கவிதை அமைகின்றது.

என்ன பாவம் செய்தேன் என்று
என் முகத்தை இப்படிச் சிதைத்தீர்கள்
உணரமுடியவில்லையா உங்களால்
என் உடல் தானா கிடைத்தது
அமெரிக்கா முதல் ஆப்கான்வரை

அரும்புகள் தானா உங்களின்
அகோரப் பசிக்கு ஆதாரம் ?
குண்டுகள் துளைத்த என் குருதிச் சிதறலில்
உங்களின் குழந்தைகளின் உயிர்த்துடிப்பை
உணரமுடியவில்லையா உங்களால்
ஓரே ஒரு கணமேனும் உங்கள் மனசாட்சி
உங்களை உலுக்கியதில்லையா?

என்றவாறு கவிதை விரிந்து செல்கின்றது. அமெரிக்கா முதல் ஆப்கான் வரை என்ற வன்முறையின் எல்லைகளைக் கடந்து தமிழ்ப் பண்பாட்டையும் குறிப்பாக ஈழத்துப் போரியல் வாழ்வையும் கேள்வி எழுப்புவதாக இக்கவிதை அமைந்துள்ளது. அகமன உந்துதலின் விளைவாக வெளிவரும் படைப்பு என்பதால் இக்கவிதை வாசகர் மனதில் தொற்றிக்கொள்கின்றது.

இத்தொகுப்பில் இடம்பெறும் 'குறுநதிக்கு ஒரு கடிதம்' என்ற கவிதை கவிஞரின் மலையகம் பற்றிய ஏக்க உணர்நிலையைப் பதிவுசெய்கின்றது. மலையகம் பற்றியும், அச்சூழல் தந்த அனுபவங்கள் பற்றியும், தேயிலைச் செடிகளுக்குள் மடிந்துகொண்டிருக்கும் மக்கள் பற்றியும் நினைத்து ஏங்கும் உணர்வு இக்கவிதையில் மேலோங்கியுள்ளது. ஏக்க உணர்வு நிலையைச் சொற்களுக்குள் ஏற்றி மிக லாவகமாகக் கவிதையை எடுத்துரைக்கின்றார்.

தேயிலைக் கொழுந்துகளில்
தமிழச்சிகளின் வாசனை உள்ளதா?

இறப்பர் காடுகளில்

எப்படி உள்ளனர் என் மனிதர்?

அம்மன் விழாவும் காமன் கூத்தும்

இப்போதும் நிகழ்வதுண்டா?

என் மூதாதையர்களின் கல்லறைகள்

இன்னும் உள்ளனவா? தகர்க்கப்படாமல்

மகாவலியின் கரைகளிலே

மானுடம் மிஞ்சியுள்ளதா?

ஓர் இலக்கியப் படைப்புத் தனிமனித அனுபவங்களைப் பேசும் அதேவேளை, அப்படைப்பு சமகால வரலாற்றுச் சுமைகளையும் சுமந்துகொண்டு வருவதும் முக்கியமானது. அவ்வாறு அமையும்போது அப்படைப்பு காலத்தையும் கடந்து வாழும் இலக்கியப் பிரதியாக அமைந்துவிடுகின்றது. மனிதப் பண்பாட்டில் காலத்தையும் மீறிவாழும் படைப்புக்கள் நிறைய உள்ளன. அவ்வகையில், இலங்கையில் 1950 களில் அரசினால் மேற்கொள்ளப்பட்ட இனச்சார்பு வாதங்கள் எவ்வாறு தோட்டத்தொழிலாளர்களைப் பாதித்தன என்பதைப் பதிவுசெய்யும் கவிதைகளும் இத்தொகுப்பில் சிறப்பிடம் பெறுகின்றன. இவ்வகை அரசியல் அனுபவங்களைப் பதிவுசெய்யும் கவிதைகள் அரசியல் உள்ளடக்கப் பெறுமதியோடு மாத்திரம் மடிந்துவிடுகின்றன. இத்தொகுப்பில் இடம்பெறும் 'எந்தன் தேசம் எது' என்ற கவிதை அவ்வகையில் நோக்கத்தக்கது. இக்கவிதையல் பதிவுசெய்யப்படும் சமூக வரலாறும் அதனை மொழிப்படுத்தும் லாவகமும் முதன்மை பெறுகின்றன. அத்தோடு, இன்றைய புலம்பெயர் கவிதைகளின் 'ஏக்க உணர்வு' இக்கவிதையிலும் மேலோங்கியுள்ளது.

எந்தனுக்கு தேசம் எது

எனக்கென்றால் பெரு மயக்கம்

இந்தியாதான் என்று சொன்ன

என் தாயோ மாண்டுவிட்டாள்

இந்தியாவில் தாய் பிறந்து

இலங்கையிலே நான் பிறந்தால்

எந்த ஊர் பிரஜை நான்

இலங்கையா? இந்தியாவா

எதுவும் புரியாமல்

அனுப்பி வைத்தேன் விண்ணப்பம்....

என்றவாறு 'எந்தன் தேசம் எது' என்ற கவிதை நகர்ந்து செல்கின்றது. இத்தெபகுப்பில் இடம்பெறும் செஞ்சோலைச் சிறுமிகளுக்கு, கருவில் வளரும் குழந்தை, தேசம் கிடக்கிறது தேசம், சிறைக்குள் தேசம், ஈரமற்றுப் போன கடற்புரம், கனவுகளுக்கு நிறமுண்டு முதலான கவிதைகள் பொருள் அடிப்படையிலும் கவிதையின் எடுத்துரைப்பு முறையிலும் சிறப்பிடம் பெறுகின்றன. ஆயினும் கவிதையின் உள்ளார்ந்த விதிமுறைகளுள் ஒன்றான உணர்வு வெளிப்பாடு இத்தொகுப்பில் ஒரு சில கவிதைகளிலேயே சிறப்பாக அமைந்துள்ளது.

இத்தொகுப்பிலுள்ள கனதியான கவிதைகளுள் முதன்மை பெறும் கவிதையாக ஒரு சாலையின் சரிதம் திகழ்கின்றது. கவிதையின் பொருளும் அதனை மொழிப்படுத்தும் விதமும் கவிஞரின் கவிதை முகத்தைக் காட்டுகின்றன்.

குறியீடுகளால் பேசும் இக்கவிதை சமகால துயர்தோய்ந்த வரலாற்று வலிகளையும் பதிவுசெய்கின்றது. ஒரு சாலையின் சரிதத்துக்குள் மடிந்த, மடிந்துகொண்டிருக்கும் மனித உறவுகளின் அவலங்களைக் கவிஞர் கவிதை முகங்களாக்குகின்றார். ஒவ்வொரு முகத்துக்குள்ளும் வடிந்துகொண்டிருக்கும், புதைந்துகொண்டிருக்கும ஞாபக அடுக்குகள் வாசகரை மிகவும் பலமாகத் தாக்குகின்றன.

நெட்டிலிங்க மரங்களுக்கப்பால்

நெடிதுயர்ந்த ஒற்றைப்பனை

அதன் உச்சியில்

உட்காருவதும் பறப்பதுமாய்

அல்லாடுகிறது ஒற்றைக்காக்கை!

அதன் அவலக்கரைதலில்

இதயம் பிழிபடுகையில்

தெறித்து வருகின்றன....

தாத்தாவின் நினைவுகள்.......

அது நம் வயலின் கிழக்கெல்லை

அதற்கப்பால் ஊரணி

ஆலமரம் குறுங்காடு...

இந்தப் பந்தயத்திடலும்

குதிரையோடிய சாலைகளும் வந்து

என் அழகிய பூமியை

அழித்தொழித்துவிட்டன!"

சமூக வழமைகளிலிருந்து சாதி அடிப்படையிலும், பிராந்திய அடிப்படையிலும் பிரித்து சுயலாபத்துக்காக வஞ்சிக்கப்பட்டவர்களின் அவலங்களையும் சில கவிதைகள் வெளிப்படுத்துகின்றன. நாட்டார் மரபிலிருந்து தொடரும் இவ்வகை வாழ்வுச் சுமைகளைப் பதிவுசெய்வதாக 'நந்தன் மூட்டிய தீ' என்ற கவிதை அமைகின்றது. ஒவ்வொரு போராட்டத்துக்குப் பின்னும் நடைபெற்ற வர்க்கச்சார்பு நிலைகள் பற்றியும், அவற்றுக்கெதிராகப் போராடவேண்டும் என்ற கவிஞரின் ஆதங்கம் பற்றியும் இக்கவிதையின் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. ஓர் இலக்கியப் படைப்பாளி தனது படைப்புக்கள் வாயிலாகவே வாசகனோடு பேசுகின்றான். அவ்வாறு பேசும்போது சொற்களுக்குள் வாசகனை மடக்கிப்போடாமல் அவனைச் சிந்திக்க வைக்கவேண்டும். இத்தன்மையே இலக்கியப் படைப்பைச் சமூகப்பெறுமதி பெற்ற ஒன்றாக்குகின்றது எனலாம். அவ்வகையில், சிறப்புப் பெறும் கவிதையாக 'நந்தன் மூட்டிய தீ' திகழ்கின்றது.

அந்த நந்தனின் நெருப்பு முதல்

ஒவ்வொரு நெருப்புக்குப் பின்னும்

சாதிகள் நிரம்பிய வரலாறு

சப்தமற்று நீள்கிறது....

ஒவ்வொரு நெருப்பையும்

ஒன்றுவிடாமல் கவனி .......

எரிநெருப்பின் மூலத்தை

எதுவென்று கண்டுபிடி

என்றவாறு கவிதை விரிந்துசெல்கின்றது.

பன்னீர்ச்செல்வத்தின் 'ஒரு சாலையின் சரிதம்' அவரைச் சிறந்த கவிஞர்களுள் ஒருவராக அடையாளப்படுத்தும் சில நல்ல கவிதைகளையும் கொண்டு அமைந்துள்ளது. அதேநேரம், சில கவிதைகள் கோசங்களாகவே நின்றுவிடுகின்றன. சொற்களோடு உணர்வு நிலைகளைக் கட்டிப்போடும் தன்மை மிகக் குறைவு என்றே தோன்றுகின்றது. தமிழ்ப் பண்பாட்டில் அதிகரித்த மனித அவலங்கள் இவ்வகைக் கருத்துப்பிரதிகள் தோன்றுவதற்கு அடிப்படையாகின என அமைதிகொள்ளலாம். ஆயினும், இத்தொகுப்பின் பன்முகப் பாடுபொருள்கள் பன்னீர்ச்செல்வத்தைத் தனித்து நோக்க வழிசமைக்கும் என்பதில் ஐயமில்லை.

# நவீன தமிழ்க் கவிதையில் தூது

## மஹாகவியின் தூது கவிதையை முன்னிறுத்திய பார்வை

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியிலிருந்தே நவீனத்துவச் சிந்தனை தமிழில் வேகமாகப் பரவத்தொடங்கியது. நவீனத்துவச் சிந்தனையின் வரவும், வளர்ச்சியும் தமிழ் இலக்கியத்தின் சகல துறைகளிலும் புதியதொரு மாறுதலைத் தோற்றுவித்தது. இதன் அடிப்படையிலேயே நடப்பியல் வாழ்வினை எளிய பதத்தில் புதிய சுவையோடு எடுத்துரைக்கும் நவீன கவிதை மேற்கிளம்பியது. நவீன கவிதை பற்றி எம். ஏ. நுஃமான் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> "இன்றைய மனிதன் இன்றைய வாழ்க்கை, இன்றைய நடைமுறை, இன்றைய அனுபவம் பற்றி இன்றைய மொழியில் எழுதப்படுவது கவிதையாகும்"[1]

இத்தகைய ஒரு நவீன கவிதைப் பண்பைக் கொண்டதாக மஹாகவியின் தூது கவிதை அமைந்துள்ளது. தமிழ் இலக்கிய மரபில் பல்வேறு வகையான இலக்கிய வடிவ கையாளுகை இடம்பெற்று வந்துள்ளது. அவற்றுள் தூது இலக்கிய வடிவமும் ஒன்றாகும். தூது என்பது, "ஒருவர் தமது கருத்தை இன்னொருவருக்குத் தெரிவிக்க இடையே உயர்திணையை அல்லது அஃறிணைப் பொருளை அனுப்புதல் எனலாம்" தூது அனுப்பும் வழக்கத்தைச் சங்க இலக்கியத்தில் கண்டுதெளியலாம்.

பெ. சரவணகுமார், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

சங்க இலக்கியங்கள் தோழி, பாங்கன் முதலியோர் தூது சென்றமையைக் காட்டுகின்றன.

இதனை,

"தோழியே தாயே பார்ப்பான் பாங்கன்
பாணன் பாடினி இளையர் விருந்தினர்
கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்
யாத்த சிறப்பின் வாயில்கள் என்க"[2]

என்று தூதுக்கான வாயில்கள் பற்றித் தொல்காப்பியர் கூறுகின்றார். களவொழுக்கக் காலத்தில் தலைவி காம மிகுதியால் மேகம், காற்று பறவை முதலிய அஃறிணைப் பொருள்களைத் தூது விடுகின்றாள். இதனை "காமமிக்க கழிபடர் கிளவி"[3] என்பார், தொல்காப்பியர். தூது செல்லும் அம்சங்களிலும் உயர் திணைக்குரியது, அஃறிணைக்குரியது எனும் இரு விடயங்கள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.

பல்லவர் காலத்தில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் அன்னம, புறா, மயில், கிளி, குயில், பூவை, வண்டு, அன்றில், மேகம், நெஞ்சு முதலியவற்றைத் தூது அனுப்பியமை குறிப்பிடத்தக்கதாகும். செய்யுள் இலக்கிய மரபில் காதல் சார்ந்த உணர்ச்சிகளையும், பத்தி சார்ந்த உணர்ச்சிகளையும் இன்னும் பிறவற்றையும் பிறருக்குத் தெரிவிப்பதற்கான

ஓர் உத்தி முறையாக தூது பயன்பட்டுவந்துள்ளது. இவ் உத்தி முறைமை கால மாறுதலுக்கு ஏற்ப, வடிவ

நிலையிலும் பண்பு நிலையிலும் மாற்றங்கள் பெற்று வந்துள்ளமையினை இலக்கிய வரலாற்றில கண்டுகொள்ளலாம

நவீனத்துவச் சிந்தனையின் வளர்ச்சிக்கு ஏற்ப தூது இலக்கியப் பண்பில் பல மாற்றங்களை அவதானிக்க முடிகின்றது. சமுதாயப் பிரச்சினைகளையும், உழைக்கும் மக்களின் மேன்மையினையும் வெளிப்படுத்துவதற்காகத் தூது பயன்பட்டு வந்துள்ளமையினைக் காணலாம். ஈழத்தில் தோன்றிய சரவணமுத்துப்பிள்ளையின் "தத்தைவிடு தூது" நோக்கத்தக்கது. பெண் விடுதலை சார்ந்த கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான ஓர் உத்தியாகக் கிளியைத் தூது விடுகின்றார்.

கண்ணைமறைத் தேகொடு போய்
காட்டில் வீடும் பூனையைப் போல்
பெண்ணைமனை யடைத்துப்
பின்னொருவர் கைக்கொடுப்பர்
கண்ணால்முன் கண்டுமிலர்
காதலர் சொற் கேட்டுமிலர்
எண்ணாது மெண்ணி
இருந்தயரவார் மங்கையர்கள்
இக்கொடுமைக் கியாது செய்வம்
இசையாய் பசுங்கிளியே .."[4]

இந்நூல் பற்றித் துரை மனோகரன் பின்வருமாறு கூறுவது சுட்டிக்காட்டத்தக்கது. "மரபு ரீதியான விடயங்களையே தாங்கி வளர்ந்து வந்த தூது இலக்கிய வடிவில், சமகாலத்தில் முக்கியத்துவம் பெறத்தொடங்கிய பெண் விடுதலை தொடர்பான அம்சத்தை புகுத்தி, தமது காலத்து வித்துவ நடைக்கு மாறான எளிமையுடன் தத்தைவிடு தூது என்ற நூலை இயற்றினார்".[5]

இதேபோன்று அமைந்த கவிதையாக மஹாகவியின் தூது விளங்குகின்றது. ஈழத்து நவீன தமிழ்க் கவிதை முன்னோடிகளுள் முதன்மையானவர் மஹாகவி. (1927 -1971) நவீன கவிதையின் உருவத்திலும், உள்ளடக்கத்திலும் புதிய மாறுதலைச் செய்து ஒட்டுமொத்தமான ஈழத்துத் தமிழ்க் கவிதைச் சூழலுக்கு உரமூட்டியவர். அவரது நவ கவிதைக் கோட்பாட்டினைப் பின்வருமாறு பதிவுசெய்கின்றார்.

"இன்னவைதாம் கவியெழுத
ஏற்றப்பொருள் என்று பிறர்
சொன்னவற்றை, நீர் திருப்பிச்
சொல்லாதீர், சோலை, கடல்
மின்னல், முகில், தென்றலினை
மறவுங்கள், மீந்திருக்கும்
இன்னல் உழைப்பு, ஏழ்மை, உயர்வு
என்பவற்றை பாடுங்கள்"[6]

இதுவரை வெளிவந்த மஹாகவியின் படைப்புகளாக வள்ளி (மஹாகவியின் கவிதைகள் - 1953) குறும்பா (1966) கண்மணியாள் காதை (1966) ஒரு சாதாரண மனிதனது சரித்திரம் (1971) வீடும் வெளியும் (1973) மஹாகவியின் கவிதைகள் (1984) புதியதொரு வீடு (1989) மஹாகவியின் காவியங்கள் (2000) மஹாகவியின் மூன்று நாடகங்கள் (2000) என்பன விளங்குகின்றன. இப் படைப்புகளின் பொதுப் பண்புகளாகக் கிராம மக்களினதும் நகர மக்களினதும் வாழ்வியலைக் கவிப்பொருளாக்கியமை, பேச்சோசையைக் கவிதையில் லாவகமாகக் கையாண்டமை, கருத்து உணர்ச்சி அழுத்த வேறுபாடுகளுக்கு ஏற்ப செய்யுள் வடிவத்தை இலகுபடுத்தியமை, கட்புலக்கலை நெறியாகக் கவிதையை வடிவமைத்தமை, நடப்பியல் வாழ்க்கையைக் கருப்பொருளாக்கியமை முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

இக்கட்டுரையில் பேசப்படும் மஹாகவியின் தூது கவிதை அவரது எந்தத் தொகுப்பிலும் இடம்பெறவில்லை. இதுவரை தொகுப்பில் அடக்கப்படாத கவிதைகளில் தூது கவிதையும் ஒன்றாகும். தூது கவிதை 1947 ஆம் ஆண்டு எழுதப்பட்டது.

"ஒன்றுள்ளது கண்டாய் உறைக்க" எனத் தொடங்கி "பூச்சூடி உன்பொழுதை போக்கு" என முடியும் இக்கவிதை அறுபது வரிகளைக் கொண்டமைந்தது. கவிஞர் தன்னை காதலியாக பாவனை செய்து வயற்புறத்தில் தொழில் புரியும் உழவனாகிய தன் காதலனுக்குத் தோழியைத் தூது அனுப்புவதாக இக்கவிதையை அமைத்துள்ளார். நகரம், கிராமம் ஆகிய இரண்டினையும் அவற்றுக்கே உரிய அம்சத்தோடு இக்கவிதை பதிவுசெய்கின்றது. கவிஞர் தன்னைக் காதலியாகப் பாவனை செய்தே இக்கவிதையை படைத்திருக்கின்றார். இதனைக் கவிதையில் இடம்பெறும் "அவரிருக்கை" "ஓடடி" "என்றன் இவரை' ஆகிய தொடர்கள் தெளிவுபடுத்துகின்றன.

தூது கவிதை நகர்புறத்தையும் கிராமப்புறத்தையும் எதிர் எதிர் நிலைகளாக வைத்து கட்டமைக்கப்பட்டுள்ளது. மஹாகவியின் ஆரம்ப காலக் கவிதைகளில் இத்தன்மையினைக் காணலாம். உதாரணமாக, கிராமம், யாழ்ப்பாணம் செல்வேன், செல்லாகாசு, இரவு முதலிய கவிதைகளைக் குறிப்பிடலாம். தூது கவிதையினை ஆரம்பப் பகுதி, இடைப்பகுதி, முடிவுப்பகுதி என்ற மூன்று பகுதிகளாகப் பகுத்து நோக்கலாம்.

கவிதையின் ஆரம்பப் பகுதி தூது செல்லும் தோழியை விளித்துரைக்கும் அதேவேளை, அறிவுரை புகட்டுவதாகவும் அமைந்துள்ளது. "பிறையாளன் திருநாமம் எனக்கொருகாற் பேசாயோ" எனத் திருஞான சம்பந்தர் கிளியை விளிப்பது போல

"ஒன்றுளது கண்டாய் உரைக்க அவரிருக்கை
சென்று வருவாயோ சேடி"[7]

என்று மஹாகவி விளிப்பது, நயக்கத்தக்கது. இத்தன்மை மஹாகவியின் பண்டைய தமிழிலக்கிய பரிச்சயத்தினை விண்டுரைப்பதாக உள்ளது. தூது செல்லும் பெண் செய்ய வேண்டிய இனியவற்றையும், செய்ய வேண்டாத இன்னாவற்றையும் கவிநயம்பட எடுத்துரைக்கின்றார்.

..................வரிசையிலே

இன்று முழுதும் எதிர்பார்த்து, வண்டிவரும்

என்று தவம் புரிந்து நின்று விடாதே! நடந்து

போவாய்! வழியில் புதிதாய் நகர் நிறைய

நாவாய்களில் வந்த நன்னிறத்து பட்டுக்களை

நீ வாய் திறந்து நெடு நேரம் பார்த்தபடி

சாவாய்! எனவிட்டுச் சந்திகளில் நில்லாதே"[8]

நகர்ப்புறத்திலிருந்து கிராமப்புறத்தை நோக்கிய கவிதை நகர்வும், சுவையும் மஹாகவியின் கவிதை ஆளுமையினை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன.

தூது கவிதையின் நடுப்பகுதி நகர்ப்புறத்தையும், கிராமப் புற மக்கள் வாழ்வினையும் படம் பிடித்துக்காட்டுகின்றது. ஒவ்வொரு சொற்களாய் இணைத்துக் கவிதை உருவாகிக் கொண்டு போகும் போது அந்தச் சொற்களுக்குப் பின்னணியில் ஒரு காட்சி உருவாகி வளர்ந்து வருவதை மஹாகவியின் பெரும்பாலான கவிதைகளில் காணலாம். இப்பண்பு பற்றி எம். ஏ. நுஃமான் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"மஹாகவியின் கலைநெறி காலம், களம் நிகழ்வு ஆகியவற்றின் ஒருங்கியைவு பெற்ற கட்புலக்கலை நெறியாக அனுபவவெளிப்பாடாக உள்ளது. இக்கலைநெறி சங்க காலக் கவிதைகளுக்குப் பின்னர் மஹாகவியிடமே தற்காலத்துக்கு ஏற்றவகையில் முழுவடிவம் பெற்றுள்ளது எனலாம்"[9]

நகர்ப்புற நாகரிகத்தில் உருவாக்கப்பட்ட ஆலைகள், சேரிப்புறம், மருந்தகங்கள், ஒதுக்கப்பட்ட பிச்சைக்காரர்கள், விபச்சாரிகள், ஆட்சியாளர்களது போலித்தனம், பள்ளிக்கூடங்கள், நகரத்து ஓயா இரைச்சல் முதலியவற்றைக் கூறி விமர்சித்து, அவற்றின் பக்கம் நாடாது "மிகவும் விரைக" என்று விரைவாகத் தூது அனுப்புகின்றார். நகர வாழ்க்கையை எள்ளல் நடையோடு விமர்சனம் செய்கின்றார்.

ஆலைச் சிறையில் அடைத்தே, அசடர்களைக்

கூவி கொண்டு வாழும் குபேரர் தெருவில்லை

வேலை! நீ அப்பால் விரைக! நும் சேரிகளில்

மூலைகளில் ஓடடி உன் மூக்கைப் பிடித்தப்படி!

"சப்" பென்று வாழ்வு சலிக்காமல் ஈடேற

எப்படியும் நீயின் றெனக்காய் உதவு! வெறும்

உப்புக் கலவைகளால் ஊசிகளால் ஓட்டிடலாம்

இப்பாரில் நோயை எனவே மருந்தகங்கள்

கட்டி எழுப்பியிருப்பதனைக் கண்டுபோ!

ஓட்டற் குடலது நம்மூரை வருத்துவது

பட்டினியே! சோறே! புசிக்கு மருந்தென்றுணரா

முட்டாட் தனத்து முயற்சியினால் எங்களவர்

முன்னேறல் என்றோ! முகைவாய் சிரித்தலர

"என்னே இது" என்றிரங்கி நடநீ! உன்

பின்னே தொடரும் பிசாசுக்குச் சில்லறை என்

பொன்னே எறிந்துவிடு, போய்விடும்! இந்நாடு

வாழ்வதற்காவி வழங்குவோம் என்றோயா

தாள வருவோர் அலறும் பெருவளி இவ்

வேளை நிறைந்து வழியுமடி

நீளமெனினும் நெடுவழியே நட!

ஆங்கே அவர்கள் அளக்கும் புரட்டுகளால்

மங்கலறிவும் மழுங்கி வெளியேறிப்

பொங்கித் திரியும் புலைக் கும்பல் பொல்லாது

நங்காய்! எனவே நடநீ மறுவழியில்

ஓடும் குதிரை உயிரைக் கொண்டோடுதல் போல்

வாடும் முகத்துடனே வந்து மொய்த்து நின்றவைமேற்

போடும் பணம் கெட்டுப் போய் நெஞ்சு காய மது

தேடும், குடித்துவிட்டே ஆடும் மனிதர்கள்

கேட்டவர்கள் அல்லக் கிளியே!

.......................................

செத்து விழும் மட்டும் சிறுமை நமக்கெனினும்

வித்தைப் பெரும் அறிவால் வீதிகளில் நாம் நிறைக்கும்

சத்தமிடும் "பெட்டிகள்" – சாக்கிரதை! காதுகளைப்

பொத்திக் கொண்டோடு! பொழுது படும் வரைக்கும்.[10]

நகரப்புறம் நவீனத்துவ மோகத்தால் அமைதி குலைந்து விளங்குகின்றது. இத்தன்மை கவிஞருக்கு எரிச்சலூட்டுகின்றது. மஹாகவியின் ஆரம்ப காலக் கவிதைகளில் ஒன்றான 'இரவு' கவிதையிலும்

பட்டணத்து அமைதியற்ற நிலையினைப் பின்வருமாறு புலப்படுத்தியிருப்பது ஒப்பிட்டுப் பார்க்கத்தக்கது.

“கூச்சலிடும் ரேடியோக்
கூக்குரல்கள் ஓயவும்
கூட்டம் போடும் மாந்தர் தம்
குகைகளிலே தூங்கவும்
ஓச்சலின்றி வண்டிகள்
ஓடுகின்ற வீதியில்
ஒன்றுமின்றிப் போகவும்
இரவு வந்து சேர்ந்தது’[11]

மஹாகவி கிராம வாழ்க்கையில் மிகுந்த பிடிப்புடையவராகத் திகழ்ந்தார். கிராமத்து மக்கள் மீதும், உழவர் மீதும் அன்புடையவராக விளங்கினார். இத்தன்மைகளை அவரது ஆரம்ப கால படைப்புகளில் காணலாம். கிராம மக்களின் வாழ்வியலை அவர்களது பேச்சோசையிலேயே தமது படைப்புகளில் பதிவுசெய்தார்.

“பேச்சொலி சார்ந்த மெட்டிலே அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளையும் அனுபவங்களையும் நகைச்சுவையோடு வெளியிடும் மஹாகவியின் கவிதைகளில் யாழ்ப்பாண மண்வாசனை கமழ்வது கண்கூடு’[12] இப் பண்பினைத் ‘தூது’ கவிதையின் இறுதிப் பகுதியிலும் அறிய முடிகின்றது. வயற்புறத்தில் வியர்வை நீருட்டி நெல் விளைவிக்கும் உழவர் பற்றியும், உழவுத் தொழிலின் பெருமை பற்றியும் பேசுவதாகக் கவிதை அமைந்துள்ளது.

..........................................................................

..........................................................................

"தார்போட்ட வீதி தமைவிட்டு செல்! வியர்வை

நீருட்டி நல்நெல் நிறைய விளைவிக்கும்

"ஏர்ஓட்டி" என்றன் "இவரை" வயற்புறத்தில்

பார்! நாட்டைவிட்டுப் பசிஓட்டிக்கொண்டிருப்பார்!

மூச்சைத் தமதூர் முழுதுக்கும் தந்துழைப்பார்![13]

(அழுத்தம் கட்டுரையாளருடையது)

மீனவத் தொழிலாளியை "நீருழவன்" என்று புதுப்பெயர கொண்டு அழைப்பது போல (நீருழவன் - கவிதை) உழவரை "ஏர்ஓட்டி" என அழைப்பது அவரது கவித்துவ ஆளுமையினைக் காட்டுகின்றது. நாட்டைவிட்டு "பசிஓட்டும்" பெருமை படைத்தவனாக உழவரைக் காணுகின்றார்.

"பேருழைப்பு

ஈனும் மகிழ்ச்சிகெதிரேது

மானிடன்

தொட்டால் துலங்காத் தொழில் உண்டோ"

என நீருழவன் கவிதையில் உழைப்பின் பெருமையினையும், உழைப்பாளியின் வலிமையினையும் பதிவுசெய்துள்ளமை மனங்கொள்ளத்தக்கது.

எனவே, செய்யுள் மரபில் காதலையும், பக்தியையும் வெளிப்படுத்துவதற்கான ஓர் உத்தி முறையாக பயன்பட்டுவந்த "தூது" இலக்கிய வடிவத்தை, நவீன பாடுபொருளுக்கு ஏற்ப அமைத்த பெருமை மஹாகவிக்குரியது. நகர்ப்புறம், கிராமப்புறம் ஆகிய இரண்டின் எதிர்எதிர் நிலைகளைப் புலப்படுத்துவதற்கான ஓர் உத்தியாகத் தூது மரபைக் கையாண்டிருக்கின்றார். அவ்வகையில், நவீன சிந்தனை வளர்ச்சிப் போக்கிற்கிணங்க, தூது என்ற இலக்கிய மரபை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதற்கு மஹாகவியின் தூது கவிதையே முன்னுதாரணமாக அமைகின்றது எனலாம்.

அடிக்குறிப்புகள

01. நுஃமான், எம்.ஏ. (1981) திறனாய்வுக் கட்டுரைகள், சிவகங்கை: அன்னம் பிரைவேட் லிமிட்டெட், ப.

02. ஜெயராமன், ந. வீ. (1984) சிற்றிலக்கியச் சிந்தனைகள், சிதம்பரம : மாணிக்கவாசகர் நூலகம். ப. 139.

03. மேலது ப. 139

04. சதாசிவம், ஆ. (1966) ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், கொழும்பு : சாகித்திய மண்டலம். பக் 213 - 214.

05. மனோகரன், துரை. (1997) இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சி கண்டி : கலைவாணி புத்தக நிலையம். ப. 76.

06. மஹாகவி கவிதைகள், (1988)

07. மஹாகவி (1947) தூது (சுதந்திரன் பத்தாண்டு நிறைவு மலர்) ப.154.

08. மேலது, ப. 154.

09. நுஃமான், எம்.ஏ (1984) (தொகுப்பு) வள்ளி (மஹாகவியின் கவிதைகள்)

10. மஹாகவி, (1947) பக். 154 - 155

11. சுதர்சன், செ. (2006) (தொகுப்பு) மறுமலச்சிக் கவிதைகள், கொழும்பு : கிறிபஸ் அச்சகம். ப. 40.

12. தில்லைநாதன், எஸ். (1997) இலங்கைத் தமிழ் இலக்கியம், கொழும்பு : தேசிய கலை இலக்கியப் பேரவை. ப. 98.

13. மஹாகவி (1947) முன். கு. நூல். ப. 155.



"ஒன்றுளது கண்டாய் உரைக்க அவரிருக்கை

சென்று வருவாயோ சேடி. வரிசையிலே

இன்று முழுதும் எதிர்பார்த்து, வண்டிவரும்

என்று தவம்புரிந்து நின்று விடாதே! நடந்து

போவாய்! வழியில் புதிதாய் நகர் நிறைய

நாவாய்களில வந்த நன்னிறத்து பட்டுக்களை

நீ வாய் திறந்து நெடு நேரம் பார்த்தபடி

'சாவாய்'! எனவிட்டுச் சந்திகளில் நில்லாதே!

ஆலைச் சிறையில் அடைத்தே, அசடர்களைக்

கூலி கொண்டு வாழும் குபேரர் தெருவிலில்லை

வேலை! நீ அப்பால் விரைக! நம் சேரிகளில்

மூலைகளில் ஓடடி உன் மூக்கைப் பிடித்தபடி!

சப் பென்று வாழ்வு சலிக்காமல் ஈடேற

எப்படியும் நீயின் றெனக்காய் உதவு! வெறும்

உப்புக் கலவைகளால் ஊசிகளால் ஓட்டிடலாம்

இப்பாரில் நோயை எனவே மருந்தகங்கள்

கட்டி எழுப்பியிருப்பதனைக் கண்டுபோ!

ஓட்டற் குடலது நம்முரை வருத்துவது

பட்டினியே! சோறே! புசிக்கு மருந்தென்றுணரா

முட்டாட் தனத்து முயற்சியினால் எங்களவர்

முன்னேறல் என்றோ! முகைவாய் சிரித்தலர

"என்னே இது" என்றிரங்கி நடநீ! உன்

பின்னே தொடரும் பிசாசுக்குச் சில்லறை என்

பொன்னே எறிந்துவிடு, போய்விடும்! இந்நாடு

வாழ்வதற்காவி வழங்குவோம் என்றோயா

தாள வருவோர் அலறும் பெருவளி இவ்

வேளை நிறைந்து வழியுமடி

நீளமெனினும் நெடுவழியே நட!

அங்கே அவர்கள் அளக்கும் புரட்டுகளால்

மங்கலறிவும் மழுங்கி வெளியேறிப்

பொங்கித் திரியும் புலைக் கும்பல் பொல்லாது

நங்காய்! எனவே நடநீ மறுவழியில்!

ஓடும் குதிரை உயிரைக் கொண்டோடுதல் போல்

வாடும் முகத்துடனே வந்து மொய்த்து நின்றவைமேற்

போடும் பணம் கெட்டுப் போய் நெஞ்சு காய மது

தேடும், குடித்துவிட்டே ஆடும் மனிதர்கள்

கெட்டவர்கள் அல்லக் கிளியே! உனையெட்டிக்

தொட்டுத் துயரிழைக்க மாட்டார்! துணிந்திவர்கள்

வட்டாரத்தூடே வழியெடுத்துப் போவாய் நீ!

கொட்டா இமையோடெதிர் பார்த்துக் கொண்டிருப்பேன்!

பள்ளிகளைத் தாண்டுக! நம் பாலகரைக் கட்டி அவர்

வெள்ளை மனத்தினிலே வேண்டாத சேதி ஒரு

கொள்ளையினை அள்ளி அறிவென்று கொட்டிடினும்,

உள்ளத்தின் பண்பா டுயராது! நீங்காது

செத்து விழும் மட்டும் சிறுமை நமக்கெனினும்

வித்தைப் பெரும் அறிவால் வீதிகளில் நாம் நிறைக்கும்

சத்தமிடும் "பெட்டிகள்' – சாக்கிரதை! காதுகளைப்

பொத்திக் கொண்டோடு! பொழுது படும் வரைக்கும்.

பச்சை மரம் காணா இப் பட்டணத்து வீதிகளில்

உச்சியிலே வெய்யில் உறைக்கும்! அதனால் ஊர்

மெச்சும் அழகீ! மிகவும் விரைக! என்

இச்சைக் கிராமம் இருப்ப தருகிற்றான்!

"தார்போட்ட வீதி தமைவிட்டுச் செல்! வியர்வை

நீருட்டி நன்னெல் நிறைய விளைவிக்கும்

"ஏர்ஓட்டி" என்றன் "இவரை" வயற்புறத்தில்

பார்! நாட்டைவிட்டுப் பசிஓட்டிக்கொண்டிருப்பார்!

மூச்சைத் தமதூர் முழுதுக்கும் தந்துழைப்பார்

சேச்சே! அவர் தவத்தைச் சென்றெம் நகர்ப்புறத்துப்

பேச்சால் குழப்புவதோ பேதாய்! அலங்கரி, போ

பூச்சூடி உன் பொழுதைப் போக்கு!

குறிப்பு :-1947 ஆம் ஆண்டு சுதந்திரன் பத்தாவது ஆண்டு நிறைவு மலரில் வெளிவந்தது.

# மஹாகவியின் வீடும் வெளியும்

## அகம் நோக்கி விரியும் புறம்

இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ்க் கவிதை வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றிய கவிஞராக மஹாகவி விளங்குகின்றார். நவீன கவிதையின் உள்ளடக்கத்திலும், அதன் எடுத்துரைப்பு முறையிலும், பல புதிய அம்சங்களை அறிமுகப்படுத்தியதோடு, அவற்றை அடுத்த தலைமுறையின் பாடுபொருளாகவும் ஆக்கினார். அன்றாட வாழ்வில் மக்கள் பேசும் மொழியைக் கவிதைகளில் லாவகமாகப் பயன்படுத்தினார். அத்தோடு, அவர்கள் எதிர் கொண்ட பிரச்சினைகளையும் கருப்பொருளாக்கினார். இந்தப் பண்பு ஈழத்துத் தமிழ்க் கவிதை வரலாற்றை இன்னொரு தளத்துக்குக் கொண்டு சென்றது.

மஹாகவியால் எழுதப்பட்ட கவிதைகளுள் ஒரு சிலவே தொகுப்புக்களாக வெளிவந்துள்ளன. அவ்வகையில், வெளிவந்த தொகுப்புக்களுள் 'வீடும் வெளியும்' விதந்துரைக்கத்தக்கது. இத் தொகுப்பு 1973 ஆம் ஆண்டு கல்முனை வாசகர் சங்க வெளியீடாகத் தமிழ்க் கவிதையுலகுக்கு அறிமுகமானது.

பெ. சரவணகுமார், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக் கால கட்டங்களில் 1940 – 1970 வரையான காலப்பகுதி முக்கியமானதாகும். தமிழக இலக்கியங்களின் பாதிப்பிலிருந்து விடுபட்டு ஈழத்தைக் களமாகக் கொண்டு படைப்பிலக்கிய முயற்சிகள் முனைப்புப் பெற்ற காலமாக அதனை அடையாளப்படுத்த முடியும். சமுதாய நலனைப் பின்புலமாகக் கொண்டு பெரும்பாலான இலக்கியங்கள் படைக்கப்பட்டன. இவற்றோடு, பிரதேச ரீதியிலான படைப்பிலக்கிய உணர்வும், பிரதேசத் தனித்துவமும் இலக்கியங்களுடாக வெளிப்பட்டன. இவ்வாறான இலக்கியக் கொள்கைகள் காணப்பட்ட காலப்பகுதியில் மஹாகவியால் எழுதப்பட்ட ஒரு சில கவிதைகளை உள்ளடக்கிய தொகுப்பாக 'வீடும் வெளியும்' அமைகின்றது.

'வீடும் வெளியும்' தொகுப்பில் இருபத்தைந்து கவிதைகள் காணப்படுகின்றன. இத்தொகுப்பு, தலைப்புக்கு ஏற்ப இரு பிரிவுகளாக அமைந்துள்ளது. கமலி, வீடும் வெளியும், ஓநாயும் ஆட்டுக் குட்டியும், அகலிகை, கண்களும் கால்களும், செத்துப் பிறந்த சிசு, இரண்டாவது திருமணம், சீமாட்டி, விட்ட முதல், படலைத்திறமினோ ஆகிய பத்துக் கவிதைள் வீடு பகுதியில் அமைந்துள்ளன. பல்லி, ஒரு கனவு, தேரும் திங்களும், நீருழவன், வீசாதீர், தேர், திருட்டு, கண்கள் புரிந்துவிட்ட பாவம், நேர்மை, ஒரு தோற்றம், செல்லாக்காசு, மற்றவர்க்காய்ப் பட்டதுயர், மீண்டும் தொடங்கும் மிடுக்கு, புள்ளி அளவில் ஒரு பூச்சி, சிறு புல் என்பன இரண்டாவது பகுதியான வெளியில் இடம்பெறுகின்றன.

மஹாகவியின் இருவேறுபட்ட சூழல் அனுபவங்கள் இக் கவிதைகளினூடே வெளிப்படுகின்றன. கிராமம், நகரம் முதலானவற்றின் வாழ்வியலை எதிர்எதிர் நிலைகளாகக் கட்டமைக்கின்ற பண்பினை மஹாகவியின் பெரும்பாலான படைப்புக்களில் காணலாம். அவ்வகையிலேயே, இத்தொகுப்பிலுள்ள கவிதைகளும் அமைந்துள்ளமையினைக் காணமுடிகின்றது. 'வீடு' என்ற பகுதியிற்

காணப்படுகின்ற கவிதைகள் பால உணர்வு சம்பந்தப்பட்டதாகவும், அது தொடர்பான சமுதாயப் பிரச்சினையைப் பதிவுசெய்வதாகவும் அமைந்துள்ளன. பால் உணர்வு தொடர்பான பிரச்சினைகள் எவ்வாறு சமூகச் சீரழிவுக்குக் காரணமாகின்றன என்பதை வெளிப்படுத்துகின்றார்.

மஹாகவியின் அகத்திணை நோக்கு சங்ககால அகத்திணையினைத் தழுவியது. இவர் அன்றாட வாழ்வில் மனித உடல் – உள இயல்புகளை உணர்வுபூர்வமாகவும், தத்ரூபமாகவும் கவிதைகள் மூலமாக வெளிப்படுத்தியுள்ளார். 'மிகக் குறுகிய அர்த்தத்தில் சொல்வதானால் அகம், புறம் என்ற பண்டைய தமிழ் இலக்கிய மரபை ஒட்டி இக் கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ளன எனலாம். ஆனால், தற்கால வாழ்க்கை முறைக்கும், இலக்கியப் போக்குகளுக்கும் ஏற்ப இத்தொகுப்பு மிகப் பரந்த அர்த்த விரிவைக் கொண்டுள்ளதை யாரும் சுலபமாகக் கண்டுகொள்ள முடியும்'.[1]

நகர்ப்புறத்தில கைவிடப்பட்ட பெண்கள், தங்கள் வயிற்றுப்பசிக்காய்த் தம் தொழிலையே மாற்றுகின்ற அவல உணர்வு 'சீமாட்டி' கவிதையில் மேலோங்கியிருக்கின்றது. இக் கவிதையின் எடுத்துரைப்பு முறை மிக அலாதியானது. உணர்வுகளின் ஓட்டத்துக்கு ஏற்ப சொற்களைப பயன்படுத்துவதும் புனைகதை போல் காட்சிப்படுத்துவதும் இக் கவிதையின் சிறப்பம்சங்களாகும்.

தாடிக் குருட்டுக் கிழவன் தனைத்தொடரப்,

பாடி இரந்து பசிகிடந்து

வாடும்

அரும்பாய் இருந்தாள், அவளா இன்றூரின்

விருந்தாகி விட்டாள் விரிந்து,

துட்டெறிந்து விட்டு ' தொலையாய்'

என்னும் அவர்கள்

கொட்டிடும் கண்வெட்டிற் குடைகவிழ்ந்து,

கெட்டழிந்து

போகட்டும் என்றிப்

புதியதொழில் கொண்டாளோ[2]

தமிழ்க் கவிதையுலகில் பேசத்தவறிய விடயங்களைப் பேசுவதாக மஹாகவியின் அகத்திணை நோக்கு அமைகின்றது. முறையற்ற ஆண்- பெண் உறவுநிலை சமூக ஒழுங்கில் ஏற்படுத்துகின்ற தாக்கத்தினைச் செத்துப்பிறந்த சிசு, ஓநாயும் ஆட்டுக்குட்டியும், விட்ட முதல் போன்ற கவிதைகளின் மூலமாக வெளிப்படுத்துகின்றார். இவ்வாறான கவிதைகள் நையாண்டி செய்வதாகவும் அமைக்கப்பட்டுள்ளமை மஹாகவியின் தனித்துவமான போக்கைக் காட்டி நிற்கின்றது.

இந்த நிலத்தின் நெரிசலிடை

மாய்ந்து மடிய மறுபடியும்

வாய்த்ததொரு

பிள்ளை

அதுவோ பிறந்து குரல்கொடுக்க

வில்லை.

'எதற்காக? என்றாளாம்

கத்தாத காரணத்தைக் கண்டால்

கவலையற்றோம், செத்துப் பிறந்த சிசு.[3]

அகலிகை என்ற தொல் படிமத்தை ஒவ்வொரு படைப்பாளியும் தான் வாழ்கின்ற காலத்தேவைக்கு ஏற்ப மறுவாசிப்புக்கு உள்ளாக்கியுள்ளமையினைக் காணலாம். இவ்வகையில், புதுமைப்பித்தனின் சாபவிமோசனம் குறிப்பிடத்தக்கது. அகலிகை என்ற படிமம் காலந்தோறும் எவ்வெவ் வகையில் பொருள்கொள்ளப்பட்டு வாசிக்கப்பட்டது என்பதைக் கைலாசபதி மிக விரிவாக நோக்கியுள்ளமை மனங்கொள்ளத்தக்கது. (அகலிகையும் கற்புநெறியும்) அகலிகை என்ற படிமத்தை நவீன கவிதையின் மொழிதல் தன்மைக்கு ஏற்ப மஹாகவி அமைத்துள்ளமை சிறப்பம்சமாகும். மரபிலக்கியங்களிலே கவிஞர் கொண்டிருந்த ஈடுபாட்டை அகலிகைக் கவிதை காட்டுகின்றது. இக்கவிதையின் எடுத்துரைப்பு முறையும், பயன்படுத்தும் சொற்களும் முனைப்பான இடத்தினைப் பெறுகின்றன.

இந்திரன் இறங்கி வந்தான்

இமயத்தின் அடிவாரத்தே

சந்தனம் கமழும் மார்புச்

சால்வையில், சரிகை மீதில்,

பிந்திவந் தெறிக்கும் தேய்ந்த

பிறையின் நிலவு பட்டுச்

சிந்திற்று, மிரண்டங்கே ஓர்

சில்வண்டு வாய் மூடிற்றாம்..[4]

அகலிகை கதையைப் பலர் புதுக்கவிதைப் பாணியில் பதிவுசெய்துள்ளனர். அவ்வகையில், சிற்பியின் (பாலசுப்பிரமணியம்)

"அகலிகை இன்னும் காத்திருக்கின்றாள்" என்ற கவிதை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

யாருமற்றது அப்பாழ்வெளி
ஏகுகின்றதொரு காலடி
இருட்டுநதி அலையடித்து
நினைவிடிந்த கரையருகில்
திருகு கள்ளி கற்றாழை
திமிர்ந்த புதர் மறைவினிலே
மலட்டுநெடுங் கரும்பாறை
வனச்சரிவில் ஒரு பாறை
யாருமற்றது அப்பாழ்வெளி
ஏகுகின்றதொரு காலடி[5]

இக்கவிதை அகலிகை பற்றிய மரபுத்தொன்மையை மறுவாசிப்புக்கு உள்ளாக்குகின்றது. கவிதையின் எடுத்துரைப்பு முறையாலும், படிமம் நிறைந்த சொல்லாட்சிகளாலும் சிறப்புப்பெற்று விளங்குகின்றமையைக் காணமுடிகின்றது.

வீடும் வெளியும் தொகுப்பின் இரண்டாவது பகுதி வெளி. முதலாவது பகுதி அகவுணர்வினை வெளிப்படுத்தி நிற்க, இது புற உலகோடு தொடர்பான அம்சங்களைப் பேசுகின்றது. விவசாயி நிலத்தோடு போராடுகின்றான், மீனவன் கடலோடு போராடுகின்றான். இவ்வாறான போராட்ட வாழ்வில் மானுடம் கொள்ளும் வெற்றியைப் பாடுவதாகக்

கவிதைகள் அமைந்துள்ளன. அவ்வகையில், நீரூழவன், மீண்டும் தொடங்கும் மிடுக்கு என்பன முக்கியமானவைகளாகும்.

மப்பன்றிக் காலமழை காணா மண்ணிலே
சப்பாத்திமுள்ளும் சரியாய் விளையாது
ஏர்
ஏறாது, காளை இழுக்காது.
எனினும் அந்தப்
பாறை பிளந்து பயன்விளைப்பான்
என் ஊரான்.[6]

மீனவனை 'நீரூழவன்' என்றும், விவசாயியை 'ஏர்ஓட்டி' (தூது கவிதை) என்றும் விளிப்பது கவிஞரின் தனித்துவ அம்சங்களைக் காட்டி நிற்கின்றன. நீரூழவன் கவிதை, மீனவத் தொழிலின் பெருமையினையும், வலிமையினையும் இயல்பாகவே பதிவு செய்கின்றது.

வெட்டவெளி
நீரை உழுதான்
நெடுநாட் பழக்கம் இது
பாரை சுறா என்று பார்த்திருக்கும்
ஊரை
மகிழ்விக்க வல்ல மனிதன், வயிற்றை
அகழும் பசியால் அயரான்.

பகல் முற்ற

முன்னர் தன் வற்றா முயற்சிக்கிவை ஈடே

என்னும் படி நிறைந்த எவ்வளவோ மின்னுகின்ற

மீனின் சுவையோட மீள்கின்றான்.[7]

மஹாகவி கிராமியச் சூழலை நேசித்தவர். அந்தச் சூழலில் வாழ்ந்தவர். கிராமிய மக்களின் வாழ்வியலை அனுபவத்துடாகப் பெற்றவர். நீண்டு பரந்த வயல்களில் தொழில் புரியும் தொழிலாளியின் இன்ப, துன்ப நிகழ்வுக நேரிலே கண்டவர். சதா காலமும் இயற்கையோடு போராடி ஜீவியம் பண்ணும் மக்கள் மீது பற்றுக் கொண்டவர். இவ்வாறான பின்புலம் அவரின் கவிதைகளில் மிக லாவகமாக வெளிப்பட்டு நிற்கின்றமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு, யாழ்ப்பாணப் பண்பாட்டில் காணப்பட்ட சாதியத்தையும், அதன் கொடுமையையும் கேள்விக்கு உள்ளாக்குவதாகத் 'தேரும் திங்களும்' என்ற கவிதை அமைந்துள்ளது.

இத்தொகுப்பில் உள்ள கவிதைகள் அனைத்தும் ஒரு நிகழ்ச்சியைக் காட்சிப்படுத்துவன போல் உள்ளன. "சிறுகதை என்பது செட்டான புதிய இலக்கிய வடிவமாகும். சிறிய கவிதைகள் சிலவற்றை அவற்றின் பாங்கிலேயே வடிக்க விரும்பியதால் கிடைத்தவை இத் தொகுப்பில் உள்ளன"[8], என மஹாகவி நூல் முகப்பில் கூறுவது சுட்டிக்காட்டத்தக்கது. தமிழ் இலக்கியச் சூழலில் மஹாகவியே இவ்வகையிலான கவிதைகளுக்கு முன்னுதாரணமாகத் திகழ்கின்றார்.

வீடும் வெளியும் தொகுப்பிலுள்ள கவிதைகள் பழைய பாடுபொருள் தளத்தில் (அகம்/புறம்) நின்றுகொண்டு, நவீன சமுதாயப் பண்பாட்டை உள்வாங்கி, நவீன கவிதைக்குரிய உருவ, உள்ளடக்கப் பண்புகளோடு படைக்கப்பட்டுள்ளமையினைக் காணமுடிகின்றது. அத்தோடு, கவிதை என்ற இலக்கிய வடிவத்தை எவ்வாறு அகம்சார் கட்புலக்கலை நெறியாக ஆக்கலாம் என்பதை இத்தொகுப்பிலுள்ள பெரும்பாலான கவிதைகள் கோடிட்டுக் காட்டுகின்றன. இவ் அம்சமே ஈழத்துத் தமிழ்க் கவிதையின் செல்நெறியில் இருந்து மஹாகவியை வேறுபடுத்திக்காட்டுகின்றது எனலாம். இப்பண்பின் அடுத்த கட்ட நகர்வினையும், அதன் உச்சக்கட்ட வெளிப்பாட்டுத் திறனையும் மஹாவியின் காவியங்களான ஒரு சாதாரண மனிதனது சரித்திரம், சடங்கு, கண்மணியாள் காதை என்பவற்றில் கண்டுதெளியலாம்.

அடிக்குறிப்புகள

01. நுஃமான், எம்.ஏ. (1973) (தொகுப்பு) மஹாகவியின் வீடும் வெளியும், வாசகர் சங்க வெளியீடு. ப. iV.

02. மேலது, பக். 27 - 28.

03. மேலது, ப. 22.

04. மேலது, ப. 12.

05. பாலசுப்பிரமணியம் (சிறி) (1985) ஒளிப்பறவை, அன்னம் வெளியீடு, ப. 54.

06. நுஃமான், எம்.ஏ. (1973) முன். கு. நூல். ப. 64.

07. மேலது, பக். 43 - 44.

08. மேலது, ப. Xi.

# புலம்பெயர் இலக்கியம் : நிகழ்காலமும் எதிர்காலமும்

ஈழத்துத் தமிழ் மக்களின் புலம்பெயர்வு தமிழ் இலக்கியத்தை இன்னொரு தளத்துக்குக் கொண்டு சென்றது எனலாம். இம்மக்களின் புலம்பெயர்வு தமிழ் இலக்கியத்தில் புலம்பெயர் இலக்கியம் என்னும் பகுப்பைத் தோற்றுவித்தது. இலங்கையில் 1970 க்கு பின்னர் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்க்கப்பட்ட இன ஒழிப்பு நடவடிக்கை அதன் விளைவாக உருவாக்கப்பட்ட ஆயுதக் கலாசார முறைமை என்பன காரணமாகத் தமிழ்ச் சமுதாயம் நிலை குலைந்தது. சொந்த நாட்டில் மனித இருப்பு பற்றிய கேள்வியின் குத்தல்கள் அம்மக்களை ஐரோப்பிய நாடுகள் வரை துரத்திச்சென்றது. இவ்வாறு புலம் பெயர்ந்தவர்களின் இலக்கிய வெளிப்பாடுகளையே புலம்பெயர் இலக்கியம் என்னும் பதம் குறித்து நிற்கின்றது. புலம்பெயர் இலக்கியத்தைப் பின்வருமாறு வரையறை செய்யமுடியும். 'தம் சொந்த நாட்டை விட்டுப் புலம்பெயர்ந்து சென்று ஐரோப்பா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற கண்டங்களில் வாழும் தமிழர்களால் அங்கிருந்து படைக்கப்படும் இலக்கிய வகையாகும்.

புலம் பெயர் இலக்கியம் : நிகழ்காலம் எதிர்காலமம் என்ற அம்சத்தைப் பின்வரும் மூன்று பகுதிகளாகப் பகுத்து நோக்கலாம்.

01. ஆரம்ப காலம்

02. சமகாலம்

03. எதிர்காலம்

இலங்கைத் தமிழரின் புலம்பெயர்வு பல்வேறு காரணங்களின் நிமிர்த்தம் இடம்பெற்றது. 1920 - 1930, 1950 – 1960 காலப் பகுதிகளில்

பெ. சரவணகுமார், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

பொருளியல் மேம்பாடு காரணமாகவே ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றனர்.

ஆனால், 1970 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையில் முனைப்புப் பெறத்தொடங்கிய ஆயுதப் போராட்டத்தின் விளைவாக இடம்பெற்ற புலம்பெயர்வு ஏற்கனவே இடம்பெற்ற புலம்பெயர்வுகளில் இருந்து வித்தியாசமானது. மூன்றாவது கட்டப் புலம்பெயர்வு என்பது உயிர் பாதுகாப்பை முன்னிறுத்தியதாகவே அமைந்தது.[1] எனவே புலம்பெயர்வு இலக்கியத்தின் ஆரம்ப காலம் என்பதனை, 1970 – 1990 க்கு இடைப்பட்ட பகுதியை வரையறை செய்துகொள்வது பொருத்தமானது.

புலம்பெயர் இலக்கியத்தின் ஆரம்ப கால இலக்கிய வெளிப்பாடுகளின் ஊடகமாக கவிதை வடிவமே அமைந்துள்ளது. துப்பாக்கி மொழிகள் மட்டுமே பேசும் நாட்டிலிருந்து துரத்தப்பட்டவர்களின் மன உந்துதல்களின் வெளிப்பாடுகளாகவும் எதிர்கால கனவுகளைப் பறக்கவிட்டவர்களின் ஏக்கங்களாகவுமே அக்கவிதைகள் அமைந்துள்ளமையினை அவதானிக்க முடிகின்றது. 'ஆரம்ப காலக் கவிதைகளின் உள்ளடக்கங்களை முறைப்படுத்திப் பார்க்கின்றபோது, அவற்றில் பெரும்பாலானோர் புலம்பெயர்ந்து சென்ற போது பிரயாண நிலையில் புலம்பெயர்ந்தோர் சந்திக்க வேண்டி வந்த அவலங்களையே முதன்மைப்படுத்தியுள்ளமையினைக் காணமுடிகின்றது. இவ்வாறான கவிதைகள் மிகவும் தத்ரூபமானவைகளாகவும, படிப்பவர் மனதை மிகவும் பாதிப்பனவாகவும அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.[2]

1990 க்கு பின்னரான காலப்பகுதியைச் சமகாலம் என்ற அடிப்படையில் நோக்கலாம். இக்காலப் பகுதியே 'புலம்பெயர் இலக்கியம்' என்ற பகுப்பினைத் தோற்றுவித்தது. அவ்வகையில், புலம்பெயர் இலக்கியத்தின் சமகாலமே அதன் முக்கியத்துவத்தினையும்,

தனித்துவத்தினையும் பதிவுசெய்த காலப் பகுதியாக விளங்குகின்றது. இக் காலப்பகுதி படைப்பாளிகளை இருவகைகளில் பிரித்து நோக்கமுடியும்.

01. புலம்பெயர்வதற்கு முன்னர் படைப்பு முயற்சியில் ஈடுபட்டோர்.

02. புலம்பெயர்ந்த பின்னர் படைப்பு முயற்சியில் ஈடுபட்டோர்.

புலம்பெயர் இலக்கியத்தின் பகுப்புக்கு முதலாவது பிரிவினரின் பங்களிப்பு விதந்துரைக்கத்தக்கது. இப்பிரிவில் எஸ். பொ, சேரன், மு.நித்தியானந்தன், முருகபூபதி, வ.ஐ.ச. ஜெயபாலன், கி.பி. அரவிந்தன், ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், இளவாலை விஜேந்திரன், செவ்விந்தியன், பாலமனோகரன், அ.முத்துலிங்கம் ஆகியோர் முக்கியமானவர்கள். புலம்பெயர்ந்த சூழலில் படைப்பாளிகளாக முகிழ்ந்தவர்களுள் பிரதீபா தில்லை நாதன், தான்யா, சுமதிரூபன், அருந்ததி, துர்க்கா, புஸ்பராஜா, சுரேஸ்கனகராஜா, பிரசாந்திசேகர், கல்லாறு சதீஸ், றஞ்சனி, நிருபா, ஆனந்தப்பிரசாத் இப்பாரம்பரியத்துக்கு உரியவர்கள்.

புலம்பெயர் இலக்கியத்தின் சமகாலம் அதன் பல்வேறு பரிணாமங்களைக் கொண்டுள்ளது. கவிதை, சிறுகதை, நாவல் என அதன் பரப்பு விரிந்து செல்வதைக் காணலாம். இம் மூன்று இலக்கிய வெளிப்பாடுகளிலும் கவிதையே சிறப்பான இடத்தை வகிக்கின்றது. ஈழத்தில் இடம்பெறும் இனப்போராட்டத்தையும், அதன் இழப்புக்களையும் அனுபவத்தினூடாக பெற்றும், பார்த்தும் வருப்வர்களாக சமகாலப் படைப்பாளிகள் விளங்குகின்றனர்.

இந்தப் பின்புலம் அவர்களுடைய இலக்கிய முயற்சிகளுக்கு வலுச்சேர்ப்பதாக அமைந்துள்ளது. படைப்பாளி அனுபவத்தினூடாக இலக்கியத்தைப் படைப்பதால் ஓர் உயிரோட்டம் இழையோடுவதை உணரமுடிகின்றது.

புலம்பெயர் இலக்கியத்தின் தனித்துவத்திற்கு அதன் உள்ளடக்கமும், எடுத்துரைப்பு முறையும் முக்கியமானதாகவுள்ளன. இவ்வகை இலக்கியத்தின் உள்ளடக்கமாகப் போர்காலச்சூழல் ஏற்படுத்திய தாக்கம், புலம்பெயர்ந்த போது ஏற்பட்ட பிரயாண நிலை அவலம், வசதியற்ற தங்குமிடம், விசாச்சிக்கல், புலம்பெயர்ந்த சூழலில் எதிர்நோக்கும் நிறப்பாகுபாடு, இயந்திரமயமான வாழ்வு, புரியாத தேசத்தில் தெரியாத மனிதர்களின் அந்நிய மனோபாவம், அகதி வாழ்வின் கொடுமை, தொழில் பிரச்சினை என்பன புலம் பெயர் இலக்கியம் எடுத்தியம்பும் அவல வாழ்வியலாகும். அத்தோடு, புகலிடச் சூழலில் பெண்ணியச் சிந்தனை பரவலாகப் பேசப்படுகின்றமை புலம்பெயர் இலக்கியத்தின் இன்னொரு பரிமாணத்தைக் காட்டுகின்றது.

புலம்பெயர்ந்தவர்களின் மனக்குமுறல்களைப் பதிவு செய்துள்ள இலக்கிய வடிவங்களுள் கவிதை சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. ஓர் அகதியின் பாடல், இருள் வெளி, றஞ்சனி கவிதைகள், காலத்தின் பதிவுகள், ஏகலைவ பூமி, முகங்கொள், அதிகாலையைத்தேடி, எலும்புக்கூடுகளின் ஊர்வலம், மறையாத மறுபாதி, கோசல்யா கவிதைகள், இனி ஒரு வைகறை, கட்டிடக்காட்டுக்குள், அகதி, சேரன் கவிதைகள் என்பன புகலிட நாட்டுக் கவிதைத் தொகுதிகளாகும். சொந்த நாட்டில் இனத்தின் பெயராலும் மொழியின் பெயராலும் அந்நியப்படுத்தப்பட்ட மக்கள், தெரியாத தேசத்தில் புரியாத மொழியில் தம் பண்பாட்டை இழந்து, அகதியாய்த் தவிக்கும் துன்ப வாழ்வியல் கவிதைகளில் மேலோங்கியிருப்பதைக் காணமுடிகின்றது.

பனித்திரளுக்குள்

செருகுண்ட வீதிகள்

விறைத்துப்போக

வெளிறிய மஞ்சள் விழிகளுடன்

மின்கம்பங்களும்

அசையாது நிற்கும்

நான் மட்டும் அசைவது போல்

எழும் நினைப்பாலும் கூட

அகதி என உணர்கிறேன்[3]

சொந்த நாட்டு உறவுகளை இழந்து, புலம் பெயர்ந்து செல்லும் எதிர்கொண்ட பிரயாண நிலை அவலங்களையும், மன அழுத்தங்களையும் கவிதைகளில் காணமுடிகிறது. பிரயாண நிலை அவலங்களைச் சித்திரிப்பதாக கி.பி. அரவிந்தனின் 'வரும் வழியில்' என்ற கவிதை அமைந்துள்ளது.

எப்போதேனும் சந்திக்கலாம்

என்றிருந்த நண்பர்கள்

நினைவுச் சுழற்சிக்குள்

கனவுப் பொருளாகிப் போயினர்.

சந்திக்காமலேயே

எனக்கும் அவர்களுக்குமான

இடைப்பட்ட பயணமோ

உயிர் துறக்கும் தூரம்

யார் அறிவார் இதனை

கிரேக்கக் கடலில் மூழ்கியும்

ஹங்கேரி நெடுஞ்சாலையில்

பாரவண்டியுள் மூச்சு முட்டியும்

பாதிவழியில் வழிந்தது அவர் கனவின் மீது[4]

புகலிடச் சூழலில் தொழில் கிடைப்பது இலகுவானதல்ல. தொழில் கிடைத்தாலும் இயந்திரமயமான வாழ்வு. இவ்வகையான அவல நிலையிலும் உடன் பிறந்த சகோதரிக்காய் உழைப்பையே வாழ்வாகக் கொண்டவனின் அவல வாழ்வைப் பின்வரும் கவிதை பதிவுசெய்கின்றது. இவ்வகையான கவிதைகள் புலம்பல்களாக மட்டும் வெளிவராமல், அவற்றை உடைத்தெறிகின்றபோக்குக் கொண்டனவாகவும் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

இயற்கையை நனைக்க வைக்கும்

இயந்திரமாக நான்

வாழ்வை விற்று வாழ்வை

வாங்கித்தர

பணத்திற்காய் அலைகிறேன்

ஆம் ஈழத்து தங்கைக்கோர்

கணவனை வாங்கித்தர....

சில கவிதைகள் சொந்த நாட்டு இருப்புப் பற்றிப் பேசுகின்றன. ஆயுதக் கலாசாரத்தால் எம் தேசமே அழிந்துவிடுமோ என்ற ஏக்கம் கவிதைகளில் இழையோடுவதைக் காணலாம். இவ்வாறான கவிதைகள்

சிங்கள அரச படையினரின் ஆயுதப் போராட்டத்தினையும், தமிழ்ப் போராளிகளின் போராட்டத்தையும் கேள்விக்குள்ளாக்குவதாக அமைந்துள்ளமை நோக்கத்தக்கது. (புகலிட நாவல்கள் இதனைச் சிறப்பாகப் பதிவு செய்துள்ளன.)

கடல் வாய் கொள்ளுண்ட

நிலம் போலாகுமோ

துப்பாக்கி வயப்பட்ட எம்தேசம்

கட்டிட மலைகள் சூழ்ந்த நாட்டில் தம் வாழ்க்கையை அமைதியாய் நகர்த்த முடியாத மக்களின் அவல நிலையும் கவிதை பொருளாகியுள்ளது. அமைதியும், கிராமத்து மண் மணமும் நிறைந்த பகுதியின் மனப்பதிவுகளோடு வாழ்ந்தவர்கள் புலம் பெயர்ந்த நாடுகளில் இயந்திரமாய் மாறுகின்ற தன்மையினையும் வெளிப்படுத்துவதாகவே பின்வரும் கவிதை அமைந்துள்ளது.

துருவம் தப்பி

வந்த என்னை

அலாரம் அடித்தெழுப்பும்

கடிகார முள்

ஓடு முன் ஓடி

தாவலில் ஏறி

துள்ளலில் இறங்க

மேல் மூச்சு வாங்கும் ....

புலம்பெயர் இலக்கியத்தில் கவிதைகளின் எடுத்துரைப்பு முறை, அழகியல் சார் அம்சங்கள் என்பன தமிழ் இலக்கியப் பரப்பில்

தனித்துவமானவையாகும். புதிய வாழ்வு, புதிய அனுபவம் என்பவற்றைப் பதிவுசெய்யும் மொழியும் அதனைக் கையாளும் விதமும் தமிழ்க கவிதை உலகுக்குப் புதுமையானதாகும். வேறுபட்ட மொழிகளுக்கிடையில் மௌனமாய் வாழும் வாழ்க்கை அவர்களின் கவிதைகளில் இழையோடுவதையும் உணரமுடிகிறது.

வானம் உமிழும்

இடியிலும் மின்னலிலும்

கவச வாகனங்களையும்

காக்கிச்சட்டைகளையும்

இப்போ காண்பதில்லைதான்

ஆனாலும்

பயங்கரம் உறங்கும்

மௌன இரவில்

காலடி சத்தமும்

நாயின் உறுமலும்

இப்போது

இதயத்துள் இறங்கும்

நிலவின் வார்ப்பில்

மரத்தின் நிழலும் துவக்குடன் அசையும்[5]

சொந்த நாட்டுக் கனவுகளோடு புலம் பெயர்ந்தவர்களில் சிலர் அந்நாடுகளில் நிரந்தர வதிவிடத்தைப் பெறத் தொடங்கினர். இவ்வகை

இருப்பு, பழைய வாழ்வியலின் பண்பாடுகளையும், உணர்வுகளையும் விமர்சனத்திற்குள்ளாக்கியது. இவ்வகை சூழலில் பரந்துபட்ட வாழ்வியல் அனுபவங்களைப் பதிவுசெய்ய வேண்டிய சூழல் உருவானது. இந்தப் பின்புலத்தில்தான் நாவல் என்ற இலக்கிய வடிவம் முக்கியம் பெறத்தொடங்கியது. குறிப்பிட்ட ஒரு சமூகத்தின் பண்பாட்டு அசைவியக்கத்தை மொழிப்படுத்துவதற்கு நாவல் சிறந்த வடிவமாகத் திகழ்கின்றது. சுயபண்பாட்டுச் சமூகத் தளத்தினதும் புகலிடப் பண்பாட்டுத் தளத்தினதும் வாழ்வியலை நாவல்கள் வெளிப்படுத்துகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. இராஜேஸ்வரி பாலசுப்ரமணியத்தின் ஒரு கோடை விடுமுறை (1998) தில்லை ஆற்றங்கரை (1998) வசந்தம் வந்து போய்விட்டது, பனி பெய்யும் இரவுகள், தேம்ஸ் நதிக்கரையில், நாளைய மனிதர்கள், பார்த்தீபனின் ஆண்கள் விற்பனைக்கு, வித்தியாசப்படும் வித்தியாசங்கள், பாதிஉறவு, கடற் புத்திரனின் வெகுண்ட உள்ளங்கள், சோபா சக்தியின் ம், கொரில்லா ஆகிய நாவல்கள் குறிப்பிடத்தக்கவை.

புகலிட நாவல்களில் சில சிங்கள இராணுவத்தினரின் ஒடுக்கு முறைக்கும்; தமிழ்த் தேசியத்தை அடிப்படையாகக் கொண்டு போராடும் தமிழ்ப்போராளிகளின் போராட்டத்துக்கும் எதிரான கருத்தியல்களை வெளிப்படுத்துகின்றன. கவிதைகளில் இவ் அம்சம் மேலோங்கி இருந்தாலும், நாவல்களே ஆதாரபூர்வமாகச் சுட்டிக்காட்டுகின்றன. இவ்வகையில் ஷோபா சக்தியின் நாவல்கள் தனித்து நோக்கத்தக்கவை. கொரில்லா ‘இலங்கையில் - இந்திய இராணுவத்தினராலும், தமிழ்ப் போராளிக் குழுக்களாலும் ஏற்பட்ட கொடுமைகளை விபரிக்கும் பாணியில் எழுப்பட்டுள்ளது. எழுதப்பட்ட முறைமையும், உண்மைச் சம்பவங்கள் அடிக்குறிப்புகளாக இடம்பெறுவதும் இப்படைப்பினை உண்மைத் தன்மை மிக்கதாகப்

பரிணமிக்கச் செய்துள்ளது. இத்தகைய தன்மையால் இப்படைப்புத் தன் மையஓட்டத்துடன் உணர்வு பூர்வமாக நெருங்க வைக்கின்றது.[6]

நிகழ்காலச் சூழலில் சிறுகதை குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை அடைந்துள்ளது. புதுஇடம், புதிய வாழ்வியல் தரும் மிக நுண்மையான அனுபவங்கள் சிறுகதையின் உருவத்திலும், உள்ளடக்கத்திலும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. பனை நிறைந்த பகுதிகளில் வாழ்ந்த மக்கள், பனி நிறைந்த தேசத்தில் படும் வேதனைகள் சிறுகதைகளில் சிறப்பிடம் பெறுகின்றன. பனிப் படிவுகளால் உடல் படும் அவஸ்தை கொடுமையானது. இவ்வாழ்வியல் அனுபவம தமிழச் சிறுகதை வரலாற்றுக்கு புதுமையானதாகும்.

> 'வாழ்க்கையில் பனிப்படிவுகளைப் பார்த்ததேயில்லை. அவற்றை உடலில் தாங்கிய போது ஏற்பட்டது ஆனந்தமா? இந்தப் பனிக் காட்சியின் அழகிற்கும் அதன் தாங்க முடியாத குளிருக்கும் இடையே தவிக்கும் தவிப்பு, அந்தக் குளிர், சுவாசத்தை, சதையை, எலும்பை என்று எல்லா இடங்களையும் தாக்கித் தாக்கி இயற்கை வழங்கிய ஆயுளைப் பறித்தெடுத்து விரைவு மரணத்திற்கு வழி வழங்கிக் கொண்டிருப்பது தண்டனைதானே.'[7]

புலம்பெயர் சிறுகதைத் தொகுப்பில் கல்லாறு சதீசின் சொர்க்கங்களும் தண்டிக்கின்றன, அ. முத்துலிங்கம்- முத்துலிங்கம் சிறுகதைகள், ஷோபா சக்தியின் தேசத்துரோகி, கந்தையாவின் உயரப்பறக்கும் காகங்கள், ராஜேஸ்வரி பாலசுப்ரமணியத்தின் நாளைக்கு இன்னொருத்தன் (1997), அம்மா என்றொரு பெண் (1996), இலையுதிர் காலத்தின் ஒரு மாலை நேரம் (2002), என்பன தனித்துவமானவை. புகலிட நாவல் துறையில் ஒரு வித்தியாசமான கதைசொல்லியாக விளங்கும் (அ. முத்துலிங்கத்தின் கதைசொல்லும் திறனும் முக்கியமானது) ஷோபா சக்தி சிறுகதைத் துறையிலும் தனது

தனித்துவத்தினை வெளிக்காட்டுகின்றார். தேசத்துரோகி சிறுகதைத் தொகுப்பில் உள்ள பதினான்கு கதைகளும் தமிழ்ச் சூழலுக்கு புது வாசிப்பு அனுபவத்தைத் தருபவையாக அமைக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். ஆசிரியரின் நையாண்டியோடு கூடிய மொழிக்கையாளுகை விதந்துரைக்கத்தக்கது.

> "பரீஸ் அண்ணைக்கும் முப்பது வயசாய்ப் போச்சுது. நான் லண்டனில், பெரியண்ணை ஜேர்மனியில, தம்பி சுவிஸ்ல...பரீஸ் அண்ணை தனியாளா இருந்து கஷ்டப்படுறார். தனிய இருக்கிற இளந்தாரிகளுக்குக் கெட்டுப்போறதற்கான 'சான்ஸ்' வெளிநாடுகளில் கூடுதலாக இருக்கு. அதால பரீஸ் அண்ணைக்கு கெதியா ஒரு கலியாணம் செய்து வைக்கவேணும் என்று தங்கை தொலைபேசியில் ஜேர்மனிக்கு வெடிக்க ஜேர்மனி ஊடாக சுவிஸ், சுவிஸ் ஊடாக கொழும்பு என்று இவளது திருமணப் பிரச்சினை சர்வதேச அளவில் வெடித்தது".[8]

புலம் பெயர் இலக்கியத்தில் சமகால வளர்ச்சி வேகம் தொடருமாயின் புலம் பெயர் இலக்கியம் என்றழைக்கும் தன்மை மாறி அந்தந்த நாட்டுத் தமிழ் இலக்கியம் என்று கூறும் தன்மை உருவாகலாம். உதாரணமாக, ஜேர்மனிய தமிழிலக்கியம், அவுஸ்திரேலிய தமிழிலக்கியம், பிரான்ஸ் தமிழிலக்கியம் என்னும் தொடர்கள் வழக்கத்திற்கு வரலாமென்று பொதுவாகச் சுட்டிக்காட்டுவது மனங்கொள்ளத்தக்கது.

புகலிட இலக்கியத்தின் எதிர்காலப் படைப்பாளி யார்? அவர்களது வாழ்வியல் பின்புலம் எவ்வாறு அமையப்போகிறது என்பது பற்றிச் சிந்திப்பது பயனுடையதாகும். புலம் பெயர்ந்து வாழும் இரு தலைமுறைகளால் வளப்படுத்தப்பட்ட புகலிட இலக்கியம், அடுத்த தலைமுறையின் கைகளில் எவ்வாறு வளம்பெறப்போகிறது என்பது ஆய்வுக்குரிய விடயமாகும. புலம்பெயர்ந்த முதலாவது தலைமுறையினர் சுயபண்பாட்டு

வாழ்க்கைக்குள்ளால் வந்தவர்கள். அந்தவாழ்வியல் முறையில் இருந்து விலகாமையினால, அவர்களது இலக்கிய முயற்சிகள் தமிழ்க் கலாசாரத்தோடு பின்னிப்பிணைந்திருந்தது. ஆனால், மூன்றாவது தலைமுறையினர் அத்தகைய வாழ்க்கை அனுபவங்களை அறிந்தவர்கள் அல்லர். அறிந்து கொள்ளக்கூடிய புரிந்து கொள்ளக்கூடிய சூழல் அமையாமையும் முக்கிய காரணமாகும்.

மூன்றாவது தலைமுறை பிறந்து வளர்கின்ற சூழல் அந்நியச் சூழல் ஆகும். அந்தந்த நாட்டு மக்களின் வாழ்வும் மொழியும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. புலம்பெயர்ந்தவர்கள் இவற்றையே தமது பண்பாடாக வடிவமைத்துக்கொள்கின்றார்கள். (புகலிட நாவல்கள் இவற்றைச் சிறப்பாகப் பதிவு செய்துள்ளன) இக்கல்வி முறை அவர்களின் சிந்தனையில் பல மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. தாய் மொழி தமிழா? ஆங்கிலமா? என்கின்ற சூழ்நிலைக்கு ஆளாகின்றனர். ஒரு சமுதாயத்தின் பண்பாட்டு வளர்ச்சியில் மொழியே பிரதான இடத்தை வகிக்கின்றது. தாய்மொழி எதுவென்று புரியாத சூழலில் வாழ நேரும் மூன்றாவது தலைமுறையினர் புலம்பெயர் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு எவ்வாறு உதவ முடியும்?

புலம்பெயர்ந்த நாடுகளில் பெற்றோர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் கவலைக்குரியதாகும். இயந்திரமயமான தொழில் முறையால் தம்பிள்ளைகளைக்கூடக் கவனிக்க முடியாத அவல வாழ்வு வாழ்கின்றனர். பெற்றோரின் அரவணைப்பு கிடைக்காத பிள்ளைகள், தம்மைத் தாமே அந்நியப்படுத்திக் கொள்கின்றனர். ஆங்கிலப் பண்பாட்டு முறைக்கேற்ப தம்மை மாற்றிக் கொள்கின்றனர். 'புலம் பெயர்ந்த தமிழர்களுக்கும் அவர்களது பண்பாட்டின் அடையாளங்களைத் தாம் சென்றடைந்த தேசங்களில் பேணுவது, பேணி அடுத்த தலைமுறையினருக்குக் கையளிப்பது முதலான விடயங்கள் பிரதானமான சவால்களாகவே உள்ளன'.[9]

புலம்பெயர் சூழலில் தொழில் புரியும் பெற்றோர்கள் தாங்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளைக் காரணம் காட்டி, தம்பிள்ளைகள் ஆங்கிலம் பேசவேண்டும் ஆங்கிலத்திலே கல்வி கற்கவேண்டும் என்று விரும்புகின்றனர். இந்நிலைக்கு அவர்கள் வாழும் அந்நியமான சூழலும் அடிப்படைக் காரணமாகும். எது எவ்வாறாயினும், ஆங்கில மொழிக்குக் கொடுக்கின்ற முக்கியத்துவத்தைச் சுயபண்பாட்டு மொழிக்கும் கொடுத்து ஆங்கிலத்தை தொழிலுக்குரிய மொழியாகவும், தமிழ்மொழியைத் தம் பண்பாட்டு அடையாளமாகவும் பேணவேண்டியது மூன்றாவது தலைமுறையினரின் பொறுப்பாகும். தாய்மொழி உணர்வே எதிர்கால படைப்பு முயற்சிகளை வளப்படுத்த முடியும் என்பதே உண்மையாகும்.

புகலிட இலக்கியத்தின் எதிர்கால நிலையினை நிர்ணயிப்பவர்களுள் பெற்றோர்களினதும், படைப்பாளிகளினதும் பங்கு முக்கியமானதாகும். அந்நியச் சூழலுக்குத் தங்களுடைய பிள்ளைகள் முகம் கொள்ளவேண்டும் என விரும்பும் பெற்றோர்கள் தாய்மொழிக் கல்வி, தாய்மொழி இலக்கிய உணர்வு முதலியவற்றை ஏற்படுத்துவது அவசியமாகும். புகலிடச் சூழலின் உணவு முறையால் பிள்ளைகளின் வளர்ச்சி கீழைத்தேய வளர்ச்சியைவிட, மாறுபட்டதாக அமையும். ஆங்கிலப் பண்பாட்டிற்கு ஏற்ப தங்களை வழிசமைத்துக் கொள்ளக்கூடும். இவ்வாறான சிந்தனைப் போக்கை புலம் பெயர்ந்தவர்கள் கொள்வார்களாயின், புலம்பெயர் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சி வேகம் தேக்க நிலையை அடைந்து விடும் என்று பொதுவாகக் கூறுவது இங்கு மனம் கொள்ளத்தக்கது.

எனவே, புலம்பெயர் இலக்கியத்தின் எதிர்காலம் புலம் பெயர்ந்தவர்களின் பண்பாட்டு பேணுகையிலேயே தங்கியிருக்கின்றது. சுயபண்பாட்டு அம்சங்களை இழந்து விடாமல் அவற்றைத் தம் வாழ்வியலோடு

இணைத்துக் கொள்வார்களாயின் 'புலம்பெயர் தமிழ் இலக்கியம்' பல புதிய தளங்களைப் பதிக்க முடியும். அத்தோடு, பன்நாட்டு இலக்கிய பரிச்சயம் பரந்துபட்ட அளவில் விரிவடையக் கூடிய சூழல் நிலையும் ஏற்பட வாய்ப்புண்டு. பிறமொழி ஆக்க இலக்கிய உத்தி முறைகள் உடனுக்குடன் கையாளக் கூடிய சந்தர்ப்பமும் ஏற்படும். இவ்வாறு காத்திரமான முயற்சிகள் நிகழுமாயின், இருபத்தோராம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியப் பரப்பில் பெரும் பரப்பினை, "புலம் பெயர் இலக்கியம" பெற்றுக் கொள்ளும்.

அடிக்குறிப்புகள்

01. பார்க்க, நித்தியானந்தன், வி. (2002) புலம்பெயர் இலங்கைத் தமிழரின் பண்பாட்டுத் தனித்துவம் சில அவதானிப்புகள், கொழும்புத் தமிழ்ச் சங்க வெளியீடு.

02. விசாகரூபன், கி. (2004) புலம் பெயர் கவிதை : உள்ளடக்கம், உணர்த்துமுறை, கோப்பாய்: யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி. ப. 9.

03. பாலமோகன், (ரவி) (1995) செட்டை கழற்றிய நாங்கள், கோவை : விடியல் பதிப்பகம். ப.4.

04. அரவிந்தன், கி. பி. (1999) கனவின் மீதி, சென்னை : பொன்னி பதிப்பகம். ப.85.

05. பாலமோகன், (ரவி) (1995) முன். கு. நூல். ப.5.

06. யோகராசா, செ. (2004) புகலிட நாவல்கள், (கட்டுரை) சிந்தனை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு. ப. 56.

07. சதீஸ், கல்லாறு (2002) சொர்க்கங்களும் தண்டிக்கின்றன,

08. ஷோபா சக்தி, (2003) தேசத்துரோகி, வெளியீடு: அடையாளம் ப. 15.

09. விசாகரூபன், கி. (2004) மேல். கு. நூல். ப. 63.

பெ. சரவணகுமார், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

# ஈழத்து இலக்கிய இதழியலில் ஞானம்

## தோற்றம் - வளர்ச்சி பற்றிய விமர்சன மதிப்பீடு

ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் அதன் வளத்துக்கும் சஞ்சிகைகள் ஆற்றிய பங்களிப்புகள் விதந்துரைக்கத்தக்கவை. குறிப்பாக இருபதாம் நூற்றாண்டில் இயக்க நிலைப்பட்ட இலக்கியச் செயற்பாட்டைச் சஞ்சிகைகள் வடிவமைத்தன. ஒவ்வொரு காலத்திலும் முனைப்புப் பெற்ற கருத்துநிலைகளின் அடிப்படையில் சஞ்சிகைகள் தோன்றி, அக்கருத்து நிலைகளின் உடைவோடு சஞ்சிகைகளின் வரவும் நின்றுபோயுள்ளதை ஈழத்து இதழியல் வரலாறும், தமிழகத்து இதழியல் வரலாறும் எடுத்துக்காட்டுகின்றன. ஈழத்தைப் பொறுத்தமட்டில் மறுமலர்ச்சி, மல்லிகை, மூன்றாவது மனிதன், தாயகம் முதலானவை கருத்துநிலை அடிப்படையில் தோற்றம் பெற்றவை. இவ்வகைப் பாரம்பரியத்துக்குள் வந்து சேர்கின்ற கலை இலக்கிய சஞ்சிகையாக ஞானம் விளங்குகின்றது. ஞானம் இதழ் ஜீன் 2000 ஆம் ஆண்டு முதல் இன்று வரை தொடர்ந்தும் வெளிவந்துகொண்டிருக்கின்றது. நூறாவது இதழாக ஞானம் வெளிவருவதும் குறிப்பிடத்தக்கது. இலங்கையில் தமிழர் அடையாளங்களையும் அவர்களது இருப்பையும் இல்லாதொழிக்கின்ற நிலைமை தலைவிரித்தாடுகின்றது. இவ்வகைச் சூழலில் அவ் அடையாளங்களைச் சுமந்து கொண்டு, காலத்தின் பதிவாக ஞானம் வெளிவருவது அதன் சமூக நோக்கையே பிரதிபலிப்பதாக அமைகின்றது.

பெ. சரவணகுமார், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

கடந்த எட்டு ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கின்ற 'ஞானம்' இதழ் ஈழத்து இலக்கியச் செல்நெறிக்கு ஆற்றிய பங்களிப்பு என்ன? எவ்வெவ் வகையில் அதன் செற்பாடுகள் அமைந்தன? இனி வரவேண்டிய ஞானம் எவ்வாறு அமைதல் வேண்டும் என்பது பற்றிய சிந்தனைகள் இலக்கிய உலகிற்கு பயனுள்ளவையாக அமையும். அந்தவகையில், 99 இதழ்கள் இதுவரை வெளிவந்துள்ளன. அவ் இதழ்களின் மூலம் ஈழத்து இலக்கியப் பரப்புப் பெற்ற பயன் என்ன? என்பதை கோடிட்டுக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

'வெள்ளத்தின் பெருக்கைப் போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்"

என்ற நவீன சிந்தனையின் மொத்த வடிவான பாரதியின் கவிதையை முகப்புக் கவிதையாகக் கொண்டு ஞானம் இதழ் வடிவமைக்கப்பட்டுள்ளது. தி. ஞானசேகரனின் இயல்பான சமூக நோக்கும் படைப்பு மனமும் ஞான இதழின் தொடர்ச்சியான வருகைக்கும் அதன் உள்ளடக்கக் கனதிக்கும் அடிப்படையாக அமைந்துள்ளன எனலாம். அவ்வகையில், "பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்' என்ற மகுட வாசகத்தைச் சிறப்பாகவே பதிவுசெய்த இதழாக ஞானம் விளங்குகின்றது என்பதனை, அதனோடு பரிச்சயம் உள்ளோர் நன்கு அறிவர். இக்கட்டுரையின் நோக்கம் கருதியும் ஞானம் இதழின் உள்ளடக்கப் பகுப்புக் கருதியும் 1. கவிதைகள், 2. சிறுகதைகள், 3. கட்டுரைகள், 4. நேர்காணல்கள், 5. பத்தி எழுத்துக்கள் 6. நூல் மதிப்புரைகள் என்ற அடிப்படையில் இம் மதிப்பீடு அமைகின்றது.

பழையதலைமுறைக் கவிஞர்களினதும் புதிய தலைமுறைக் கவிஞர்களினதும் கவிதைகள் வெளிவந்துள்ளன. தலைமுறை இடைவெளி கவிதையின் பொருளிலும், அதன் உருவத்திலும் வெளிப்படுவதை அறியமுடிகின்றது. புதுவகை எடுத்துரைப்பு முறை சார்ந்து கவிதைகள் படைக்கப்பட்டுள்ளன. பழைய தலைமுறைக் கவிஞர்கள் என்ற வகையில் சி. சிவசேகரம், சோலைக்கிளி, மேமன்கவி, இக்பால் அலி முதலானவர்களின் கவிதைகள் பாடுபொருள் அடிப்படையிலும், எடுத்துரைப்பு முறையிலும் தனித்து நோக்கத்தக்கவை. ஈழத்துத் தமிழ்க் கவிதை வரலாற்றில் இவர்கள் ஒவ்வொருவரும் தனித்துவமான முகங்களைக் கொண்டவர்கள். இப் பண்பை ஞானம் இதழில் வெளியான கவிதைகளிலும் காணமுடிகின்றது.

ஞானம் இதழில் வெளியான சி. சிவசேகரத்தின் மொழிபெயர்ப்புக் கவிதைகள் தனித்து அடையாளப்படுத்தத்தக்கவை. மொழிபெயர்ப்புக் கவிதைகள் புதிய எடுத்துரைப்பு முறைசார்ந்தவைகளாகவும் அமைந்துள்ளன. மேலைத்தேய நாடுகளில் கவிதையில் மொழிக்கையாளுகை எவ்வாறு அமைவு பெற்றுள்ளது என்பதை மொழிபெயர்ப்புக் கவிதைகள் உணர்த்துகின்றன. அவ்வகையில், மொழிபெயர்ப்பு இலக்கியத்துக்கு ஞானம் இதழின் பங்கு கணிசமாக அமைந்துள்ளது. இவ்வகையான முயற்சிகளுக்கு முக்கியத்துவம் வழங்குவது காலத்தின் தேவையாகும்.

புதிய தலைமுறை சார்ந்த படைப்பாளிகளை ஊக்குவித்து அவர்களை இலக்கிய உலகுக்கு அடையாளப்படுத்தியதில் ஞானம் இதழுக்கு முக்கிய பங்கு உண்டு. த. ஜெயசீலன், செ. சுதர்சன், என். ஸாலி அஸீம், ஜெ. திசேரா, நா. ஆனந்தன், கரவையூரான், பத்தனையூர தினகரன், வாகரைவாணன், வே. சங்கீதா

முதலானவர்களின் கவித்துவப் போக்கும், தனித்துவமான எடுத்துரைப்பு முறையும் கவனத்துக்குரியன. ஞானம் இதழ் மூலமாக வெளிக்கொண்டு வரப்பட்ட இலக்கியங்களுள் கவிதைகளை விடச் சிறுகதைகளே உருவ, உள்ளடக்க அமைதிகளில் சிறப்புப் பெறுகின்றன என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

சமகால இலக்கியச் செல்நெறியோடு ஒப்பிட்டு நோக்கத்தக்க வகையில் த. ஜெயசீலன், செ. சுதர்சன், கரவையூரான், தவ சஜிதரன், வாகரைவாணன், ஆதிலட்சுமி சிவகுமார் ஆகியோரது கவிதைகள் விளங்குகின்றன. வேறுபலரின் கவிதைகளும் இவ்வகையில் நோக்கத்தக்கவை. கவித்துவமும், எடுத்துரைப்பு முறையும் செழுமைபெறும் கவிதைகள் மிகக் குறைவாகவே வெளிவந்துள்ளன. இவ்விரு அம்சங்களிலிருந்தும் விடுபட்டு செயற்கையாகக் கோர்க்கப்பட்ட சொற்களே கவிதைகள் என்ற பெயரிலும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. ஞானம் இதழில் வெளியான புதிய தலைமுறைக் கவிஞர்களின் கவித்துவமான கவிதைகளுக்குச் சில உதாரணங்கள்.

நிலவு சாய்ந்து போன நள்ளிரவு

உனக்கும் எனக்குமென்றிருந்த

உலகுக்கு அப்பாலிருந்து

ஒரு குரல் உள் நுழைகிறது

கைகள் பின்புறமாகக் கட்டப்பட்டு

ஓசை எழாதிருக்க வாய் அடைக்கப்பட்டு ...மீறி

அந்தக் குரல் கேட்டுக் கொண்டிருந்தது

.........................................

யன்னல் கதவுகளை அடித்துச் சாத்துவதுபோல

செவிப் பறைகளை மூடிக்கொண்டு

மரத்துப் போனதாய்ப் பாவனை காட்டிநிற்க

முடியவில்லை

வெட்டுண்ட மண்புழுவின் உடலாய்

மனம் துடிக்கிறது...............

(இதழ், 20 – 2002)

எங்களினைச் சுற்றி நிறைந்துள்ள காற்றினிலே

எத்தனை காயங்கள்?

எத்தனை சிராய்ப்புகள்

ஒவ்வொரு துவக்கும் உயர்ந்து வெடிக்கையிலே

ஒவ்வொரு வெடிப்புக்கும்

நம் காற்றுத் துளைபட்டுக்

காயங்கள் பெற்றதுகாண்...

கப்பல், விண்கப்பல்கள்....

நீண்டதூரம் சென்று 'நிலை' குலைக்கும்

ஆட்லறிகள்,

வாய்திறந்து கத்த

வதைபட்டுக் கிழிபட்டு

காற்றில் மிகப் பெரிய காயங்கள் தோன்றிற்றே!

(காயஞ் சுமந்த காற்று - இதழ், 28 – 2002)

மின்மினிப் பூச்சிகள்

காற்றுவெளிக்குச் சரம்கட்ட

தவளையின் தாளத்தோடு

பூமி கீதமிசைக்கும்

இந்த இரவு போதும்

எனது தேசத்தையும் மட்டுமல்ல

தேசத்தைவிடவும் அழகான

தேசப்படத்தையும்

இந்த இரவு

காப்புறுதி செய்யட்டும்

இரவே நில்!

விடியலை எதிர்த்து நில்!

(இதழ் , 30 - 2003)

நிவேதா,

எங்கள் கரங்கள் பிணைகையில் எழும்

திசைகளைப் பார்

அக்கினியும் இருட்குஞ்சும்

எங்கள் மூச்சுக்கள் ஒன்றிப்போம் ஒவ்வொருகணமும்

இருளைத் தின்றது அக்கினி

அக்கணத்து

அக்கினியின் உக்கிர ஒளியில்

கூர்த்துக் கூத்திடும் நெஞ்சு

பொசியுண்டுபோயிற்று இருள்

அதையெண்ணிச் சலிப்பதற்கில்லை

நீர்மையின் நளினத்தைச்

சாத்தான்கள் எப்போதும் சபிக்கத்தான் செய்கின்றன...
(இதழ், 59, 2005)

இவ்வகையான கவித்துவத் தன்மை கொண்ட கவிதைகள் ஒரு சிலவே பதிவுசெய்யப்பட்டுள்ளன. ஞானம் இதழின் ஆசிரியர் சிறுகதைக்கு வழங்கும் முக்கியத்தவத்தைக் கவிதைகளைத் தெரிவு செய்வதிலும் வழங்குதல் வேண்டும். ஞானம் இதழ் மூலம் வெளிக்கொண்டுவரப்பட்ட நல்ல சிறுகதைகளைப் போலவே கவிதைகளும் அமையவேண்டும். அத்தோடு, ஞானம் இதழில் வெளிவந்த கவிதைகளை உள்ளடக்கிய தொகுப்பும் வெளிவருவது முக்கியமானது.

பெ. சரவணகுமார், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

ஈழத்துப் புனைகதை வரலாற்றில் ஞானம் இதழ் மூலமாக வெளிக்கொண்டுவரப்பட்ட கதைகளுக்கு தனித்துவமான இடம் உண்டு. பழைய தலைமுறைப் படைப்பாளிகளும், புதியதலைமுறைப் படைப்பாளிகளும் கதைகளை எழுதியுள்ளனர். ஞானம் இதழ் மூலமாக அறிமுகமாகி, இன்று ஈழத்துச் சிறுகதை ஆசிரியர்களாகப் பலரும் அடையாளங் காணப்பட்டுள்ளனர். புதிய தலைமுறைப் படைப்பாளிகளின் எழுத்து முயற்சிகளுக்குப் பக்கபலமாக ஞானம் இதழ் இருந்து வந்திருக்கின்றது. இதற்குப் புரவலர் புத்தகப் பூங்காவின் மூலம் வெளிக்கொண்டுவரப்பட்ட பீலிக்கரை, ஒரு மணல் வீடும் சில எருமை மாடுகளும் போன்ற நூல்களே சான்றுபகருகின்றன.

ஞானம் இதழில் வெளிவந்த சிறுகதைகள் புதிய உள்ளடக்கம் சார்ந்தவைகளாகவும், புதுவகை வடிவக் கையாளுகை உடையவைகளாகவும் விளங்குகின்றன. புகலிட நாட்டு சிறுகதைகளை அறிமுகம் செய்வதூடாக, புலம் பெயர்ந்தவர்களது வாழ்வியல், அவர்களது ஆக்க இலக்கியங்களில் வெளிப்படும் வடிவமாறுதல்கள் என்பன புலப்படுத்தப்பட்டன. ஞானம் இதழின் தேசம் கடந்த பகிர்தல் இவ்வகை ஆக்க இலக்கிய முயற்சிகளுக்கு அடிப்படையாக அமைந்தன.

இன்று, ஈழத்தில் அடையாளங்காணப்பட்ட புதிய சிறுகதை ஆசிரியர்களுள் ஒரு பகுதியினர் ஞானம் இதழ் மூலமாக அறியப்பட்டவர்களே. ஞானம் இதழில் வெளியான கதைகளின் உருவம், உள்ளடக்கம் கருதி சிறப்புப் பெறும் சிறுகதை ஆசிரியர்களாக வீ.என். சந்திரகாதி, இராஜேஸ்கண்ணன், டிலான் ஜெயந்தன், கார்த்திகா பாலசுந்தரம், பிரமிளா செல்வராஜா, சிவனு மனோகரன், தாமரைச் செல்வி, சுதர்ம மகாராஜன், தீரன், ஒ.கெ. குணநாதன், திசேரா, கவிதா,

உக்குவளையூர் அம்ரீதா, தமிழ்ச் செல்வி முதலானவர்களின் கதைகள் தனித்துவமானவை.

புதிய தலைமுறைப் படைப்பாளிகளின் அரசியற் பின்புலமும், இலக்கியம் பற்றிய நோக்கும் சிறுகதையின் உருவ அமைதியிலும், உள்ளடக்க அமைதியிலும் தனிச் சிறப்புப் பெறுகின்றன. ஞானம் இதழ், சிறுகதைகளின் வடிவப் பரிசோதனைக்கும் வழிசமைத்திருப்பதை உணரமுடிகின்றது.புதுவகைப் பாடுபொருளை வெளிப்படுத்துவதற்குச் சிறுகதையின் உருவ அமைதிகள் பரிசோதிக்கப்பட்டுள்ளன. இவ்வகைப் பரிசோதனை முயற்சி சார்ந்த கதைகள் ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை வரலாறுக்குப் புதுமையானதும் ஆகும்.

ஈழத்துச் சிறுகதை வரலாறுக்கு ஞானம் இதழ் ஆற்றிய பங்களிப்பை மதிப்பிடுவதற்கு, இதழில் வெளிவந்த கதைகள் தொகுக்கப்படுதல் அவசியம். ஈழத்துச் சிறுகதை வரலாற்றின் முழுமை என்பது ஞானம் இதழில் வெளிவந்த சிறுகதைகளிலும் தங்கிருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

ஞானம் இதழில் வெளியான கட்டுரைகள் பல்வேறு பொருண்மை அடிப்படையில் அமைந்தவைகளாகும். ஞானம் இதழ் விவாதத்துக்கான ஒரு கருத்தாடல் தளமாகவும், சமகால இலக்கியங்களின் போக்குகளைச் சுட்டிக்காட்டுவதாகவும் இயங்கி வந்திருக்கின்றது என்பதனைக் கட்டுரைகளின் வாயிலாகவும் அறிந்துகொள்ளமுடிகின்றது. இலக்கியம், அரசியல், சினிமா, கலை, கலாசார விடயங்கள் பற்றி எழுந்தவைகள் ஏதோ ஒரு வகையில் பயனுள்ளவைகளாகவே அமைந்தன. இலக்கியம் பற்றிய கருத்துக்களும், விமர்சனங்களும் ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கும் படைப்பாளிகளின் படைப்பு முயற்சிகளுக்கும் ஆதர்சனமாக அமைந்தன என்பதை ஞானம் இதழில் வெளியான வாசகர் கடிதங்கள் உணர்த்துகின்றன.

சமகால இலக்கிய ஆளுமைகளின் வரலாற்றுப் பணிகளைப் பற்றி, ஞானம் இதழில் வெளிவந்த கட்டுரைகள் பயனுடையவைகளாகும். வாழ்கின்றபோதே உரியவர்களுக்கான பெருமை சென்று சேருதல் வேண்டும் என்ற வகையில் மணிவிழா நாயகர்கள் பற்றிய கட்டுரைகள் அமைந்தன. மணிவிழா நாயகர்களின் பல்துறை சார்ந்த பணிகளைப் பதிவுசெய்து அவற்றை வரலாற்று ஆவணமாகப் பயன்படுத்துவதற்கு அவ்வகையில் அமைந்த கட்டுரைகள் காரணமாக அமைகின்றன எனலாம். இவ்வாறான முயற்சிகள் தொடர்ந்தும் நடைபெற வேண்டியவை. பக்கம் சாராது, நடுநிலையில் இயங்கிவருவது ஞானத்தின் தனிச்சிறப்பாகும்.

ஞானம் இதழில் வெளியான கட்டுரைகளில் பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர் அ. சண்முகதாஸ், கலாநிதி ம. இரகுநாதன், கலாநிதி நா. சுப்பிரமணியம், செங்கையாழியான் (குணராசா), கலாநிதி யோகராசா, இ. இராஜேஸ்கண்ணன், தி.ஞானசேகரன், செ.சுதர்சன், தெளிவத்தைஜோசப், என். சோமகாந்தன், ந. பார்த்தீபன், லெனின் மதிவானம், என்.செல்வராஜ், அ. முகம்மது சமீம், முரகபூபதி முதலானவர்களின் கட்டுரைகள் தனித்து நோக்கத்தக்கவை.

ஞானம் இதழில் வெளியான கட்டுரைகள் பல்வேறு சிந்தனைத் தளங்களிலிருந்து வெளிவந்தவை. ஒவ்வொரு சித்தாந்த முகாமுக்குள்ளும் இருந்து வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் ஞானத்தின் மூலமாகப் பதிவுசெய்யப்பட்டன. தமிழ்ச் சூழலில் வெளியாகும் சஞ்சிகைகள் குறிப்பிட்ட ஒரு சித்தாந்த வலைப்பின்னலுக்குள் சிக்கிக் கொள்வது அனைவரும் அடைந்த விடயம். இதிலிருந்து மாறுபட்டு, பன்மைத்துவமான சிந்தனைப் பரப்புகையை முன்னிறுத்தி, ஞானம் வருவது இங்கு மனங்கொள்ளத்தக்கது. எவ்வித சித்தாந்தத்துக்குள்ளும் அகப்படாமல், ஒரு சஞ்சிகை கொண்டமைய வேண்டிய ஒழுக்க

நியமங்களின் தளமாக இருந்து, பகிர்தலின் மூலம் விரிவு கண்ட இதழாக ஞானம் திகழ்கின்றது. இன்றைய நவகாலனித்துவச் சூழலில் பன்மைத்துவமான சிந்தனைத் தளங்கள் விரிவு பெறுவதற்கு ஞானம் இதழ் வழிசமைத்துள்ளது.

இவற்றோடு, 1980 களுக்குப் பின்னர் மேலைத்தேய நாடுகளில் முனைப்புப் பெற்ற புதிய கருத்துநிலைகள் ஞானம் இதழில் வெளியான கட்டுரைகள் மூலம் பகிரப்பட்டன. புதுவகை கருத்துநிலைகளின் நியாயப்பாடுகளையும், அதன் அரசியல் இயங்கு தன்மைகளையும் சுட்டிக்காட்டும் வகையில் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. குறிப்பாக, பெண்ணியம், பின் நவீனத்துவம், இருத்தலியம், பின் காலனித்துவம் பற்றிய தரமான கருத்தாடல்கள் இவ்விதழ் மூலமாக பகிரப்பட்டன. இவ்வகைக் கட்டுரைகள் ஈழத்துத் தமிழ் இலக்கியச் சூழலின் இயங்கியல் நிலைகளைக் கோடிட்டுக் காட்டுவனவாக அமைந்தன.

ஈழத்து இலக்கிய ஆளுமைகளின் கருத்துக்கள் நேர்காணல்கள் மூலமாகவும் பதிவுசெய்யப்பட்டன. ஈழத்தில் நவீன இலக்கியப் பரப்பில் நிகழ்ந்து மறைக்கப்பட்ட, வெளிக்கொண்டுவரப்படாத பல கருத்துக்கள் நேர்காணல்கள் மூலமாகப் பகிரப்பட்டன.

ஈழத்து இலக்கிய வரலாற்றின் முழுமை பற்றிய ஆய்வுகளுக்கு இவ்வகை நேர்காணல்கள் பெரும் பங்கு வகிக்கும் என்பதில் கருத்துவேறுபாட்டுக்கு இடமில்லை. முற்போக்குவாதம், நற்போக்குவாதம் என்ற சித்தாந்தப் பிரிப்புக்குள் செயற்பட்ட இலக்கிய ஆளுமைகளின் கருத்துக்கள் ஞானம் இதழின் மூலம் பதிவுசெய்யப்பட்டமை, அவ்விதழின் வரலாற்றுப் பணிகளில் ஒன்றாகும். சமகால இலக்கிய ஆளுமைகளின் வரலாற்றுப் பதிவுகள் ஏற்றியும்

அவர்களது காலப்பகுதியில் நிகழ்ந்த கருத்துநிலைகள் பற்றியும், மறைக்கப்பட்ட மறைப்பின ஊடாக நிகழ்ந்த அரசியல் பற்றியும் வெளிக்கொண்டுவரும் வகையில் ஞானத்தின் நேர்காணல்கள் அமைந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

சமகால இலக்கிய ஆளுமைகள் என்ற வகையில் பேராசிரியர்களான கா. சிவத்தம்பி, எம். ஏ. நுஃமான், பொன் பூலோகசிங்கம், எஸ். தில்லைநாதன், வீ அரசு, எஸ். பொன்னுத்துரை, டொமினிக் ஜீவா, சித்திரலேகா மௌனகுரு, புதுவை இரத்தினதுரை, செ. யோகநாதன், வரதர், செங்கையாழியான் முதலானவர்களின் நேர்காணல்கள் ஞானம் இதழுக்கும்; அதன் வளர்ச்சிக்கும் பெரும் துணைபுரிந்தன.

பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர் எம். ஏ. நுஃமான், எஸ். பொன்னுத்துரை ஆகியோரின் நேர்காணல்கள் ஈழத்துச் சூழலில் இலக்கியத்தின் இயங்குநிலை பற்றியும், முற்போக்குவாதம், நற்போக்கு வாதங்களின் நியாயப்பாடுகள் பற்றியும், புதுவகைச் சிந்தனைத் தளங்களின் அரசியல் பற்றியும் சுட்டிக்காட்டுவனவாக அமைந்தன. அத்தோடு, பேராசியரியர் வீ. அரசு, புதுவை இரத்தினதுரை ஆகியோர்களது நேர்காணல்கள் மிகுந்த பயனுடையவை. வன்னிப்பிராந்தியத்து இலக்கிய ஆக்கங்களையும், போரியல் சார்ந்த இலக்கியங்களின் தகவல்களையும், வாழ்வியலையும் வெளிக்கொண்டுவரும் வகையில் புதுவை இரத்தினதுரையின் நேர்காணல் அமைந்தது. ஈழத்து இதழியல் பண்பாட்டில், போரியல் இலக்கியம் பற்றிய கருத்தாடல்கள் ஞானம் இதழூடாகவே நிகழ்த்தப்பட்டன. ஞானம் இதழூடாகப் பதிவுசெய்யப்பட்ட நேர்காணல்கள் தொகுப்பு வடிவம் பெறுவது அவசியமானது. தொகுப்பாக வெளிவருமாயின், ஈழத்து இலக்கிய வரலாற்று எழுதுகைக்குக் கூடுதல் பயனுடையதாக அமையும்.

பெ. சரவணகுமார், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

ஞானம் இதழில் பதிவுசெய்யப்பட்ட பத்தி எழுத்துக்கள் தனித்து நோக்கத்தக்கவை. உரைநடையின் மொழி அமைப்பில் புதிய தளங்கள் விரிவு பெறுவதைப் பத்தி எழுத்துக்கள் காட்டுகின்றன. ஞானம் இதழின் தொடக்க காலத்திலிருந்து இன்றுவரை பத்தி எழுத்துக்களாலும் வாசகர்களைக் கவர்ந்தவராகக் கலாநிதி துரை மனோகரன் விளங்குகின்றார். ஆரம்பத்தில் 'நான் பேச நினைப்பதெல்லாம்' என்ற தலைப்பின் கீழும் பின்னர் 'எழுதத் தூண்டும் எண்ணங்கள்' என்ற தலைப்பின் கீழும் பத்தி எழுத்துக்களை எழுதிவருகின்றார். கலை, இலக்கியம், வானொலி, திரைப்படம், அரசியல் பற்றிய அவரது எழுத்துக்கள் மிகுந்த பயனுடையவைகளாக அமைந்தன. இவ்வகைப் பத்தி எழுத்துக்கள் அவருக்கே உரிய பாணியில் அமைந்துள்ளமை சிறப்பம்சமாகும். ஞானம் இதழின் மூலமாக வளர்ந்த பத்தி எழுத்துக்குக் கலாநிதி துரை மனோகரன் அவர்களின் பங்களிப்பு முதன்மையானது. இவ்விதழில் பத்தி எழுத்துக்கள் மூலம் தமது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டோரில் தம்புசிவா, குறிஞ்சிநாடன், செ. சுதர்சன், ஞானபண்டிதன், இளைய அப்துல்லாஹ், விஜயன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இன்றைய நவீன தொழிநுட்ப உலகில் வெளியிடப்படும் எல்லா நூல்களையும் கற்பது என்பது இயலாத காரியம். ஆயினும் நல்ல நூல்களை தேடிக் கற்க வேண்டியது காலத்தின் தேவை. அவ்வகையில், ஞானம் இதழில் "நூல்மதிப்புரைகள்" என்ற பகுதியின் கீழ் புதிதாக வெளியீடப்படும் நூல்கள் அறிமுகஞ் செய்யப்படுகின்றன. அத்தோடு, அந்நூல்களின் கனதி பற்றியும் விமர்சனக் குறிப்புகள் வெளியிடப்படுகின்றன. இவை வரவேற்கப்படவேண்டியவைகள். இலக்கிய உலகில் அறிமுகமாகும் புதிய எழுத்து முயற்சிகளை ஆண்வப்படுத்துவதாகவும் அது விளங்குகின்றது. இவ்விதழில் நூல்

மதிப்புரைகளை எழுதியவர்களில் நக்கீரன் (கலாநிதி துரை மனோகரன்), கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், கலாநிதி வ. மகேஸ்வரன், நாராயணன் யோகேஸ்வரி சிவப்பிரகாசம், குறிஞ்சிநாடன் முதலியோரின் நூல் மதிப்புரைகள் தரமானவைகளாக அமைந்தன.

ஈழத்து இதழியல் வரலாற்றில் ஞானம் இதழின் பங்களிப்பு ஒரு திருப்பு முனையாக அமையும் என்பதற்கு இதுவரை வெளிவந்த இதழ்களே சான்றுபகருகின்றன. காலத்தின் தேவை அறிந்து அதன் செயற்பாட்டுத் தளங்கள் விரிவுபெற்று வருவது மகிழ்ச்சிக்குரியது. அத்தோடு, இன்றைய சமூகத்துக்கான அதன் அரசியல் அசைவியக்கத்துக்கான புதிய சிந்தனைத் தளங்களை அடிப்படையாகக் கொண்டு "ஞானம்" விரிவுபெறுவதும் அவசியமாகும். ஈழத்து இலக்கிய இதழியல் வரலாற்றில் 'ஞானம்' பெறும் முக்கியத்துவம் பற்றிக் கலாநிதி நா. சுப்பிரமணியம் கூறும் கருத்து இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

"ஈழத்தின் தமிழிலக்கியச் சூழலின் இயங்கு நிலை பற்றிய தகவல்களை உடனுக்குடன் பெறுவதற்கும், அது பெருந்துணை புரிகின்றது. அதேவேளை, அதனுடைய பார்வைப்பரப்பு, ஈழம் என்ற புவியெல்லையைத் தாண்டி தமிழ் கூறும் நல்லுலகை நோக்கி விரிந்து செல்வதை உணரமுடிகின்றது. இவ்வகையில், சமகாலத் தமிழ் இலக்கியப் பரப்பில் முக்கிய இணைப்புப் பாலங்களில் ஒன்றாக அது செயற்பட்டு நிற்பது தெளிவாகவே தெரிகின்றது."

குறிப்பு :- இக்கட்டுரை ஞானம் நூறாவது ஆண்டு நினைவு மலரில் பிரசுரமானது. 2008.

# சாதியின்மையா, சாதிமறைப்பா?

## 'பின்காலனித்துவச் சூழலில் சாதியம் பற்றிய வாசிப்பு'

## ஒரு சமூகவியல் நோக்கு

தென்னாசிய நாடுகளில் வாழும் மனித சமூகத்தின் பண்பாட்டு நியமங்களை அடையாளப்படுத்தும் கூறுகளில் சாதியம் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. மனிதர்களின் உருவத் தோற்றம், தொழில் வகைமை, குண இயல்புகள் என்பவற்றை மையப்படுத்தி, சாதியம் பற்றிய கருத்துருவாக்கம் கட்டமைக்கப்பட்டது. இந்திய, இலங்கை சமூகப்புலங்களில் சாதியம் வெறும் பண்பாட்டுக் கூறாக மாத்திரமன்றி, சாதியத்தூடான அரசியல் கட்டமைப்பு மிக நீண்ட காலமாகவே வடிவமைக்கப்பட்டு வந்துள்ளது. தமிழகச் சூழலில் இந்துத்துவம் கட்டமைத்த வர்ணாச்சிரம தத்துவத்தூடாகவே சாதியம் அரச அங்கீகாரத்தோடு நிலைநிறுத்தப்பட்டது. இந் நீண்ட கட்டமைப்புக்குள் வளர்ந்துவந்த சாதியம் பற்றிய எண்ணக்கரு காலச்சூழலுக்கு ஏற்ப வடிவமைத்தும், வாசிக்கப்பட்டும் வந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. காலனித்துவம், பின்காலனித்துவக் காலங்களில் சாதியம் பொருள் கொள்ளப்பட்ட விதமும் வாசிக்கப்பட்ட முறையும் நுண்ணரசியல் சார்ந்தவைகளாகவே அமைந்துள்ளன. மாக்சியம் சாதியத்தை வர்க்க முரண்பாட்டின் முதற்படியாகவே பொருள் கொண்டது. எனவே, சாதியத்தைப் பொருள் கொள்வதிலும், அதனை வாசிப்பதிலும் அவரவர் சார்ந்துள்ள கருத்துநிலை கூடுதல் செல்வாக்குப் பெற்றிருக்கும்.

பெ. சரவணகுமார், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

இந்தப் பின்புலத்தை அடிப்படையாகக் கொண்டு சாதியின்மையா, சாதிமறைப்பா? என்ற நூலைக் கட்டவிழ்த்துப் பார்ப்பது பொருத்தமானது.

சர்வதேச தலித் கூட்டொருமைப்பாட்டு வலைப்பின்னலின் அனுசரணையோடும், அதுசார்ந்த நுண்ணரசியல் இயங்கு நிலையோடும் இந்நூல் வெளிவந்துள்ளது. இந்நூல் ஏழு அத்தியாயங்களையும், மூன்று பின்னிணைப்புகளையும் கொண்டமைந்துள்ளது. தனிப்பட்ட கட்டுரை ஆசிரியர்களின் கருத்துநிலை சார்ந்த கட்டுரைகள் இடம்பெறவில்லை. இணையாசிரியர்களின் கட்டுரைகளாகவே ஒவ்வொரு அத்தியாயமும் அமைந்துள்ளது. எனவே, தனிப்பட்டவரின் சமூகம், பிரதேசம், கருத்துநிலை சார்பு வாதங்கள் இந்நூலில் ஆதிக்கம் பெறவில்லை எனலாம்.

காலனித்துவக் காலத்திலும், பின்காலனித்துவக் காலத்திலும் சாதியம் பொருள் கொள்ளப்பட்ட விதம் வேறுவேறானது. ஒவ்வொரு காலத்திலும் மேலோங்கி இயங்கிய அரசியல் வேறுபட்ட வாசிப்புக்குக் காரணமாக அமைந்தது. அவ்வகையில், இந்நூலின் ஆய்வுப் பின்னணியைக் காலிங்க டியூடர் சில்வா, பரம்சோதி தங்கேஸ், பி.பி. சிவப்பிரகாசம் ஆகியோர் எழுதியுள்ளனர். இலங்கைச் சூழலில் சிங்கள, யாழ்ப்பாண, மலையகச் சமூகக்குழுமங்களிடையே சாதியம் வளர்க்கப்பட்ட அல்லது வடிவமைக்கப்பட்ட விதத்தை மிகச் சுருக்கமாக முதலாவது அத்தியாயம் பதிவுசெய்துள்ளது. சிங்கள, யாழ்ப்பாண, மலையகச் சமூகங்களிடையே சாதியம் எவ்வாறு இயங்குநிலைகளாக இருக்கின்றது என்பதை அறிமுகஞ் செய்வதோடு ஆய்வின் நோக்கம், முறையியல்கள் என்பவற்றையும் இவ்வியல் வெளிப்படுத்தி நிற்கின்றது.

காலனித்துவத்துக்கு முன்பும், பின்பும் சாதியம் பொருள்கொள்ளப்பட்ட விதத்தையும், சாதியத்தை கையாள்வதில் ஆங்கிலக்காலனித்துவ வாதிகள் எவ்வாறு செயற்பட்டனர் என்பதையும் இரண்டாம் அத்தியாயம் விளக்குகின்றது. அத்தோடு, காலனித்துவக் காலங்களில் சிங்கள, யாழ்ப்பாணம் மற்றும் மலையகப் பகுதிகளில் சாதியத்தின் இயங்குதன்மைகளையும் வெளிப்படுத்துகின்றது. காலனித்துவத்தின் நுண்ணரசியல் சார்ந்த மேலாண்மை சாதியைக் கையாள்வதிலும் இழையூடுகின்றது. இது பற்றிக் கட்டுரையாசிரியர்கள் கூறும் கருத்து ஆழ்ந்த சிந்திப்புக்குரியது.

> ‘காலனித்துவம் சாதியமைப்பினைச் சில வழிகளில் பலவீனப்படுத்தியது போல் அதுவே வேறு சில வழிகளில் சாதியைப் பலப்படுத்தியும் மீள் கண்டுபிடிப்பும் செய்துள்ளது”.
> (பார்க்க: ப. 18.)

பெருந்தோட்டப் பகுதிகளில் சாதியத்தைத் தொழில் அடிப்படையில் மீட்டுருவாக்கம் செய்தது காலனித்துவக் காலமே எனலாம். நிலப்பிரபுத்துவச் சமூக அமைப்பில் காணப்பட்ட சாதிய அமைப்பு, பெருந்தோட்ட உற்பத்திமுறைக்கு ஏற்ப தொழில் அடிப்படையில் வடிவமாறுதல் பெறுகின்றது. கங்காணி, கணக்குப்பிள்ளை முதலிய தொழில் பகுப்பும் அந்தஸ்து உருவாக்கமும் சாதியை முன்னிறுத்தியே வழங்கப்பட்டமை மனங்கொள்ளத்தக்கது. இரண்டாவது அத்தியாயம் வரலாற்று ரீதியான கண்ணோட்டம், யாழ்ப்பாணச் சமூகத்தில் சாதிப்பாகுபாடு, சிங்களச் சமூகத்தில் சாதிப்பாகுபாடு, மலையகப் பகுதியில் சாதிப்பாகுபாடு ஆகிய நான்கு உபதலைப்புகளை அடிப்படையாகக் கொண்டு பிரதான தலைப்பு விளக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது அத்தியாயம், சிங்களச் சமூகத்தில் சாதிப்பாகுபாடு என்ற தலைப்பில் அமைக்கப்பட்டுள்ளது. சிங்களச் சமூகத்தில் சாதியம் நிலைநிறுத்தப்பட்ட முறையினையும், அதன் தனித்துவமான இயல்பு நிலைகளையும் சுருக்கமாக வெளிப்படுத்துகின்றது. இக்கட்டுரையைக் காலிங்க டியூடர் சில்வா, கொடிகபத்தே, நிலங்க சந்திமா அபேவிக்ரம ஆகியோர் எழுதியுள்ளனர். இந்தியச் சாதி முறைகளோடு ஒப்பிடும்போது சிங்களவர்களின் சாதிப்பகுப்பும்; சாதிகளுக்கான அந்தஸ்து உருவாக்கமும் வேறுவேறாக அமைந்துள்ளமையினை காணலாம். சிங்களச் சமுதாயத்தில் "இராஜகாரிய முறையே" சாதியத்தை இயங்குநிலையாக வடிவமைத்தது எனலாம். சிங்களச் சமூகத்தில் சாதிப்பாகுபாடு என்ற பொதுத் தலைப்பில் இக்கட்டுரை அமைந்தாலும் மூன்று கிராமங்களை அடிப்படையாகக் கொண்டு சிங்களச் சமூகத்தில் சாதியம் எவ்வாறு இயங்குநிலைகளாக இருக்கின்றது என்பதை வெளிப்படுத்துகின்றது. வலிவிட்ட மேளம் அடிக்கும் சமூகத்தையும், ஹேனவல கின்னற சாதியினையும், குறகல றொடி சாதியினையும் அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. காலனித்துவத்துக்கு முன்பும், பின்பும் சாதியை வடிவமைப்பதில் ஏற்பட்டுவந்த மாற்றங்களை இவ் அத்தியாயம் விபரிக்கின்றது.

நகரமயமாதல், கல்வி வாய்ப்புகள், திருமணமுறைகள், வேறுபட்ட சமூகங்களுக்கிடையிலான ஊடாட்டம் என்பன சாதியத்தின் இயங்குநிலைகளில் எவ்வாறு பாதிப்புச் செலுத்துகின்றது என்பதை ஆய்வுக்கு உட்படுத்துவது அவசியமானதாகும். புதிய உற்பத்தி உறவுகளின் பின்னணியில் உருவாகும் சமூகத்தில் அச்சமுதாயம் கட்டமைக்கும் கருத்துநிலைக்கு ஏற்ப சாதியம் வடிவநிலையில் மாற்றங்களைப் பெறமுடியும். ஆயினும் சாதியத்தின் நுண்ணரசியல்

சார்ந்த இயங்குநிலை சமூகத்தில் மேட்டிமைச் சக்தியாக விளங்குபவர்களின் அரசியலையே கொண்டிருக்கும். இந்தப் பின்புலத்தை அடிப்படையாகக் கொண்டு சமூக அசைவியக்கத்தையும் சாதியத்தின் இயங்குநிலையையும் நோக்குவது பொறுத்தமானது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணச் சமூகத்தில் சாதியப்பாகுபாடு என்ற கட்டுரை சமூக அசைவியக்கப் பின்புலத்தில் எழுதப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியத்தின் எழுச்சியும், தமிழர் விடுதலை போராட்டத்தின் வகைமாதிரியும் இறுக்க நிலையில் இருந்த சாதியத்தை எவ்வாறு பாதித்தது என்பதை இக்கட்டுரை விளக்குகின்றது. குறிப்பாக, யுத்தத்தின் விளைபொருளாக்கப்பட்ட அகதி வாழ்வு, முகாம்களின் உருவாக்கம், கிராமியச் சிதைவு என்பன சாதியத்தின் இயங்குநிலைகளில் எவ்வகையான பாதிப்பினைச் செலுத்தின என்பது பற்றிக் கட்டுரை விபரிக்கின்றது. சாதியத்துக்கு எதிரான கருத்துநிலையை மையப்படுத்தியே யாழ்ப்பாணத்தில் விடுதலை போராட்ட இயக்கங்கள் மேற்கிளம்பின. விடுதலைப் போராட்டங்களின் பலமும், பலவீனமும் சாதியத்தை பொருள் கொண்டதிலும் அதனை இன்னொரு தளத்தில் மீட்டுருவாக்கம் செய்ததிலுமே தங்கியிருந்தது.

மல்லாகம் அகதி முகாமில் வாழும் மக்களிடையே சாதியம் எவ்வகையில் வடிவம் கொள்கின்றது என்பதைக் கட்டுரையாசிரியர் பதிவுசெய்கின்றார். சாதிய அடுக்கமைவில் வாழ்ந்தவர்கள் இன்று புலம்பெயர் நாடுகளிலும் தமது சாதிய மேட்டிமையை வடிவமாற்றம் செய்துள்ளமை மனங்கொள்ளத்தக்கது. இது பற்றிப் புலம்பெயர் புனைகதைகள் மிகச் சிறப்பாகப் பதிவுசெய்துள்ளன.

எனவே, புதிய சமூக மாறுதல்கள் ஏற்படும்போது, சாதியம் என்ற எண்ணக்கரு எவ்வாறு மாற்று வடிவத்தைப் பெற்றுக்கொள்கின்றது அல்லது நுண்ணரசியல் சார்ந்து எவ்வாறு இயங்குகின்றது என்பது மிக முக்கியமானது.

மலையகச் சமூகத்தில் சாதியப்பாகுபாடு என்ற கட்டுரை மலையகச் சமூகப்பின்புலத்தில் எழுதப்பட்டுள்ளமை முக்கியமானது. மலையகத்தில சாதி, தொழில் ரீதியாக வடிவம் கொள்வதற்குக் காலனித்துவக் காலமே அடிப்படையாக அமைந்தது. சாதியத்தைத் தொழில் அடிப்படையில் மீட்டுருவாக்கம் செய்தலில் காலனியத்தின் நுண்ணரசியல காரணமாகியது. எனினும், பெருந்தோட்டத்துறைகளில் சாதியத்தின இயங்கு நிலைகளை ஆய்வுசெய்யும் போது சில முக்கிய அம்சங்களை அவதானிப்பது அவசியமாகும். தென்னிந்தியச் சூழலில் வேறுபட்ட தொழில், சாதிய அடுக்கமைவில் வாழ்தவர்கள் இலங்கையில் (மலையகப் பிராந்தியம்) ஒரேவகையான பொருளாதார உற்பத்தி உறவுக்குள் அமர்த்தப்பட்டனர். இதனால் ஒரே சாதியக்குழுமத்தைச் சேர்ந்தவர்கள் குறிப்பிட்ட பிரதேசத்துக்குள்ளும் வெறுவேறு சாதி அந்தஸ்தில் உள்ளவர்கள் ஒரே பிராந்தியத்துக்குள்ளும் உள்வாங்கப்பட்டனர்.

மலையகச் சமூகத்தில் சாதியப்பாகுபாடு என்ற பொது தலைப்பில் கட்டுரை அமைந்திருந்தாலும் ஒருசில பிரதேசத்திலிருந்து எடுக்கப்பட்ட தகவல்களை முன்னிறுத்தியே இக்கட்டுரை அமைந்துள்ளது. மலையகத்தில் சில தோட்டப்பகுதிகளில் ஒரே சாதிக்குழுமம் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே, ஆய்வுப் பிராந்தியங்களைத் (தோட்டங்களை) தெரிவுசெய்வதில் கூடுதல் கவனம் அவசியமாகும். எனினும், மலையகத்தில் சாதியத்தின் இயங்குநிலைகளைக கட்டுரை ஆசிரியர்கள் எடுத்துக்காட்டியுள்ளமை மனங் கொள்ளத்தக்கதே.

சாதிய அடுக்கமைவில் வாழ்ந்தவர்கள் குறிப்பிட்ட தொழில முறைமைக்குள்ளும், லயவாழ்க்கை முறைக்குள்ளும் உள்வாங்கப்பட்டதனால் சாதியத்தின் இறுக்கம் தளர்வடைவதற்கு காரணமாக அமைந்தது. காலனித்துவக் காலத்தில் கங்காணி, கணக்குப்பிள்ளை என்பவர்களைத் தெரிவுசெய்வதூடாக, எவ்வாறு சாதியம் மீள்உருவாக்கம் பெற்றதோ, அதுபோலவே பின்காலனித்துவக் காலத்திலும் தொழிற்சங்கங்கள் சாதியத்தை மீட்டுருவாக்கம் செய்தன. சாதியத்தை மையப்படுத்திய அரசியல் இயங்குதன்மை மலையகத்தில் தற்போதும் செயற்பாட்டில் உள்ளமை மனங்கொள்ளத்தக்கது.

நகரமயமாதலும், அதன் விளைபொருளான சேரிப்புற வாழ்வியலும் சாதியத்தை எவ்வாறு கட்டமைத்தது என்பதை, "கண்டி நகரிலுள்ள சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் நிலைமைகள்" என்ற கட்டுரை பதிவுசெய்கின்றது. வேறுபட்ட பிராந்தியம், சாதிகள், சமூகங்களின் ஊடாட்டங்கள் என்பன சாதியத்தின் இயங்குநிலைகளில் எவ்வகையான பாதிப்பினைச் செலுத்தியுள்ளன அல்லது சாதியம் எவ்வாறு இயங்குதன்மையில் வடிவமாற்றம் பெறுகின்றது என்பதைக் கட்டுரை ஆசிரியர்கள் சுட்டிக் காட்டியுள்ளமைக் குறிப்பிடத்தக்கது.

எனவே, இலங்கையில் சாதியப்பாகுபாடு என்ற பொதுத் தலைப்பின் கீழ் இந்நூல் அமைந்திருந்தாலும், குறிப்பிட்ட ஆய்வுப் பரப்பினை வரையறுத்தே அமைந்துள்ளது. சாதியத்தையும், அதன் போராட்ட இயங்குநிலைகளையும் ஒட்டுமொத்த சமூகப் பின்புலத்தில் இந்நூல் பார்க்கவில்லை என்பது சுட்டிக்காட்டத்தக்கது. காலனித்துவம், பின்காலனித்துவம் சார்ந்த நுண்ணரசியலின் சார்புவாதங்கள் ஆங்காங்கே மேலோங்கி இருப்பது கவனத்துக்குரியது. உலகமயமாக்கல் என்ற நுண்ணரசியல், சாதியம் பற்றிப் பொருள் கொள்வதிலும், வாசிப்பதிலும் கூடுதல் ஆதிக்கத்தைச் செலுத்துகின்றது என்பதை இந்நூல் வெளிப்படுத்தி நிற்கின்றது.

பெ. சரவணகுமார், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

எமது பழைய மாணவர்களுள் கடின உழைப்பும், விடாமுயற்சியும், ஆற்றலும், அமைதியும் நிறையப் பெற்றவர்களுள் திரு. பெருமாள் சரவணகுமாரும் ஒருவர் என்பதில் மிகுந்த பெருமிதம் அடைகின்றோம். தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயின்று முதல் வகுப்பில் சித்தியடைந்து தற்பொழுது தற்காலிக விரிவுரையாளராகக் கடமையாற்றுகின்றார். அவர் விரைவில் நிரந்தர விரிவுரையாளராக வேண்டும் என்பதே எமது பேராவலாகும். திரு.பெருமாள் சரவணகுமார் நவீன இலக்கியங்களிலும், திறனாய்வுத் துறையிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். நவீன இலக்கியங்களையும், சஞ்சிகைகளையும் தேடித்தேடிக் கருத்தூன்றிப்படிப்பவர் என்பதை இந்நூலிலுள்ள கட்டுரைகளிலும் அவதானிக்க முடிகின்றது. திரு.பெருமாள் சரவணகுமார் அவர்கள் ஒருபுறம் இளம் விரிவுரையாளராகக் கடமையாற்றிக்கொண்டு மறுபுறம் தமது முதுதத்துவமாணிப் பட்டத்திற்கான ஆய்வு முயற்சிகளிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். அவரது முயற்சிகள் வெற்றி பெறவும், அவர் உயர்வு பெறவும் எனது இதயம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்.

பேராசிரியர் க. அருணாசலம்

பேராதனைப் பல்கலைக்கழகம்



திரு. பெருமாள் சரவணகுமார் ஹட்டன் பிரதேசத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். என்பீல்ட் தமிழ் மகா வித்தியாலயத்தில் தனது பாடசாலைக் கல்வியைப்பெற்றவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் கலைமாணிப் பட்டத்தில் முதல் வகுப்பில் சித்திபெற்று, அத்துறையில், உதவி விரிவுரையாளராகப் பணியாற்றி வருகின்றார். அத்தோடு, கருத்துநிலைத் தெளிவும், பன்முகத் தேடலும், சமூகப் பொறுப்பும், புத்தாக்கச் சிந்தனையும் கொண்டு ஆய்வுத்துறைகளில் ஈடுபட்டும் வருகின்றார். உண்மையில், மலையகத்தில் கல்வி ரீதியான எழுச்சி, மற்றும் சமூக அசைவியக்கம் என்பவற்றுக்கு திரு. பெ.சரவணகுமார் போன்ற இளம் தலைமுறையைச் சேர்ந்த ஆய்வாளர்களின் வருகை நல்லதொரு சமிஞ்சையாக அமைகின்றது. திரு. சரவணகுமார் மலையக இலக்கியத் துறைக்கும், ஒட்டுமொத்தமான தமிழ் இலக்கிய உலகுக்கும் பல புதிய படைப்புகளை வழங்குவார் என்பதை இந்நூல் வெளிப்படுத்தி நிற்கின்றது.

இரா. ரமேஸ்

விரிவுரையாளர்,

சமூகவியற்துறை,

இலங்கை சப்ரகமுவப் பல்கலைக்கழகம்.

ISBN : 955-53167-0-5

9 789555 316705

**Rs. 250.00**

**Designed by : Eswaran's Book Depot & Cyber Villa**
**No. 126/1, Colombo Street, Kandy.**